# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 03 அதிர்வு 29 நவம்பர் 2019 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162



Transco CARGO
CHRISTMAS SHIPPING SCHEDULE

| CUT OFF | SL ARRIVAL |
|---|---|
| NOV 02 | DEC 10 |
| NOV 09 | DEC 17 |
| NOV 16 | DEC 24 |
| NOV 23 | DEC 31 |
| NOV 30 | JAN 07 |
| DEC 07 | JAN 14 |

CAMPBELLFIELD - DANDENONG -
1300 187 267 | TRANSCOCARGO.COM.AU




# பரி மேல் அழகன்


குறைந்த வட்டி வீதத்தில் வீடு வாங்குவதற்கான ஓரே சேவை

$ 2,000 Special refinance rebate to cover your switching costs#

Lowest Rates From 2.84%# p.a.
"Limited time offer"

OPULENT FINANCE | GEARING YOUR FUTURE

M: 0423 272 600 T: (03) 8838 8726

# Subject to Lender Credit Policy, LVR, LMI and other special conditions related to individual Banks' offers.

Australian Credit Licence Number 389087

Waverley Toyota - You'll LOVE us!

TOYOTA




Finance Available!
- Self Employed & ABN Holders
- Student Visa's
- Overseas Licence
- Low Deposit
- New Employment
- New Arrivals




DL11333



All enquires contact Jason Wijeratne on (03) 8544 2288 or 0422 974 499

We speak your language

Oh what a feeling!



ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

OPULENT ACCOUNTANTS | GEARING YOUR FUTURE



# Why Do You Need a good Tax Agent?

TAX TIME 2019

As an individual tax payer or a sole trader, you'll need professional advice to get your tax affairs right from the start and build up a long lasting relationship which will give you benefits not only when you are in the Uni, but when you are out and working in the industry too. Our Finance team can help you with your FIRST HOME when you are ready to buy.

## We can ;

- Help you to claim maximum expenses you are eligible
- Advice and help getting your NEW ABN to start your own business
- Help you to apply for a Tax file number if you still haven't got one
- Help you with log books and information on vehicle expenses
- Help you if you started UBER as part time and,
- Help you with any other taxation or accounting advice you need on going.

நட்புகரமான சேவைக்கு தொடர்பு கொள்ளுங்கள்

**0423 272 600**
**03 8838 8726**

OPULENT ACCOUNTANTS

Office Address
Suite 4, 251, Blackburn Road, (Ent. via Doynton Parade)
Mount Waverley VIC 3149
PO Box 3090 Syndal VIC 3149

E info@opulentaccountants.com.au
W www.opulentaccountants.com.au

Visit Us Online

THE TAX INSTITUTE CHARTERED TAX ADVISER

xero


OPULENT FINANCE
GEARING YOUR FUTURE
Lowest Rates From
2.84%# p.a.
"Limited time offer"
குறைந்த வட்டி வீதத்தில் வீடு வாங்குவதற்கான ஓரே சேவை
FIRST HOME BUYERS
Buy your dream home with just 5% deposit.#
INVESTMENTS PROPERTY LOANS
Free TAX advice to maximise your TAX REFUNDS
DOCTORS, DENTISTS, VETS, ACCOUNTANTS, LAWYERS
Don't pay mortgage insurance up to 90% LVR #
AUSTRALIA WIDE SERVICE
VIC, NSW, QLD, WA, SA, NT, ACT, TAS
நட்புகரமான சேவைக்கு தொடர்பு கொள்ளுங்கள்
$ 2,000
Special refinance rebate to cover your switching costs #
M: 0423 272 600
T: (03) 8838 8726
Take CASH OUT to pay the deposit on your next house.
No Savings? No worries, buy with family guarantee.
Consolidate your personal loans & credit cards.
OPULENT FINANCE
Office Address
Suite 4, 251 Blackburn Road
Mount Waverley VIC 3149
(Near the Syndal Station)
Visit Us Online
Email: info@opulentfinance.com.au | Web: www.opulentfinance.com.au
# Subject to Lender Credit Policy, LVR, LMI and other special conditions related to individual Banks' offers.
Australian Credit Licence Number 389087

# தமிழர் அரசியலுக்கு தொடர்ந்தும் "காய்ச்சல்" நிவாரணியாகுமா சிங்களத்தின் "பனடோல்"

● ஆர்.சனத்

மழைக்காலத்தில் ஐஸ்பழம் கேட்டு அடம்பிடிக்கும் சிறார்களுக்கு குச்சிமிட்டாய் வாங்கிக்கொடுத்து சமாளிப்பதுபோல், அரசியல் தீர்வுக்காக காத்திருக்கும் தமிழ் மக்களுக்கு ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வைக் காண்பித்து வாக்குவேட்டை நடத்துவதற்காக சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களும் திட்டம் தீட்டியுள்ளனர்.

நவம்பர் 16 ஆம் திகதி நடைபெறப் போகும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி நடைபோட்டு அரியணையேறுவதற்காக சஜித் பிரேமதாச, கோட்டாபய ராஜபக்ச ஆகியோர் மக்களுக்கு பல்வேறு உறுதிமொழிகளை வாரி வாரி வழங்கிவருகின்றனர். குறிப்பாக தேர்தல் அறிக்கையில் பட்டியலிடப்படாத பல விடயங்களும் வாக்குறுதிகளாக வழங்கப்பட்டுள்ளன.




தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அனைத்து பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு - நாட்டில் தேனும், பாலும் பாய்ந்தோடும் என்ற விம்பத்தை தேர்தல் அறிக்கையூடாக இரு வேட்பாளர்களும் ஏற்படுத்தியுள்ளனர். எனினும், இவற்றில் எது நடைமுறைக்கு சாத்தியம், வழங்கிய வாக்குறுதிகள் எவ்வாறு நிறைவேற்றப்படும் என்பதற்கான வழிமுறையை ஆராய்வதைவிடுத்து, தென்னிலங்கையிலுள்ள பெரும்பாலான மக்கள் வேட்பாளர்களுக்காக வெற்றிக்கோஷம் எழுப்புவது வேதனைக்குரிய விடயமாகும்.

மறுபுறத்தில், வடக்கு - கிழக்கிலுள்ள தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக பார்க்கப்படும் இலங்கை தமிழரசுக் கட்சி தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் நிபந்தனைகளுக்கு அப்பால் நம்பிக்கை அடிப்படையில் தமக்கே உரிய வழமையான பாணியில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருக்கு நேசக்கரம் நீட்டியுள்ளது.

### இனப்பிரச்சினைக்கு தீர்வு என்ன?

தேசிய பாதுகாப்பை முன்னிலைப்படுத்தி சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்சவால் முன்வைக்கப்பட்டுள்ள தேர்தல் அறிக்கையில் அனைத்து தரப்புகளையும் திருப்திப்படுத்தும்வகையில் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், வரி குறைப்புத் திட்டமும் விசேட அம்சமாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் நலன்கருதி அபிவிருத்தியை முன்னிலைப்படுத்தி உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் - தமிழ் மக்களின் மனங்களில் ஏற்பட்டுள்ள வடுக்களை குணப்படுத்துவதற்கான சிறப்பான திட்டங்கள் இல்லை என்றே அரசியல் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

போர்க்குற்றச்சாட்டுக்கு உள்ளாகி சிறையில் இருக்கும் படையினரை விடுவிக்கும் தனது திட்டத்தை நியாயப்படுத்துவதற்காக தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற உத்தரவாதம் கோட்டாவால் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு திட்டம் என்ன என்பதை உரிய வகையில் கோட்டாபய விளக்கவில்லை. அதுமட்டுமல்ல அது தொடர்பில் வெளிப்படையாக கருத்துகூறவும் மறுத்துவருகின்றார். வடக்கில் நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களின் போதுகூட ராஜபக்சக்கள் இது சம்பந்தமாக வாய்திறக்கவில்லை.

அதாவது, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அதுவும் வடக்கு - கிழக்கு இணைப்பு இன்றி அமுல்படுத்துவதே சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தீர்வு திட்டமாக இருக்கிறது. முன்னர் 13 பிளஸ் எனக்கூறிய மஹிந்தகூட 13 என்ற மீளா வட்டத்துக்குள்ளேயே சுழன்று கொண்டிருப்பது தமிழர்கள்மீதான அவர்களின் அக்கறையை அம்பலப்படுத்துகின்றது.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளை கடுமையாக விமர்சிக்கும் விமல்வீரவன்ஸ, உதயகம்மன்பில போன்றோர் கோட்டா அணியில் பிரசார பீரங்கிகளாக செயற்பட்டுவருகின்றனர். கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் தலைவர்களும் அவர்கள் பக்கமே நிற்கின்றனர்.

"தமிழர்களின் ஆயுதப்போராட்டம் முள்ளிவாய்க்காலுடன் நிறைவடைந்து விட்டது. இனி அவர்களுக்கு எதுவும் தேவையில்லை" - என்பதே இத்தகையவர்களின் ஒருமித்த கருத்தாக இருக்கின்றது.

### பிழைத்துபோன கோட்டா வியூகம்!

இந்நிலையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உட்பட ஐந்து தமிழ்க் கட்சிகள் இணைந்து முன்வைத்த 13 அம்ச கோரிக்கைகளை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி ஐக்கிய தேசியக்கட்சிக்கான சிங்கள - பௌத்த வாக்குகளையும் தம்பக்கம் இழுக்க கோட்டா வியூகம் வகுத்திருந்தார்.

இதற்காக பௌத்த பிக்குகள் களமிறக்கப்பட்டதுடன் கோட்டாவுக்கு விசுவாசமான ஊடகங்களும் "தீயாக" வேலை செய்தன. 13 கோரிக்கைகளையும் சஜித் பிரேமதாச நிச்சயம் ஏற்பார், அவ்வாறு நடைபெற்றால் சிங்கள - பௌத்த மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பலை உருவாகும் என்பதே கோட்டா தரப்பின் கணிப்பாக இருந்தது.

எனினும், இதை அறிந்துவைத்திருந்த சஜித் 13 அம்ச கோரிக்கைகளை நிராகரித்ததுடன், தேசப்பற்றை முன்னிலைப்படுத்தி உரைகளை நிகழ்த்தினார்.

மறுபுறத்தில் கூட்டமைப்பும் சஜித்துக்கு நிபந்தனையற்றப ஆதரவை வழங்கியுள்ளது. இதனால், கோட்டாவின் வியூகம் புஷ்வாணமாகியது.

### சஜித்தின் தேர்தல் அறிக்கை

தமிழ்க் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட 13 அம்ச கோரிக்கைகளை சஜித் நிராகரித்திருந்தாலும் தமிழர்களுக்கான தனது தீர்வு திட்டங்கள் எவை என்பதை தெளிவாக விவரித்துள்ளார். ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்பதை பகிரங்கமாக கூறியுள்ளார்.

பிளவுபடாத - பிரிக்க முடியாத நாட்டுக்குள் அதிஉச்ச அதிகாரப் பகிர்வு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் அலுவலகத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குதல், குடிப்பரம்பலில் மாற்றம் இடம்பெறாது போன்ற உத்தரவாதங்களை சஜித் வழங்கியுள்ளார்.

தமிழர்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் சமஷ்டியை நோக்கி நகர்வதற்கு சஜித் பிரேமதாச தயாரில்லை என்பதுடன் போர்க்குற்ற விசாரணையை நடத்துவதற்கும் பச்சைக்கொடிகாட்ட மாட்டார் என்பது தெளிவு.

இருந்தும் கோட்டாபய ராஜபக்சவின் தேர்தல் விஞ்ஞாபனத்துடன் ஒப்பிடுகையில், 'ஆலையில்லாத ஊருக்கு இலுப்பை பூ சக்கரை'என்பதுபோல் ஒப்பீட்டளவில் சஜித்தின் தேர்தல் அறிக்கையில் - தமிழர் நலன்சார் விடயங்களில் முழுமையாக திருப்திகொள்ள முடியாவிட்டாலும் - இடைக்கால நிவாரணத்தை பெறும் வகையில் யோசனைகள் உள்ளன என்பதையும் நாம் ஏற்றாகவேண்டும்.

இதன்காரணமாகவே சஜித் பிரேமதாசவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதாக அறிவித்திருக்கிறது இலங்கை தமிழரசுக்கட்சி. இதற்கு கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளும் ஒப்புதல் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாடுகள்மீது தமிழ் மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளமை உண்மையே. எனினும், தமிழர்களின் அடையாளமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பார்க்கப்படுவதால் அரசியல் சமரில் அக்கூட்டணியை தோற்கடிக்ககூடாது என்று தமிழர்கள் கருதுகின்றனர். இதன் காரணமாகவே கூட்டமைப்புக்கு வாக்குகளை வழங்கி வருகின்றனர். எனினும், கடந்தகாலங்களில் முக்கியமான கட்டங்களில் கூட்டமைப்பு காத்திரமான முடிவுகளை எடுக்கவில்லை என்பது கசப்பான உண்மையாகும். எதிர்காலத்திலும் இந்நிலைமை தொடருமானால் தமிழர்களின் அரசியல் இருப்பு கேள்விக்குறியாகிவிடும்.

சஜித் தனது தேர்தல் அறிக்கையில் முக்கிய உறுதிமொழியை வழங்கியிருந்தாலும் பெரும்பான்மையின மக்களை பகைத்துக் கொள்ளும் வகையில் ஒருபோதும் அரசியல் முடிவெடுக்கமாட்டார். மகாநாயக்க தேரர்களிடம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தின் முதல் பிரதியை கையளித்து அதனை உறுதிப்படுத்திவிட்டார்.

சிலவேளை இத்தேர்தலில் கோட்டாபய ராஜபக்ச வெற்றிபெற்றால் தமிழர்களின் நிலை என்ன? அதற்கான மாற்றுபொறிமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உள்ளதா? அல்லது தந்தை செல்வா கூறியது போல், தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமா?

எது எப்படியோ இலங்கையின் எதிர்காலத்தை தீர்மானிக்கபோகும் மிகமுக்கிய தேர்தல் இதுதான். இந்தியா உட்பட மேற்குலக நாடுகள் சஜித் அரியணையேறுவதையே விரும்புகின்றன.

சீனா உள்ளிட்ட சில நாடுகள் கோட்டாவின் ஆட்சியை எதிர்பார்த்து வழிமீது வழிவைத்து காத்திருக்கின்றன.

எனவே, அனைத்துலக சமூகத்தை மட்டுமே முழுமையாக நம்பிக்கொண்டிருக்காது மாற்று வழிமுறைகள் - பொறிமுறைகள் - சம்பந்தமாகவும் தமிழ்க் கட்சிகள் சிந்திக்க வேண்டும்.


MKS
MKS Spices'n Things
Finest Quality Guaranteed
We bring the authentic taste of spices and cooking ingredients to you, find out more...
GROCERIES
BOLLYWOOD ENTERTAINMENT
DINE IN
ASHWOOD
382 Warrigal Road
9885 9932
DANDENONG
23 Pultney Street
9701 3165
EPPING
1/88 Cooper St
9424 9162
PRESTON
258 High Street
9416 9011
St ALBANS
276 Main Road East
9366 4141
www.mks.net.au

எதிரொலி
மெல்பேர்ண் ETHIROLI
குரல்:03 அதிர்வு: 29 நவம்பர் 2019 தொ.பே:1800 960162

# எங்கள் ஹீரோக்கள்

தமிழர்கள் தங்களது பண்பாட்டின் வழியாக யார் யாரை தங்களது ஹீரோக்களாக முன்னிறுத்துவது என்பது தொடர்பில் காலத்துக்கு காலம் பல மாறுதல்களின் ஊடான பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த ஹீரோக்கள் தொடர்பான விம்பங்கள் தலைமுறைகளின்வழியாக மாறுதலடைந்து வந்திருப்பதை கடந்த ஐம்பது ஆண்டு கால வராற்றை திரும்பி பார்த்தால் தெரியும்.

முன்னொரு காலத்தில் கற்றவர்களுக்கு மாத்திரம் பெருஞ் சிறப்பை வழங்கி அவர்களை தங்களது உதாரண புருஷர்களாக கொண்டாடியது எங்களது சமூகம். அவர்கள் எந்த தொழிலுக்கு சென்றாலும் அது அவர்களுக்கான கூடுதல் சிறப்பாக கருதப்பட்டது. உதாரணமாக, நன்கு படித்தவர்கள் அரசியலுக்குள் நுழைந்த போதெல்லாம், அவர்களது அரசியல் அறிவுக்கு அப்பால் அவர்களின் கல்வி மிகப் பெரியதொரு வசீகரத்துக்கு உட்பட்டது. அந்த திறமையை கொண்டவர்கள் கொண்டாடப்பட்டார்கள். அப்போதெல்லாம், சினிமா மோகமும் கலை வழியான செயற்பாடுகளுக்கும் மக்கள் மத்தியில் மிகப்பெரிய நாட்டமிருந்தபோது கதாநாயக வழிபாடுகள் வரையான பெரிய பெரிய பின்பற்றுதல்கள் அவர்களை பெரியளவில் ஆட்கொண்டு விடவில்லை.

பிற்பட்ட காலத்தில், ஆயுதப்போராட்டம் ஆரம்பித்தபோது ஈழத்தமிழர்கள் மத்தியில் போராளிகள் மிக்பெரிய ஹீரோக்களாக கொண்டாடப்பட்டார்கள். அந்த வியப்பு இன்று வரை இருக்கின்றபோதும் – அவர்களது சாதனைகள் சாகாவரம் பெற்ற பெரும் சகாப்தங்களாக வாழ்கின்றபோதும் – ஆயுதப் போராட்டம் நடைபெற்று வந்த முப்பதாண்டு காலப்பகுதியில் ஈழத்தமிழர்கள் மத்தியில் அந்தப்போராளிகளே மிகப்பெரும் ஜனவசியம் கொண்டவர்களாக கருதப்பட்டார்கள். அந்த மனோரஞ்சிதப் பார்வைதான் அவர்களுக்கு பின்னால் பல இளைஞர்கள் திரண்டு சென்றதற்கும் வழிவகுத்தது. அப்போதும்கூட – சமாந்தரமாக – சினிமா மோகமும் வேறுபல நட்சத்திரங்களின் மீதான ஈர்ப்புக்களும் ஈழத் தமிழர்களின் மத்தியில் இருந்தது. ஆனால், அவை எல்லாவற்றையும் மீறி போராளிகளின் மீதும் போராட்டத்தின் மீதும்தான் மக்களுக்கு ஒரு வழிபாட்டு மனநிலை இருந்தது. அப்போது, கல்வியில் சிறந்தவர்களை போதுமானளவு ஹீரோக்களாக பார்த்துக் கொண்டபோதும் அவர்கள் மிகப்பெரிய ஈர்ப்புக்குரியவர்களாக இந்தக் காலப்பகுதியில் இருக்கவில்லை என்றே கூறலாம்.

இன்று போராட்டம் மௌனிக்கப்பட்ட நிலையில் சினிமா மோகமும் அதன் வழியிலும் வேறு எவ்வழியிலும் பிரபலமடைவது என்பது ஹீரோத்தனத்தை அறுவடை செய்து கொள்கின்ற மிக முக்கிய திருப்பணிகளாக காணப்படுகிறது. எந்த வழியில் செல்கிறோம்டிஎன்பதெல்லாம் கணக்கில்லை, எப்படி நீங்கள் சமூகவலைத்தளப் பிரபலமாக உருவெடுக்கிறீர்களோ உங்களை பின் தொடர்வதற்கு ஒரு கூட்டம் தயாராகிவிடுகிறது.பேஸ்புக் ஸ்டார், யூ டியூப் ஸ்டார், இன்ஸ்டக்ராம் ஸடார் என்று ஏகப்பட்ட வழிமுறைகள் இதற்கு பாதைஅமைத்துக்கொடுக்கின்றன. இவற்றின் வழியாக ஹீரோக்களாவதற்கு நீங்கள் நிச்சயம்திறமையுள்ளவராகத்தான் இருக்கவேண்டும் என்றில்லைஎன்ற ட்ரெண்டும் உருவாகி அது வெற்றிகரமாக பல நாயக– நாயகிகளை குட்டி போட்டிருக்கிறது.

இவ்வாறான மர்மமும் இருண்மையும் நிலவும் ஒரு காலப் பகுதியில், அண்மையில் ஈழத் தமிழர்களின் மத்தியிருந்து எத்தனையோ படித்தவர்களை உருவாக்கி, உலகமெல்லாம் விதைத்துவிட்ட ஒப்பற்ற ஆசான் குணசீலன் அவர்களை அழைத்து ஆஸ்திரேலிய சமூகம் கொண்டாடியிருக்கிறது. அவரிடம் படித்து வைத்தியர்களாகவும் பல உயர் பதவிகளிலும் இருப்பவர்கள் உட்பட அவரது மாணவர்கள் ஆஸ்திரேலியாவின் சகல மாநிலங்களுக்கும் அவரை அழைத்து கௌரவித்திருக்கிறார்கள். தங்களது வாழ்வினை மேலான இடத்துக்கு உயர்த்திவிட்ட அவரது சேவைக்கு மதிப்பளித்திருக்கிறார்கள். மிகுந்த நெகிழ்ச்சி மிகுந்த தருணங்களாக அமைந்த அவரது பிரசன்னமும் அவரைக் கொண்டாடிய நிகழ்வுகளும் மிகப் பெரியதொரு செய்தியை ஓங்கிச் சொல்லியிருக்கிறது.

அதாவது –

எங்கள் மத்தியில் நிலையான ஹீரோக்கள் தொடர்ந்தும் இருந்து கொண்டுதானிருக்கிறார்கள். அவர்களை நாங்கள் அடையாளம் காணும் ஆற்றலை இழந்து விடாமல்தான் இருந்துகொண்டிருக்கிறோம்.

# அகதிகளின் வலி சுமந்த வாழ்க்கை

இயகத்தில் எதிர்கொண்ட அடக்குமுறைகளிலிருந்து தப்பித்து படகில் ஆஸ்திரேலியாவுக்கு வந்து அகதி அந்தஸ்து கோரியபலர் சமூகத்துடன் இணைக்கப்பட்ட பின்னரும்கூட நிரந்த வாழ்கையை வாழமுடியாமல் அல்லல்படுகிறார்கள். அவர்களின் போராட்ட வாழ்க்கையை "அகதிகளின் வலிசுமந்த வாழ்க்கை" என்ற பகுதி ஊடாக எதிரொலியில் வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றோம்.

அந்தவகையில் இம்முறை திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் - சேனையூர்பிரதேசத்தைசேர்ந்தசிவலிங்கம் காளிக்குட்டிஎன்றகுடும்பஸ்தரைசந்தித்தோம்.

"நான் 2012 ஆம் ஆண்டு நாட்டைவிட்டு வெளியேறவேண்டிய நிலை, அங்கு இயங்கிய இனந்தெரியாத ஆயுதக்குழுவினரால் ஏற்படுத்தப் பட்டது. திருகோணமலைநகரில் சொந்தமாகநகைக்கடையைநடத்தி வந்தேன். நல்லவசதியாகத் தான் வாழ்ந்தேன். எந்தவொரு பொருளாதார நெருக்கடியும் எனக்கு ஏற்படட்டில்லை. இந்த குறுக்கால போனவர்கள் (இனந்தெரியாத ஆயுதக்குழுக்கள்) என்னை நிம்மதியாக வாழ விட்டிருந்தால் நான் இன்றும் என் மனைவி, பிள்ளைகளோடு வாழ்ந்திருப்பேன" - என்றுகண்களில் ஈரம் எட்டிபார்க்கும் வண்ணம் தனது வலியைச் சொல்லதொடங்கினார்

"நான் ஆஸ்திரேலியாவுக்கு தனியாகத்தான் வந்தனான். தடுப்புமுகாமில் இருந்தபோது எனது குடும்பத்துடன் பேசியிருக்கின்றேன். இடையில் குறிப்பிட்டகாலம் என்னால் அவர்களைத்தொடர்புகொள்ளமுடியவில்லை. சரிஎன்னதான் நடந்தது என்று அக்கம்பக்கம் விசாரித்துப்

**"படகில் வந்தவர்களுக்கு பணம் மட்டும்தான் குறிக்கோள் என்று இங்கிருக்கும் சிலர் கருதுகின்றனர். அதற்காகத்தான் படகேறி வந்தோம் என்றும் நினைக்கின்றனர். குடும்பத்தைத்தொலைத்தும் பிள்ளைகளைப் பிரிந்தும் அனாதையாக வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மைப் போன்றவர்களின் வலிகளுக்கு முன்னால் பணமோ பகட்டான வாழ்க்கையோ பொருட்டாகாது"**



பார்த்தேன். அவர்களுக்கும் ஏதும் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்றுதெரியாமலே என் தடுப்பு காலம் முடிவுற்றது.

"விடுவிக்கப்பட்டு இரண்டு மாதங்களின் பின்னர் - 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதிதான் - என் குடும்பம் தொடர்பானதகவல் கிடைத்தது. அன்றையதினம் எனது மனைவியின் சகோதரியிடம் இருந்து தொலைபேசி அழைப்புவந்தது. ஆஸ்திரேலியாவுக்கு படகில் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது படகு கவிழ்ந்து மனைவியும் இரண்டுபிள்ளைகளும் செத்துப்போட்டார்கள் என்றும் எனது மூத்தமகள் மட்டும் தப்பிவிட்டார் என்றும் அவசொன்னார்" - எனக் கூறிய காளிக்குட்டிமீண்டும் பேச சில நிமிடங்கள் எடுத்துக்கொண்டார்.

ஏன் ஆபத்தான பயணத்தைத் தொடர அவர்கள் முடிவெடுத்தார்கள் என்றகேள்வியோடுஅவரிடம் பேச முனைந்தோம் -

"இந்தக் கேள்வியைதான் நான் எனது மனைவியையும் இரண்டு குழந்தைகளையும் இழந்தபின்னர் என் மூத்த மகளிடமே வினாவினேன். 'ஏனம்மா வந்தீர்கள்' என்று கேட்டேன். அதற்குஅவள் 'நான் பாடசாலை விட்டு வீடு செல்லும்போது யாரோ உங்களைப் பற்றிக் கேட்டு மிரட்டிவிட்டு பிறகு வீடு வரை வந்து அம்மாவிடம் சத்தமாக கதைத்தார்கள். அதன் பின்னரே, எங்களை அம்மா கூட்டிக் கொண்டுவெளிக்கிட்டா' என்றுசொன்னாள்.

"அப்போதுஎன் பிள்ளைக்கு 13 வயதுதான். அதன்பின்னர்,என் பிள்ளையிடம் இன்று வரை நான் அதை பற்றி விசாரித்தது கிடையாது. இப்போது என் பிள்ளைக்கு 19 வயது ஆகிவிட்டது. தனக்கு முன்பாகவே தன் சின்ன தம்பியையும் சின்ன தங்கையையும் அம்மாவையும் தொலைத்த வலி என் பிள்ளைக்கு இப்போதுதான் புரிகிறது. இவற்றையெல்லாம் யோசித்துதுடிக்கும் என் பிள்ளையை அருகில் இருந்து தேற்றுவதற்கு நான் அவளுடன் இல்லை. தொலைபேசியில் பேசும்போது கலங்கும் என் பிள்ளையின் மனதை தேற்றுவதற்காகவே என்னென்னவோ பேசிச் சமாளிக்கின்றேன்."

"என் பிஞ்சுமகள் 6 வருடங்களுக்கு மேலாக அனாதையாக பிற நாட்டில் - இலங்கையில் இல்லை - வாழ்ந்துகொண்டிருக்கிறாள். இருந்த உறவுகளை தொலைத்த பின்னர், என்னுடையபிள்ளையைக்கூட வளர்க்கமுடியவில்லை. நான் உயிரோடு இருந்தும் அனாதையாகவே என் பிள்ளைவாழுது. எங்களுக்குள் இருக்கும் இவ்வாறானகதைகளைக் கேட்கக்கூட யாரும் இல்லை"

"படகில் வந்தவர்களுக்கு பணம் மட்டும்தான் குறிக்கோள் என்று இங்கிருக்கும் சிலர் கருதுகின்றனர். அதற்காகத்தான் படகேறிவந்தோம் என்றும் நினைக்கின்றனர். குடும்பத்தைத் தொலைத்தும் பிள்ளைகளைப் பிரிந்தும் அனாதையாக வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மைப் போன்றவர்களின் வலிகளுக்குமுன்னால் பணமோ பகட்டான வாழ்க்கையோ பொருட்டாகாது"

"இந்தநாட்டில் நான் கோரிய உயிர்ப் பாதுகாப்பை அளித்துள்ளார்கள். அதுவும் தற்காலிமாகத்தான். அது முடிய என்ன நடக்கும் என்று தெரியாது. இனி நாட்டுக்கு அனுப்பினால் ஆயுததாரிகளின் துன்புறுத்தலைத் தாண்டி, நான் அங்கு வாழும்போது என்னோடிருந்த மனைவி, பிள்ளைகளின் நினைவுகளே என்னைக் கொன்றுவிடும்"

"இங்கு என்னதான் வேலை செய்தாலும் மனம் அவர்களைச் சுற்றிச்சுற்றியே வருகின்றது. காலையில் வேலைக்குப் போகும்போதும் அவர்களின் படங்களைத்தான் பார்த்து செல்கின்றேன். வேலையால் வரும் போதும் அவர்களையே பார்க்கிறேன். வலிகளைச் சொல்லியாற யாரும் இல்லை. பேச்சுத் துணைக்குக்கூட யாரும் இன்றிவாழ்கிறேன். என் மகளைப் பார்க்கவேண்டும். அவளுடன்சேர்ந்துவாழவேண்டும். இதுவேஎன் தற்போதையசிந்தனை. பிள்ளையுடன் சேர்ந்தபின்னர்தான் நித்திரைகூடஒழுங்காகவரும்.

"ஆஸ்திரேலியாவில் உயிரை மட்டும் பாதுகாப்பாக வைத்திருக்கின்றோம். ஆனால் நடைபிணமாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்" - என்று சொல்லிப்பெரு மூச்செறிந்தார்.

■

# Sai Shree Foods
Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

## REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




**If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.**

**We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)**

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

**விடுதலைப்புலிகள் - ஸ்ரீலங்கா - சர்வதேசம்**

# பந்தாடப்பட்ட பலாலியின் வரலாற்று வகிபாகம்





பாதுகாப்பு ஆய்வாளர்
கருணாகரன்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும்இடையே நோர்வே நாட்டு அனுசரணையுடன் இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்கள் இடைநடுவே முறிவடைந்து, இருதரப்பும் முழுமையான யுத்தத்தில் ஈடுபட இரண்டு அடிப்படைக் காரணங்கள் பிரதானமானவை.

இதில் ஒன்று வோசிங்டனில் இடம்பெற்ற இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கும்,

மீள்கட்டுமானப் பணிகளுக்குமான உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு. மற்றையது, பலாலி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான இலங்கை இராணுவத்தின் கடும்போக்கான நிலைப்பாடு.

புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாணத் தளபதி கருணா அம்மான் புலிகள்

அமைப்பிலிருந்து பிரிந்து சென்றமை, முன்னாள் வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன்

கதிர்காமர் படுகொலையைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் புலிகள் அமைப்பின் மீதான தடை போன்றவையும் சமாதான முயற்சிகள் முறிவடைய முக்கியமான காரணிகளாகப் பார்க்கப்பட்டாலும், முன்னர் குறிப்பிட்ட இரண்டு காரணங்களேமுதலில் சமாதான முயற்சிகளுக்கு வேட்டு வைத்த இரண்டு முக்கியமானபிரச்சனைகளாகும்.

### தவறிப்போன இராஜதந்திரம்

நோர்வே அனுசரணையுடனான அரசு-புலிகள் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச ஊக்குவிப்பினையும், ஆதரவினையும், அவ்வப்போது அழுத்தங்களையும் வழங்கும் நோக்கில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமை நாடுகளாக, அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை செயற்பட்டு வந்தன. சமாதான முயற்சிகளில் ஏற்படும் முன்னேற்றத்திற்கேற்ப, அந்த முயற்சிகளின் நிதிசார் பெறுபேறுகள் போரினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையச் செய்வதனை உறுதிசெய்து, உள்ளூரில் மக்களிடையே சமாதானச்

செயற்பாடுகளில் நம்பிக்கை கொள்ள வைப்பதும், பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள இரு தரப்பின் மீது ஒருவகையான அழுத்தத்தினைப் பிரயோகிப்பதுமே இந்த இணைத் தலைமை நாடுகளின் முக்கிய பங்களிப்பாக இருந்துவந்தது.

பேச்சு மேசையில் அரசு - புலிகள் என்ற இரண்டு தரப்பும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சம அந்தஸ்துடன் அணுகப்படவேண்டும் என்ற புலிகளின்

முன்நிபந்தனையினை அனைத்துத் தரப்பும் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையிலேயே பேச்சுக்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன.

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் முதலாவது டோக்கியோ மாநாட்டினைத் தொடர்ந்து இரண்டாவது மாநாட்டினை வோசிங்டனில் நடாத்த அப்போதும் பிரதமராக இருந்த ரணில் விக்கிரசிங்கவின் மிகவும் நெருங்கிய அமைச்சரவை அமைச்சர் மிலிந்த மொறகொட நயவஞ்சகத் திட்டம் போட்டார். தனக்கும் அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளராக அப்போது கடமையாற்றிய ரிச்சர்ட் ஆர்மிடேர்ஜூக்கும் இடையில் நிலவிய மிகநெருக்கமான நட்பினைச் சாதகமாகப் பயன்படுத்திய மிலிந்த மொறகொட, தனது திட்டத்தினை நிறைவேற்றினார்.

அதாவது. விடுதலைப் புலிகள் அமைப்பைப் பேச்சு மேசையில் சம அந்தஸ்துடன் கூடியபங்காளிகளாக ஏற்றுக்கொள்ள இலங்கை, இந்திய அரசுகளுக்கு மட்டுமல்ல, சிங்கள மேலாதிக்கக் குணம்கொண்ட மிலிந்த மொறகொடவிற்கும் கிஞ்சித்தும் விருப்பமில்லை. ஆகவே பேச்சு மேசையில் மிகவும் சாதுரியமாகவும், வீரியமாகவும் நடந்து அரச தரப்பிற்கு சிம்மசொப்பனமாக விளங்கிய புலிகளின் தலைமைப் பேச்சாளரும், அரசியல் தத்துவஞானியுமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திற்கும், புலிகள் தரப்பிற்கும் பாடமொன்றைப் புகட்ட தான் றோன்றித் தனமாகச் செயற்பட்ட மிலிந்த மொறகொட, இணைத்தலைமை நாடுகளின் இரண்டாது உதவி வழங்கும் மாநாடு வோசிங்கடனில் நடத்தப்படவேண்டுமென்று விடாப்பிடியாக நின்றுகொண்டார்.

இதன் உள்நோக்கமெல்லாம், அமெரிக்காவில் புலிகள் தடைசெய்யப்பட்ட ஒரு அமைப்பாக இருக்கின்ற காரணத்தினால், இந்த மாநாட்டிற்கு புலிகள் தரப்பிலிருந்து யாரும் கலந்துகொள்ளமுடியாத ஒரு நிலை ஏற்படும். அவ்வாறான சூழலில், புலிகள் பேச்சு மேசையில் சமதரப்பு என்ற அந்தஸ்தினை இழந்துவிடும். அது எதிர்காலப் பேச்சுகளில் சிங்கள மேலாதிக்கத்தினை புலிகள் மீது திணிப்பதற்கும், அவர்களை சர்வதேச ரீதியில் ஓரங்கட்டுவதற்கும் ஒத்தாசையாக அமைந்துவிடும் என்பதே அவரின் நோக்கமாக இருந்தது. அத்துடன் அமெரிக்கா என்றால் புலிகளும் வாலைச் சுருட்டிக்கொள்வார்கள் என்றும் மொறகொட தப்புக்கணக்குப் போட்டார்.

ஆனால், இந்த விடயத்தில் கறாராக இருந்த கலாநிதி பாலசிங்கம், அரசு ஒரு தலைப்பட்சமாக பேச்சுக்களில் இருந்து விலகிக் கொள்ளும் நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபடுகிறது என்றும், புலிகளும் தங்களது நிலைப்பாட்டினை உடனடியாக மறுபரிசீலனை செய்யவேண்டியிருக்கும் என்றும் எச்சரித்திருந்தார்.

### பலாலி விவகாரம்

இனிப் பலாலிக்கு வருவோம். பலாலி முப்படைத்தளத்துடன் அமைந்துள்ள விமான நிலையம் அண்மையில் பலாலி சர்வதேச விமானநிலையமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. ஆசியப் பிராந்திய விமானநிலையங்களில் ஒன்றாகவே இது பெரும்பாலும் இயங்கவிருக்கிறது. இதன்மூலம் யாழ் பிராந்தியத்திற்கும், ஒட்டுமொத்த இலங்கைக்கும் கிடைக்கவிருக்கும் பொருளாதார, வர்த்தக மற்றும் சுற்றுலாத்துறை சார் நன்மைகள் அளப்பரியன என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

ஆனால், இதே பலாலி முப்படைத் தளமும், அதியுயர் பாதுகாப்பு வலயமும் வரலாறாகிப்போயுள்ள ஈழப்போரியலில் விடுதலைப் புலிகளுக்கும், அரசபடைகளுக்கும் இடையிலான படைச் சமவலுப் பரீட்சையில் மிகவும் கேந்திர மூலோபாய முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதனை மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

ஈழப் போரின் ஆரம்ப கட்டத்தில், விடுதலைப் புலிகளின் ஆளணி மற்றும் ஆயுதப் பருமன்சற்றேவிரிவடைந்துகொண்டிருப்பதனையும், அதனால் வடக்கே பலாலி படைத் தளத்தை மையமாகக் கொண்டிருந்த முப்படைகளின் இருப்பிற்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தலையும் இராணுவப் புலனாய்வாளர்கள் ஊடாக ஊகித்து உணர்ந்துகொண்ட ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா பலாலியில் கூட்டுப்படை நடவடிக்கை கட்டளைப் பீடம் ஒன்றை1985 பெப்பிரவரி மாதம் உருவாக்கியிருந்தார்.

முப்படைகளின் தளபதிகளினதும் கட்டளைப் பணியமாக விளங்கும் இதன் முதலாவது தலைமை தளபதியாக ஜெனரல் புல் வீரதுங்க நியமிக்கப்பட்டிருந்தபோதும், சில வாரங்களில் அவர் கனடாவிற்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டமையைத் தொடர்ந்து அந்த இடத்திற்கு ஜெனரல் சிரில் ரணதுங்க நியமிக்கப்பட்டார்.

இவரின் தலைமையிலேயே புலிகளிடமிருந்து முதலில் வடமராட்சி வல்வெட்டித் துறையையும்,பின்னர் வடக்கின் ஏனைய பாகங்களையும் முற்றாக விடுவிக்கும் நோக்கில் பலாலியிலிருந்து முதலாவது படை நடவடிக்கையான "ஒப்பிரேஷன் லிபரேஷன்" 1987 மே 26 அன்று நன்கு திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த இராணுவ நடவடிக்கையின் உடனடி நோக்கமெல்லாம் பலாலியின் பாதுகாப்புஎல்லைகளை விஸ்தீரணம் செய்து அதனை உறுதிப்படுத்துவதாகும்.

இந்த நடவடிக்கையின்போது வடமராட்சியின் பெரும்பாகங்களும், இடக்காடு, வளலாய், தோலகட்டி, உள்ளிட்ட பெரும் பிரதேசங்களை படையினர் கைப்பற்றியதும், பின்னர் நெல்லியடி மகா வித்தியாலத்தில் நிலைகொண்டிருந்த படைத்தளம் மீதான கப்டன் மில்லரின் கரும்புலித் தாக்குதலும், அதனைத் தொடர்ந்த இந்திய-இலங்கை ஒப்பந்தமும் ஈழப் போர் வரலாற்றில் விரியும் ஆரம்ப அத்தியாயங்கள்.

### பூநகரி இராணுவ முகாம் தாக்குதலும் பலாலி மீதான அழுத்தமும்

1993 நவம்பர் மாதத்தில் பூநகரி இராணுவ முகாமினை விடுதலைப் புலிகள் தாக்கியழித்தபோது பலநூற்றுக்கணக்கான படைகள், நீண்டதூர ஆட்டிறிகள் உள்ளிட்ட பெருந்தொகையிலான ஆயுதங்கள் புலிகளால் அள்ளிச் செல்லப்பட்டன. இவற்றுள் நீண்டதூர ஆட்லறி எறிகணை இயந்திரங்களைப் புலிகள் கைப்பற்றியமை அதற்குப் பின்னரான காலப்பகுதியில் இடம்பெற்ற படைநடவடிக்கைகளின்போது அரச படையினருக்கு பெருந்தலையிடியாக விளங்கியது மாத்திரமன்றி, வடக்கே குறிப்பாக பலாலியில் படையினரின் இருப்பிற்கே பெரும் அச்சுறுத்தலாக விளங்கியிருந்தது.

படையினரின் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளிலிருந்து பல மைல்கள் உட்பறமாக அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருந்த பலாலி படைத்தளத்திற்குள் படையினர் பாதுகாப்பு பங்கர்கள், அகழிகள் அமைத்து இருக்கவேண்டிய ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். பலாலி முப்படைத்தளத்தில் அமைந்திருந்த வடபிராந்தியக் கட்டளைத் தலைமையக தலைமை அதிகாரிகள் தங்கியிருந்த அலுவலகங்கள், உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் வணக்கஸ்தலங்களைச் சுற்றிபெரும் மண்சுவர்கள் எழுப்பி, மண் மூடைகள் அமைத்து அவர்களைப் பாதுகாக்க வேண்டிய அளவிற்கு புலிகளின் கையில் வீழ்ந்த இந்த நீண்ட தூர எறிகணைகளின் அச்சுறுத்தல் செறிவாக இருந்ததனை நேரில் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

புலிகளின் ஆட்லறிப் படையணிகளும் படையினரின் கவனத்தைத் திசைதிருப்பும் மூலோபாயம் கருதி, பலாலிப் படைத்தளத்தைச் சூழவுள்ள வசாவிளான் மற்றும் மயிலிட்டி போன்ற இரண்டாம் அடுக்கு முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளை நோக்கி ஒரிரண்டுஎறிகணைவீசி, "தேவைப்பட்டால் படைத்தளத்தின்இதயப்பகுதில்அமைந்திருக்கும் ஆயுதக்கிடங்குகளைத் தாக்குவோம், படைமுகாமின் இயங்குநிலையைச் சீர்குலைப்போம்" - என்பது போன்று அச்சுறுத்தும் பாணியிலான தாக்குதல்களை அவ்வப்போது மேற்கொண்டுவந்தனர்.

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு ஊடான ஏ9 பிரதான வழங்கல் பாதையூடாக வடக்கில் நிலைகொண்டிருக்கும் முப்படையினருக்குமான தினசரி வழங்கல் நிரந்தரமாகவே தடைப்பட்டிருந்தநிலையில், கடலில் கடற்புலிகளின் இடைவிடாத தாக்குதல்கள் காரணமாக கடல் மூலமானவழங்கலும்அச்சுறுத்தலுக்குள்ளாகியிருந்தது. இந்நிலையில், பலாலி விமானத்தினூடான ஆகாய மார்க்க வழங்கலையே அவர்கள் முழுமையாக நம்பியிருந்த காரணத்தினால் பலாலி விமான ஓடுபாதை அடங்கலான கூட்டுப்படைத் தளத்தை முழுமையாகப் பாதுகாக்கும் இன்றியமையாத தேவை அரசிற்கும் படையினருக்கும் ஏற்பட்டிருந்தது.

இதனை நன்கே அறிந்திருந்த விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் பிரிவினர் காங்கேசன்துறை கடற்பரப்பிலிருந்து பலாலியில் வந்திறங்கும் படையினரின் வழங்கல் மற்றும் துருப்புக்காவி விமானங்களை இலக்கு வைத்துத் தாக்குதல்களை நடாத்தியிருந்தமையும் இங்கு நினைவு கூரத்தக்கது.

ஆனையிறவு படைத்தளத்தைப் புலிகள் கைப்பற்றியதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் "யாழ் செல்லும் படையணி" யாழ். குடாநாட்டையும் கைப்பற்றும் நோக்கில் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர். இதன் போது, பலாலி விமான ஓடு பாதையின் மீதும் புலிகள் ஏவிய ஆட்லறி எறிகணைகள் வீழ்ந்து வெடித்திருந்தன. அப்போது, முப்படைத் தளபதிகளையும், கட்டளைத் தளபதிகளையும், அப்போதைய பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தயையும் காவிச் சென்ற விமானங்கள் பலாலியில் தரையிறங்க முடியாது திரும்பிச் செல்லும் அளவிற்கு பலாலி விமானத் தளமும், முப்படைத்தலைமையகமும் ஏறத்தாழ ஓர் முழுமையான முற்றுகைக்குள் உள்ளாகியிருந்தன.

இதனையடுத்தே அப்போது கூட்டுப் படைத் தலைமையகத்தின் படையினர் பிரதானியாக கடமைபுரிந்த ஜெனரல் ரொஹான் தளுவத்த இந்தியாவின் புட்டபர்த்திக்குச் சென்று சீரடி சாயிபாபாவையும், புதுடெல்லிக்குச் சென்று இந்திய மத்திய அரசையும் வழிபட்டு வடக்கிலுள்ள படையினரைக் காப்பாற்றும்படி இறைஞ்சியிருந்தார். இவர் புதுடெல்லியிடம் விடுத்திருந்த கோரிக்கைகளில், இக்கட்டான சூழ்நிலை உருவாகினால் வடக்கில் நிலைகொண்டிருந்த இரண்டு லட்சத்திற்கும்அதிகமான படையினரை கடல்மார்க்கமாக பாதுகாப்பாக வெளியேற்றித்தரவேண்டும் என்பதுவும் அடங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னர் லெப்ரினன் ஜெனரல் சரத் பொன்சேகா வடக்கின் கட்டளைத் தளபதியாகஅப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவினால் நியமிக்கப்பட்டதும்,பாகிஸ்தானிலிருந்து அவசர அவசரமாகத் தருவிக்கப்பட்ட பல்குழல் எறிகணைப் பீரங்கிகளின் துணையுடன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் புலிகளின்தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டதும், வடக்கிலிருந்த படையினரின் பாதுகாப்புஉறுதிப்படுத்தப்பட்டதும் வரலாறு.

(09ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகள் - ஸ்ரீலங்கா - சர்வதேசம்

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆக, வடக்கில் மட்டுமல்ல ஒட்டுமொத்த சிறிலங்கா படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான படைவலுச் சமநிலையைத் தீர்மானிக்கும் ஓர் மூலோபாய புள்ளியாக பலாலி விமானத் தளம் விளங்கியிருந்தது.

இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால், அப்போது படைவெளியேற்றத்திற்கு உதவத் தயாராக இருந்த இந்திய நடுவண் அரசு, யுத்தத்தில் புலிகளை முழுமையாக இராணுவ ரீதியாக நிர்மூலம் செய்ய முனைப்பாக முன்னின்றதோடு, பலாலி விமானத்தளத்தினை சர்வதேச விமானநிலையமாக மாற்றுவதற்கும், அங்கிருந்து பிராந்திய விமான சேவைகளை ஆரம்பிப்பதற்கு முன்வந்திருக்கிறது.

பலாலியும், போர் நெருக்கடியைத் தவிர்த்து இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கான உபகுழுவும் 2002 நவம்பரில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நோர்வே நாட்டு அனுசரணையுடன் தாய்லாந்தில் இடம்பெற்ற முதலாம் கட்டப் பேச்சுக்களின் இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது மூன்று உபகுழுக்களை உருவாக்கிச் செயல்படுத்த இரு தரப்பும் இணங்கியிருந்தன.

இதில் முதலாவது உபகுழு அரசியல் பேச்சுகளை முன்னெடுத்தல் மற்றும்

நிரந்தர அரசியல் தீர்வை நோக்கி நகருதல் போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கியது. "சிறான்" என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட இரண்டாவது உபகுழு வட-கிழக்கில் உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகள் குறித்த பணிகளை உள்ளடக்கியதாக அமைந்தது. மூன்றாவதாக போர் நெருக்கடியைத் தவிர்த்து இயல்புநிலையைத் தோற்றுவிப்பதற்கான உபகுழுவாகும்.

இந்த மூன்றாவது உபகுழுவின் முக்கிய நோக்கம் மீள் குடியேற்றம், காணிவிடுவிப்பு, படைக்குறைப்பு, ஆயுதக்களைவு மற்றும் மாமூல் நிலையைத் தோற்றுவித்தல் என்பதனை அடிப்படையாகக் கொண்டிருந்தமையால், அதன் முதற்கட்டமாக - நல்லெண்ண சமிக்ஞையாக - புன்னாலைக்கட்டுவன் வரை நீண்டிருந்த பலாலி இராணுவ முகாமின் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகள் கணிசமானளவில் பின்வாங்கப்பட்டு, இரண்டு தசாப்தங்களாக இடம்பெயர்ந்துள்ள வலிகாமம் வடக்குபிரதேச மக்கள் அங்கு மீள்குடியேற அனுமதிக்கப்படுவதுடன், அங்குநிலைகொண்டிருந்த ஆக்கிரமிப்புப்படையினர் முகாம்களுக்குத் திருப்பனுப்பப்பட்டு வடக்கில் படைக்குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற கோரிக்கை புலிகள் தரப்பினால் ஸ்திரமாக முன்வைக்கப்பட்டது.

சமாதானப் பேச்சுக்களின்போது தத்தமது படையணிகளையும், ஆயுதப் பலத்தையும் உரமாக்கிக்கொள்வதில் இரண்டு தரப்புக்களும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் முனைப்புடன் செயற்பட்டுக்கொண்டிருந்த காலம் அது.

வழமைபோலவே, பேச்சுக்கள் முடிவடைந்து மீண்டும் யுத்தம் ஒன்றிற்குச் செல்லவேண்டி ஏற்படின், அதற்காகத் தத்தமது படைகளையும், நிலைகளையும் பலப்படுத்தும் செயற்பாடுகளை இருதரப்பும் செவ்வனே செய்து வந்தன. அதாவது, புலிகளின் இந்த மனிதாபிமானக் கோரிக்கையில் ஒரு இராணுவ சூட்சுமமும் இருப்பதனை அறிந்துகொண்ட சிறிலங்கா அரசு, பலாலி உயர் பாதுகாப்பு விடயம் தொடர்பில் முன்னாள் இந்தியப் படைத் தளபதிகளில் ஒருவரான ஜெனரல் சதீஷ் நம்பியாரின் உதவியைப் பெற புலிகளின் இணக்கப்பாட்டினையும் பெற்றுக்கொண்டது.

இங்குதான் சிங்களம் தனது சுயரூபத்தை வெளிப்படுத்தியது. நோர்வேயின் அனுசரணையுடன் புலிகளுடனான சமாதானப் பேச்சு எனும் விடயத்தில் எதிர்நிலையைக்கொண்டிருந்த அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க இது விடயத்தில்கடும் போக்கினைக் கடைப்பிடிக்கவும், சமாதான முயற்சிகளை நிர்மூலம் செய்வதற்கும் கங்கணம் கட்டினார்.

வடமாகாணப் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு இது குறித்து அறிக்கையொன்றை உடனடியாகத் தயாரித்து வழங்கும்படி பாதுகாப்பு அமைச்சர்என்ற வகையிலும், முப்படைகளின் தளபதி என்ற அடிப்படையிலும் உத்தரவிட்டார் ஜனாதிபதி குமாரதுங்க.

ஏற்கனவே, சமாதானம் எனும் பெயரில் புலிகளுக்கு வடக்கு கிழக்கினை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசு தாரைவார்த்துக் கொடுக்கப்போகிறது என்று முன்னாள் வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தலைமையில் தெற்கில் விஷமப் பிரச்சாரம் செய்து வந்த சந்திரிகாவுக்கு இந்த விடயம் வெறும் வாய்க்கு அவல் அகப்பட்டது போன்று சிக்கிக் கொண்டது.

மேஜர் ஜெனரல் பொன்சேகாவினால் பலாலி பாதுகாப்பு வலயம் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனாதிபதி குமாரதுங்கவிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அதன் பிரதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோவிற்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

அரசாங்கத்தரப்பில் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையின் அசல் வடிவம் புலிகள் தரபிற்கு அனுப்பிவைக்க, இருதரப்பு உறவுகளில் விரிசல்கள் வெளிபடையாகவே தெறிக்கத் தொடங்கின.

அந்த அறிக்கையில்,வடக்கே பலாலி முப்படைத் தளத்தின் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவேண்டுமாயின் புலிகள் ஆயுதங்களைக் களையவேண்டும் என்பதுடன் தமது கனரக நீண்டதூர ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டிருந்தமை புலிகள் தரப்பைச் சினமூட்டியது.

அதாவது பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தின் குறைப்பு என்பது புலிகளின் ஆயுதக்களைவு மற்றும் கனரக நீண்டதூர ஆயுதங்களின் கையளிப்பு என்பதன் விகிசாரத்திற்கு அமையவே மேற்கொள்ளப்படும் என்று அதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இன்னும் தெளிவாக கூறப்போனால், பலாலி கூட்டுப்படைத் தளத்திலுள்ள விமான நிலையத்தைப் பாதுகாப்பதற்காக புலிகளுடனான சமாதான முயற்சிகளைக் கடாசித் தள்ளுவதற்கும், மீண்டும் முழுமையான ஒரு யுத்தத்தில் ஈடுபடுவதற்கும், சர்வதேச எதிர்ப்பை சம்பாதிப்பதற்கும் சிறிலங்கா அரசு தயாராக இருந்தது என்பதே இதன் முக்கியசெய்தியாகும். சிறிலங்கா அரசைப் பொறுத்தவரை தேசிய பாதுகாப்பு என்ற விடயத்தில் பலாலி அசைக்கமுடியாதவொரு அம்சம்.

இலங்கையின் வடக்கே தமிழர் தாயகப் பிரதேசத்தினை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள முப்படைகளினதும் பெருந்தளமாக விளங்கும் பலாலி படைத்தளம் என்பது தமிழர் போராட்ட வரலாற்றில் ஒரு மறக்கமுடியாத குறியீடு.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்படும் வரை தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்பின் குறியீடாகக் கணிக்கப்பட்ட 'பலாலி" இன்று அபிவிருத்தியின் குறியீடாக மாறியிருக்கிறது. போருக்குப் பின்னரான அபிவிருத்தி என்பது மிகவும் வரவேற்கப்படத்தக்கது என்றாலும், அது அடிப்படை அரசியல் அபிலாசைகளுக்கான நிரந்தரத்தீர்விற்கான பிரதியீடாக அமைந்துவிடாது என்பதனை ஆட்சியாளர்களும், தமிழர் தலைமைகளும் மறந்துவிடக் கூடாது. ஏனெனில், தன்மானத் தமிழர்கள் வெறுமனே பொருளாதார விலங்குகள் அல்ல.



## கட்சித் தலைவர்கள்





# ஈழத்தமிழர்களின் புலம்பெயர் கோட்டையில் மீண்டும் ஆட்சியை பிடித்த ட்ரூடோவின் கதை!

கனடிய பிரதமர் குறித்து உலகளாவிய ஈழத்தமிழ் மக்கள் உட்பட அனைத்து தரப்பிடமும் மாறாத மதிப்பு இருக்கிறது. ட்ரூடோவும் நியூசிலாந்து பிரதமர் ஜஸின்தா ஆடர்னும் சமகால இளந்த தலைமுறைக்கு வழிகாட்டக்கூடிய புதிய சிந்தனைகள் செறிந்த தலைவர்கள் என்ற கருத்து பல்வேறு மட்டங்களிலும் முன் வைக்கபட்டிருக்கிறது. அந்தவகையில், ட்ரூடோவின் அண்மைய வெற்றி இளைந் தலைமுறையினர் மத்தியிலும்கூட மகிழ்ச்சிக்குரியதாக பார்க்கப்பட்டது. அந்த வகையில், இம்முறை கனடிய தேர்தலில் என்ன நடைபெற்றது என்பதை ஆய்வதே இந்தப்பத்தியின் நோக்கம். 'எதிரொலி'க்காக அதனை எழுதியிருக்கிறார் கனடாவிலிருந்து மூர்த்தி.

கனடாவின் மத்திய அரசுக்கான தேர்தல் கடந்த ஒகஸ்ட் 21 திகதி நடந்து முடிந்திருக்கிறது. இதில் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ மீண்டும் ஆட்சி அமைத்திருக்கிறார். இதற்கு முன்னர் பெரும்பான்மை ஆசனங்களோடு இருந்த ஜஸ்ரின் ட்ரூடோ ஆட்சி இம்முறை ஒரு சிறுபான்மை அரசாங்கமாக மாறியிருக்கிறது.

இம்முறை தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளில் 5 கட்சிகள் குறிப்பிடத்தக்கவை. மரபுவாதக் கட்சியான கொன்சவேடிவ் கட்சி வலதுசாரிக்கொள்கைகளைக்கொண்டிருக்கும் கட்சியாகும்.

என்.டி.பி. என அழைக்கப்படும் புதிய ஜனநாயகக் கட்சி இடதுசாரிக் கொள்கைகளை கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது.




லிபரல் கட்சி என்று அழைக்கப்படும் தாராளமயக் கட்சி இவை இரண்டிற்கும் இடைப்பட்ட கொள்கைகளைக்கொண்டது.

அதைவிடவும் கியூபெக் மாகாணத்தின் தனித்துவத்தை மத்திய அரசில் வலியுறுத்துவதற்காக "ப்ளொக் கியூபெக்குவா" என்ற கட்சி கியூபெக்கில் போட்டியிட்டது.

சுற்றுச்சூழலை முதன்மைப்படுத்தும் கிரீன் கட்சியான பசுமைக் கட்சியும் போட்டியில் உண்டு.

ஒகஸ்ட் 21 ஆம் திகதி வெளிவந்த முடிவாக, நீல நிறக் கொன்சவேடிவ் கட்சி 6,150,177 (34.4 விகிதம்) வாக்குக்களைப் பெறமுடிந்த நிலையில் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவின் சிவப்பு நிற லிபரல் கட்சி 5,911,588 (33.1விகிதம்) வாக்குகள் பெற்றிருக்கிறது. அதாவது அதிக மக்கள் கொன்சவேடிவ் கட்சிக்கே வாக்களித்திருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவித்தபோதும் லிபரல் கட்சியே அரசாங்கத்தை அமைக்கும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகை அமைந்து, ஜஸ்ரின் ட்ரூடோவின் லிபரல் கட்சியினர் மீண்டும் அரசாங்கத்தை அமைத்திருக்கிறார்கள்.


கனடா மூர்த்தி

லிபரல் கட்சியை வெற்றி பெறச் செய்ததில் ரொறன்ரோ நகரம் அமைந்திருக்கும் ஒன்ராறியோ மாகாணம் பெரும் பங்கு வகிக்கிறது. குடிவரவாளர்களால் நிறைந்திருக்கும் ஒன்ராறியோ மாகாணம் லிபரல் கட்சிக்கு அதிக ஆதரவு தந்திருக்கிறது. மற்றைய மாகாணங்களில் லிபரல் கட்சி பலத்த அடி வாங்கியிருந்த போதும், ஒன்ராறியோவில் மக்கள் ஜஸ்ரின் ட்ரூடோவின் கொள்கைகளால் கவரப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதே இதன் கருத்தாகும்.

இதற்கிடையே பலமுனைகளிலும் ஜஸ்ரின் ட்ரூடோவை தாக்கிக் கொண்டிருக்கும் நீல நிற கொன்சவேடிவ் கட்சிக்கு மேற்கு மாகாணங்களில் ஆதரவு அதிகரித்துக் கொண்டே போகிறது. ஜஸ்ரின் அரசின் முன்னைய காலப்பகுதி ஆட்சியின்போது அவரது கொள்கைகளால் தாம் பொருளாதார ரீதியில் கடும் பாதிப்பை அடைந்திருப்பதாக அந்த மாகாணத்தினர் கருதுகிறார்கள். வான்கூவரை தலைநகராக கொண்ட பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் கல்கரி நகரைக் கொண்டிருக்கும் அல்பேட்டா மாகாணம், வின்னிபெக்கை தலைநகராகக் வைத்துள்ள சஸ்காச்சுவான் மாகாணம் ஆகிய மூன்றும் ஜஸ்ரின் ட்ரூடோவின் லிபரல் கட்சியை நிராகரித்திருக்கின்றன.

கனடாவிலிருந்து பிரிந்து செல்வதை மானசீக இலட்சியமாக வரித்திருக்கும் கனடாவின் பிரெஞ்ச் மக்களின் மாகாணமான கியூபெக்கின் நிலைப்பாடு எப்போதுமே வித்தியாசமானது. கியூபெக் மக்கள் தனது மண்ணின் மைந்தனான ஜஸ்ரின் ட்ரூடோவிற்கான ஆதரவை குறைத்திருப்பது இங்கு கவனிக்கப்படவேண்டும். லிபரல் கட்சிக்கு ஏறக்குறையச் சரிசமனான நிலையில் புளோக் கியூபெக்குவா கட்சி அங்கு ஆசனங்களைக் கைப்பற்றியிருப்பது பிரிவினை வாதம் தலை தூக்குவற்கான புதிய சமிக்ஞை என்றும் அவதானிகள் கருதுகிறார்கள்.

இந்தத் தேர்தல் முடிவுகள் கனடா கட்சி வாரியாகப் பிளவுபட்டுக் கிடப்பதையே காட்டுகிறது. மேற்கு மாகாணங்கள் மூன்றும் வலதுசாரிகளிடமும், கிழக்குப் பகுதியின் கியூபெக் பிரிவினை எண்ணப்பாடு கொணடவர்களிடமும் சரணடைந்திருக்கின்றன.

ஜஸ்ரின் ட்ரூடோவிற்கு கனடா வாழ் முஸ்லிம் இனத்தவரிடையே செல்வாக்கு உண்டு. சிரியா அகதிகளை மிக விரைவாக ஏற்றுக் கொண்டதால் அந்த செல்வாக்கு முஸ்லிம்களிடையே இன்னும் அதிகரித்திருக்கிறது. இதனாலேயே வெள்ளை இனத்தவர்களை ஏகபோகமாகக் கொண்ட மேற்கு மாகாணங்கள் தமது அதிருப்தியை ஜஸ்ரினின் கட்சிமீது காட்டுகிறார்கள் என்ற அவதானமும் கவனிக்கப்படவேண்டியது.

என்.டி.பி. கட்சியின் தலைவர் ஜக்மித் சிங் ஒரு சீக்கியர். தலைப்பாகையுடனேயே வலம் வரும் அவரை ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ள மறுத்த கனேடியர்களின் பொதுப் புத்தியானது, பின்னர் இளைஞரான சிங் காட்டிய தீவிர பிரச்சார யுக்திகளாலும் விவாதத் திறமையினாலும் அவரை நன்கு ஆதரிக்க தொடங்கிவிட்டது. கூடவே நாடு தழுவிய நிலையில் கனடிய இளைஞர்களிடையே என்.டி.பி. கட்சியின் செல்வாக்கு மீண்டும் ஏறுமுகமாக இருப்பதும் கவனிக்கத் தக்கது. ஆனால் ஒரு சீக்கியரை தலைவராக வைத்திருக்கும் என்டிபியினரால் குடிவரவாளர்கள் நிறைந்துள்ள ஒன்ராறியோ மாகாணத்தில் - சீக்கியர்கள் அதிகம் வசிக்கும் தொகுதிகளில்கூட - ஒரு ஆசனத்தையேனும் பெற முடியவில்லை என்பது பெருஞ்சோகமாகும்.



கனடாவின் தமிழ் மக்கள் ஒன்ராறியோவிலும், கியூபெக்கிலுமே அதிகளவில் வாழ்கிறார்கள். மிக அதிகமாக தமிழ் மக்கள் வாழ்வது ஒன்ராறியோவின் ஸ்காபரோ, மார்க்கம் தொகுதிகளில்தான்! இங்குதான் தமிழர்கள் பெருமளவில் போட்டியிடுவதும், பெரும்பான்மையோர் தோல்வியுறுவதும் வழமையாக இருக்கிறது.

கனடாவில் தமிழர் ஒருவர் எம்.பி.யாக வந்தமை என்.டி.பி. கட்சியினாலேயே சாத்தியமானது. (அப்பெண்மணி பிறகு கட்சி மாறி லிபரல்கட்சியில் சேர்ந்தது தனிக் கதை) அந்த வெற்றியின் பின்னரே ஏனைய கட்சிகள் தமிழர்களுக்கு போட்டியிட இடமளித்தன. குறிப்பாக இன்று, லிபரல் கட்சியினரும், கொன்சவேடிவ் கட்சியினரும் கனடாவின் தமிழ் மக்களிடையே அதிக ஆதரவை பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

லிபரல் கட்சியினர் ஸ்ரீலங்கா குறித்து வெளிப்படையாக - போதுமான அளவு - உக்கிரமாக இயங்குவதில்லை என்ற குற்றச்சாட்டு ஒன்றும் இங்கு உண்டு. அதற்கு மாறாக "தமிழர் குறித்த தமது ஆதரவு நடவடிக்கைகள் வலிமையானவை" - என கொன்சவேடிவ் கட்சியினர் குறிப்பிடுவார்கள். குறிப்பாக,கப்பலில் வந்த தமிழ் அகதிகளை அரவணைத்தது, பொதுநலவாய உச்ச மாநாட்டினை கனடா பகிஸ்கரித்தது என பல அதற்காக சொல்லப்படும். ஆனாலும் கொன்சவேடிவ் கட்சியினரின் பிரசார பலம் தமிழர்களிடையே குறைந்திருப்பதானால் லிபரல் கட்சியினருக்கு சாதகமாக அலை தமிழர்களிடையே எப்போதும் வெளிப்படையாகத் தெரிவதுண்டு.

இம்முறை ஸ்காபரோ, மார்க்கம் பகுதிகளில் தேர்தல் தமிழ் களேபரங்கள் குறைந்திருந்தன. நான்கு தமிழர்களே மொத்தமாக போட்டியிட்டார்கள். இரண்டு தமிழ் புது முகங்களை கொன்சவேடிவ் கட்சி களமிறக்கியது. லிபரல் கட்சியானது, இதற்கு முன்பே தனது கட்சி சார்பில் போட்டியிட்டு வென்றிருந்த எம்.பி.யான கரி ஆனந்த சங்கரியை மட்டும் இரண்டாவது தவணைக்குப் போட்டியிட அனுதித்தது. இதைவிடவும் இன்னொரு கொசுறுக் கட்சியான மக்கள் கட்சியின் சார்பில் ஒரு தமிழர் போட்டிக்கு வந்தார். கனடாவின் முதல் தமிழ் எம்பியைத் தந்த என்.டி.பி. யாரையும் நியமிக்கவில்லை.

முடிவில் மூன்று தமிழர்கள் விழுப்புண் பட்ட நிலையில், செந்தமிழன் கரி ஆனந்த சங்கரி மட்டுமே வெற்றி பெற்றார். இரண்டாவது தவணைக்கும் லிபரல் கட்சி சார்பில் எம்.பி. ஆகிக் கொண்டார். கரி ஆனந்த சங்கரி இலங்கையின் மூத்த அரசியல்வாதியான வீரசிங்கம் ஆனந்தசங்கரியின் புதல்வராவர்.

20 ஆண்டுகளைக் கடந்து புதிய ஒலித்தரத்தில் உலகெங்கும் பரந்து ஒலிக்கிறது
உலகத்தமிழரின் உரிமைத் தோழன்




இன்பத்தமிழ் ஒலி
24 மணிநேர தமிழ் ஒலிபரப்புச் சேவை






02-9798 2993
02-8542 2016
0451 051 767
0425 324 953
inbathamil@gmail.com
inbathamiloli

Inbathamil Studio
2/251 Liverpool road,
Ashfield - NSW2131,
Australia

# நாடும் நாட்டு மக்களும் 09



தமிழகத்திலிருந்து
டான் அசோக்

தாங்கள் நன்றாகவாழ்ந்தவீட்டில் மோசமான சம்பவங்கள் நடக்கும்போது, “இன்னும் என்னவெல்லாம் கொடுமைகளைப் பார்த்துத் தொலையவேண்டுமோ?” என ஊரில் அப்பத்தாக்கள் புலம்புவார்கள். அப்படித்தான் ஆகிவிட்டது தமிழ்நாட்டின் நிலைமை. நான் இதைச் சொல்லும்போது உங்களுக்குஏதாவதுஒருகொடுமைநினைவுக்குவராது,எந்தகொடுமையை இவன் சொல்கிறான் எனயோசிப்பீர்கள். ஏனெனில் விரல் விட்டு எண்ணமுடியாத அளவுக்குக் கொடுமைகளையும் கேலிக்கூத்துகளையும் நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

எடப்பாடிடாக்டர் ஆகிவிட்டார். சுஜீத் விழுந்தகுழியில் அப்படியே காணாப் பிணமாகிவிட்டார். குட்காபாஸ்கர் எனப்படும் விஜயபாஸ்கர் வேட்டியில் இரண்டு துளிமண் பட்டுவிட்டதால் இரக்ககுணத் தமிழர்கள் விஜயபாஸ்கரின் அழுக்கைஎல்லாம் துடைத்துவிட்டார்கள், சுஜீத்தின் ரத்தத்தைத் தவிர! நாமெல்லாம் குழந்தைக்காக அழுதால் பாஜக சங்கிகளோ, இதெல்லாம் கிறித்தவமிஷினரிகளின் வேலை,தீபாவளியைக் கெடுப்பதற்காக இப்படிச் செய்கிறார்கள் எனவாய்க்கூசாதுசொல்கிறார்கள். இன்னும் சிலரோசுர்ஜித்தைகுழந்தைஎன்றும் பாராமல் அவன் மரணத்தில் ஜோக்கடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போலதிருவள்ளுவருக்குகாவிஉடைதரித்துவிட்டிருக்கிறதுதமிழகபாஜக! இப்படிஎத்தனைஎத்தனை!

நானும் மருத்துவர் எழிலன் நாகநாதனும் ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டுபேசினோம். டாக்டர் வழக்கம்போல் அரசியலில் புள்ளிவிவரங்களோடுவிளாசித்தள்ளினார். அவர் பேசிமுடித்தவுடன் நான் சொன்னேன், “போலிஅரசியல்வாதிகள் எல்லாம் போலிடாக்டர்கள் ஆகிவிட்டார்கள். இப்போதுஉண்மையானடாக்டர்கள் எல்லாம் உண்மையானஅரசியல்வாதிகள் ஆகிவிட்டார்கள்” என்று. நான் வேடிக்கையாகச்சொன்னதாகநினைத்து கூட்டம் சிரித்தது. நான் சத்தியமாகவேடிக்கையாகச் சொல்லவில்லை,வேதனையாகச் சொன்னேன். நானும் உலகில் உள்ளகாரணங்களைஎல்லாம் யோசித்துப் பார்க்கிறேன். இந்தஎடப்பாடிபழனிச்சாமிக்குஎதற்குடாக்டர் பட்டம் கொடுத்தார்கள் எனநிஜமாகவேபுரியவில்லை. ஒருவேளை சசிகலா இருந்தபோதுமேடையில் நான்கு கால்களை ஊன்றி ‘பாபாராம்தேவை’ விட உடலை வளைத்து ஊர்ந்து வந்தாரே, அந்த ஜிம்னாஸ்டிக்ஸ்காக இருக்கலாம் எனநினைத்துக் கொண்டேன்! பொதுவாக தமிழ்நாட்டு ஊடகங்கள் அதீதநேர்மையானவை. அதுவும் ஆளுங்கட்சி என்றால் அவர்கள் விமர்சனம் செய்யும் தொனியே அனல் கக்குவதாக இருக்கும். எடப்பாடிக்கு எதற்கு டாக்டர் பட்டம் எனவிவாதிப்பார்கள் எனப் பார்த்தால்,“ அசைக்கமுடியாததாகிறதாஎடப்பாடியின் கொடி” என விவாதித்துக் கொண்டிருந்தார்கள். ரைட்டு!

திமுகவுக்குஎதிராகஒருஆள் வேண்டும். டிடிவிவேலைக்காகவில்லைஎன்பதால்,கிடைத்ததைவளர்த்தெடுக்கிறார்கள். எடப்பாடிக்கு இரவும் பகலும் ‘இமேஜ் பில்டப்’ தமிழ்நாட்டில் நடக்கிறது. ஆனால் எது எப்படியோ, எடப்பாடி கோமாளியாகத் தெரிந்த காலமெல்லாம் மலையேறிவிட்டது. இனியும் இவர்களைக் கோமாளிகளாகக் கருதினால் இறுதியில் தமிழகமும், தமிழர்களும்தான் கோமாளிகளாகத் தெரிவார்கள். சிறுவன் சுஜீத் இறந்தபின் அதைப் பற்றியபிரஸ்மீட்டில் முதல்வர் சிரித்துக் கொண்டுபதிலளிக்கிறார்.எடப்பாடி காமடியன் அல்ல, கொஞ்சம் கூட மனிதத் தன்மையே இல்லாத, பதவிக்காகஎதையும் செய்தவர் என சமூக வலைதளங்களில் மக்கள் பேசிக்கொண்டார்கள். எடப்பாடி மட்டுமல்ல, ஜெயலலிதாசோறுபோட்டவளர்த்தகட்சிக்காரர்கள் அத்தனைபேரும் அப்படித்தான்! மோடிஆட்சிபற்றியும் இந்தியாவின் நிலைமை பற்றியும் கிஞ்சித்தும் கவலை இல்லாமல் இருக்கும் இந்திய ஊடகங்களைப் பற்றி டிவிட்டரில் ஒருவர் “இந்தியா அழியும்போது அந்த இரத்தம் ஊடகங்களின் கையில் தான் இருக்கும்,” என எழுதியிருந்தார். இது தமிழ்நாட்டிற்கும் பொருந்தும். நிற்க.

## பைக் டக்ஸி

ஒரு காலத்தில் “பைக்குக்குட்ரைவர்”என்ற சிந்தனையேபெரியகாமடி. சில சினிமாக்களில் நகைச்சுவையாக வரும். ஆனால் இன்று நிஜமாகவே Ola பைக் டாக்சிகள் தமிழ்நாட்டில் வந்துவிட்டன. நானும் நான்கைந்துமுறை போய்வந்துவிட்டேன். Swiggy, Zoma toபோல பைக் மட்டும் வைத்திருந்தாலேகிடைக்கும் மற்றொரு வேலை இது. பெரும்பாலும் படிக்கும்,வேலைதேடும் இளைஞர்கள் இதை பகுதி நேர வேலையாகச் செய்கிறார்கள்.

எந்த சமூகத்திலுமே முதல்தலைமுறைபடிக்கும்போது அச்சமூகம் அளவுக்கதிகமாக கௌரவம் பார்க்கும். இந்த வேலை செய்தால் கேவலம், அந்த வேலை செய்தால் கேவலம் என்ற எண்ணங்கள் எல்லாம் அதனால் விளைகின்றவைதான். ஏதேச்சையாக ஒரு படிக்கிற பையன் வீட்டு வேலைகள் அல்லது எடுபிடி வேலைகளைச் செய்தாலே பதறிப் போய், “படிக்கிற பையன் நீ ஏன்பா இதையெல்லாம் செய்ற” என அவன் கையில் இருந்து அதைப் பெற்றுக் கொள்வார்கள்.

ஆனால் அடுத்தடுத்த தலைமுறையில் அது காணாமல் போகும். தான் எதிர்பார்த்த வேலை கிடைக்கும் வரையோ, தான் நினைத்தபடிப்பை முடிக்கும் வரையோ, அல்லது பாக்கெட் மணிக்காகவோ எந்த ஒரு வேலையைச் செய்வதும் தவறில்லை, கௌரவக் குறைச்சல் இல்லை என்கிற எண்ணம் மெல்ல தலைதூக்கும். அப்பா காசில் காதலிக்கு பரிசு வாங்கித் தராமல் டேபிள் துடைத்தோ, வீட்டு வேலை செய்தோ, பைக் டாக்சி ஓட்டியோ வாங்கித் தருவது பன்மடங்கு மகிழ்ச்சியைத் தரும் என்பது புரியத் தொடங்கும். வெளிநாடுகளில் 70கள், 80களிலேயே வந்து விட்ட இந்த எண்ணம் இப்போதுதான் தமிழ்நாட்டில் தலைகாட்டத் துவங்கி இருக்கிறது.

வடமாநிலங்கள் போல் அல்லாது, கிட்டத்தட்ட இரண்டு முழு தலைமுறை பட்டதாரிகள் இங்கே உருவாக விட்டோம். இது நடக்க என்னவெல்லாம் செய்திருக்கிறார்கள் நம் தமிழக முதல்வர்கள்! நீதிக்கட்சி காலத்தில் மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டம் கொண்டுவந்தார்கள். பஸ்களில் தாழ்த்தப்பட்டோர் மீதான தீண்டாமையை ஒழித்தார்கள், அதாவது அறுபதுகளில் அமெரிக்காவில் பேருந்துகளில் கறுப்பினத்தவர் மீதான தீண்டாமை ஒழிக்கப்படுவதற்கு முன்பே!! ராஜாஜி மூடிய பல்லாயிரக் கணக்கான பள்ளிகளை காமராசர் திறந்தார். உணவுத் திட்டத்தைதமிழகம் முழுதும் விரிவுபடுத்தினார். கலைஞர் தமிழ்நாடுபாடநூல் கழகம் ஆரம்பித்தார். 1976களிலேயே கம்ப்யூட்டர் படிப்பை பள்ளியில் கொண்டு வந்தார், எம்.ஜி.ஆர். சத்துணவை மேலும் விரிவுசெய்தார். ஏகப்பட்டபொறியியல் கல்லூரிகளைத் திறந்தார். பின்னர் கலைஞர் மீண்டும் வந்து கண்காணா ஊருக்கெல்லாம் மினிபஸ் விட்டார். இலவச பஸ் பாஸ் கொடுத்தார். மாணவிகளுக்கு ஊக்கத் தொகை அறிவித்தார். மாவட்டத்துக்கு ஒரு மருத்துவக்கல்லூரி ஆரம்பித்தார். என்ஜினியரிங்குக்குநேர்மையானசிங்கிள் விண்டோகவுன்சிலிங் கொண்டு வந்தார். பிளஸ் 1 இல் இந்தியாவில் முதல்முறையாக கம்ப்யூட்டர் க்ரூப் ஆரம்பித்தவரும் அவரே,கம்ப்யூட்டர் படித்தவர்களுக்குமுதல்முதலாகதொழில்நுட்பகொள்கைகளை வகுத்து ஐடி புரட்சிக்கு வித்திட்டவரும் அவரே! ஜெயலலிதா தன் பங்குக்குசைக்கிள்,நப்கின் முதல் லப்-டொப் வரைகுழந்தைகளுக்குஅள்ளிக் கொடுத்தார். இப்படிப் பார்த்துப் பார்த்துஉரம் போட்டுவளர்த்தப் கல்விப் பயிர் இது.

கீழடி காலத்திலேயே எழுதப் படிக்கத் தெரிந்த ஒரு சமூகம் - ஆரியர்கள் வருகையால், மனுதர்மசதியால்,மதத்தால்,வர்ணத்தால் படிப்பறிவில்லாமல் போய், கேள்விக்குறியாய் குனிந்து,பின்னர் 2000 ஆண்டுகள் கழித்து மீண்டும் இப்படி ஆச்சரியக்குறி போல எழுந்து நின்றால், இந்தமதவெறிபிடித்தவடமாநிலத்தவர்களின் கண்களை உறுத்தத்தானே செய்யும்! உயர் சாதிக்காரர்களுக்கு எரிச்சல் வரத்தானேசெய்யும்! அவர்கள் கைக்குஅதிகாரம் வந்தால் என்னசெய்வார்கள்? தேசியக் கல்விக்கொள்கைஎனபிற்படுத்தப்பட்டோர் - ஏழைகளுக்குஎதிரானஒருகல்விக்கொள்கையைமுன்மொழிவார்கள்.

ஆனால் இதெல்லாம் கொஞ்சம்கூட எடப்பாடிக்கோ ஓ.பி.எஸ்ஸூக்கோ உறுத்தாது.

திருவள்ளுவருக்கு பாஜக காவி உடை போட்டு விட்டிருப்பது அதீத விரக்தியின் வெளிப்பாடு. ராமாயணமும், கீதையும் தமிழ்நாட்டில் செல்லுபடியாகவில்லை என்பதால் திருக்குறளுக்குவண்ணமடித்துகையில் எடுத்திருக்கிறார்கள். இந்துத்துவமறைகளானவேதங்கள்,கீதைபோல "நான் வர்ணங்களை" போதிக்கும் ஏற்றத்தாழ்வு வேதமல்ல திருக்குறள். அது,“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என மனிதர்கள் மட்டுமல்லாது எல்லா உயிர்களுக்குமான நலத்தைபோதிக்கும் தமிழர்களின் மறை. தமிழர்கள் மத நூல்களுக்கு மாற்றாக உலகிற்கு அளித்த உலகப் பொது மறைதான்திருக்குறள். அதற்கு காவி பூசிப் பார்க்கிறார்கள். விட்டால் நாளை விரக்தியின் அடுத்தகட்டத்திற்குச் சென்று பெரியாருக்கே காவி அடிக்கப் பார்ப்பார்கள். நாம் கவனமாகத்தான் இருக்கவேண்டும். விழிப்பாகத்தான் இருக்கவேண்டும். காக்கைகள் பறந்துவானம் அழுக்காகப் போவதில்லை என்றாலும் நாம் கொஞ்சம் கவனமாகத்தான் இருக்கண்டும். ஏனெனில் காக்கைகளின் சத்தம் காதைப் பிளக்கிறது. “இந்தக் கொடுமைகளையெல்லாம் இன்னும் எத்தனை நாளுக்கு பார்க்கணுமோ...”



எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI

நவம்பர் 2019

# புத்திநாதன்: கூடிழந்த நாட்டில் அலையும் சிறகொடிந்த அகதிப்பறவை!



கருணாகரன்

பாண்டவருக்கு அஞ்ஞானவாசம் பன்னிரண்டு ஆண்டுகள். ராம லட்சுமணர்களுக்கு பதின்னான்கு ஆண்டுகள். புத்திநாதனுக்கோ இருபத்தைந்து ஆண்டுகள். இருபத்தைந்தாண்டு அஞ்ஞானவாசத்தை (தமிழ் நாட்டின் அகதி வாழ்க்கையை) முடித்துக் கொண்டு நாடு திரும்பி, ஊருக்கு வந்தாலும் புத்திநாதன் இன்னும் அகதியே.

பாண்டவரும் ராம லட்சுமணர்களும் நாடு திரும்பியபோது அவர்களுக்கு ராஜ்ஜியம் கிடைத்தது. நல் வாழ்க்கை அமைந்தது. புத்திநாதனுக்கு எதுவுமே கிடைக்கவில்லை. தனக்கான அடையாள அட்டையை எடுப்பதற்கே புத்திநாதன் பெரும்பாடுபட வேண்டியிருந்தது. அதற்கு மூன்று மாதங்கள் செலவானது. அடையாள அட்டை இல்லையென்பதால் அடுத்த ஊருக்கே செல்ல முடியாமல் மூன்று மாதங்கள் புத்திநாதன் ஊருக்குள்ளேயே முடங்கிக் கிடந்தார்.

"பாண்டவர்களும் ராம லட்சுமணர்களும் தமது உரிமைக்காகப் போரிட்டதால் ராஜ்ஜியத்தைப் பெற்றார்கள். தங்களுடைய வாழ்க்கையைப் பெற்றார்கள்" என்று நீங்கள் சொல்லக் கூடும்.

அவர்கள் ராஜபுத்திரர்கள். அதனால் அவர்களுக்கு அதற்கான வாய்ப்பும் வழியுமிருந்தது.

புத்திநாதன் அப்படியா? அவர் ஒரு சமானியர். அகதித் தமிழர். போரினால் இடம்பெயர்ந்து, அகதியாகப் புலம்பெயர்ந்தவர். போர் முடிந்த பிறகு இனி அமைதியாக வாழலாம். இந்த அகதி ஊழைத் தொலைத்து விடலாம் என்ற நம்பிக்கையோடு தனியனாக ஊர் மீண்டவர்.



இதனால் புத்திநாதனுக்கு பேரதிகாரத்துக்கும் பெருவாழ்வுக்கும் வழியில்லை. அவரும் அதையெல்லாம் விரும்பவுமில்லை. அவருக்கு ஊரிலே ஒரு துண்டு நிலமிருக்கிறது. அதில் குடியிருக்க ஒரு வீடும் செய்வதற்கொரு தொழிலுமிருந்தால் போதும். உழைத்துத் தன்னுடைய வாழ்க்கையை ஓட்டிக்கொள்வார். மேலும்ஓடித்திரிவதற்கொரு சைக்கிள். கடை, தெரு, தொழில், நண்பர்களிடம் என்று போய் வருவதற்கு அது வசதிப்படுமல்லவா!

ஆனால், இதெல்லாம் புத்திநாதனுக்கு வாய்க்கவேயில்லை. எவ்வளவோ வழிகளில் முயன்று கொண்டிருக்கிறார். எந்த வழியும் திறக்கப்படுவதாக இல்லை. தமிழ் நாட்டிலிருந்தபோது செய்த தொழில் அனுபவங்களுக்கும் தொழில் அறிவுக்கும் தோதாக இங்கே எந்த வேலையும் அமையவில்லை. அப்படி ஒரு வேலையை எடுப்பதாக இருந்தால் கொழும்புக்குத்தான் போக வேண்டும். கொழும்புக்குப் போவதாக இருந்தால் அங்கே ஏற்படும் செலவுக்கு கிடைக்கும் சம்பளம் போதாது. யாழ்ப்பாணத்தில் வேலை ஒன்றுக்கு முயற்சித்தார் புத்திநாதன்.

புத்திநாதனின் கதையைக் கேட்கும் எல்லோரும் "பார்க்கலாம்" என்றுதான் சொல்கிறார்களே தவிர, "வேலை தரலாம், வாருங்கள்" என்ற இன்னும் பச்சை விளக்கைக் காட்டவில்லை.

எனக்குத் தெரிந்த இடங்களில் புத்திநாதனுக்காகப் பேசிப் பார்த்தேன். "இந்தியாவிலிருந்து வந்திருக்கிறாரா? என்னவெல்லாம் செய்வார்? அவர் (புத்திநாதன்) பேசுவதே வேற மாதிரியிருக்கு. நம்ம ஆட்களோடு எப்படிப் பொருந்துமோ!" என்று கேட்டார் ஒரு தொழில் வழங்குநர்.

பதின்ம வயதில் ஊரைவிட்டு, நாட்டைவிட்டுப்போய் இருபத்தைந்து ஆண்டுகள் வேற்று நிலத்தில் வாழ்ந்தவரிடம் இப்படி அடையாள மாறுதல்கள் ஏற்படத்தானே செய்யும். இதற்குப் புத்திநாதன் என்ன செய்ய முடியும்?

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்றவர்கள் தங்கள் பிள்ளைகளோடு ஊருக்கு வந்து போகிறார்கள். அப்படி வருகின்ற பிள்ளைகளில் பாதிப்பேருக்குக் கூடுதலானவர்கள் தங்களுக்குள் தமிழ் பேசுவதில்லை. அப்படித்தான் அவர்கள் தமிழில் கதைத்தாலும் அது ஊர்க்கதையாக, நமது பேச்சுவழக்காக இருப்பதில்லை. இதெல்லாம் குற்றத்திற்குரியதல்ல. தவறுமல்ல. தவிர்க்க முடியாத, புரிந்து கொள்ளக்கூடிய மாறுதல்களே. காலமும் சூழலும் உண்டாக்கிய விதியும் வினையுமிது.

இந்தத் தொழில் வழங்குநரின் குடும்பமும் ஐரோப்பிய நாடொன்றிலேயே உள்ளது. அதனால் அது வளமாக இருக்கிறது. அதனால் இங்கும் (இலங்கையிலும்) அவர்கள் தொழில் முயற்சிகளை ஆரம்பித்திருக்கிறார்கள். இது நல்லதொரு பணியே. போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களில் ஐம்பது, அறுபது பேருக்கு மேல் ஊரிலே வேலை செய்யக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியிருப்பது பாராட்டுக்குரியதே. ஆனால், புத்திநாதனுக்குத்தான் வாய்ப்புக் குறைவாக உள்ளது. புத்திநாதனுக்கு மட்டுமல்ல, திருச்சி முகாமிலிருந்து வந்த கண்மணி, மதுரையிலிருந்து வந்த ராஜேந்திரன் போதகர் போன்றவர்களின் நிலையும் இதுதான்.

அகதி வாழ்க்கை இனி வேண்டாம் என்று தமிழகத்திலிருந்து வந்தால் நம் கண்ணுக்கு அது என்னவாகப்படுகிறது? இதைத்தான் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

புத்திநாதன் ஊருக்குத் திரும்பியபோது மகிழ்ச்சியாகவே இருந்தார். இருபத்தைந்து ஆண்டுகளாகக் காணத்துடித்துக்கொண்டிருந்த கனவு நிலத்தை நிஜத்தில் மீளக் காணும்போது உண்டான மகிழ்ச்சி அது. "சொர்க்கமே என்றாலும் அது நம்மூரைப்போல வருமா?" என்று வாய்விட்டே சொல்லிக் கொண்டார்.

உண்மையிலேயே உடலெல்லாம் சிலிர்த்தது. வந்த கையோடு ஊரைச் சுற்றிப் பார்த்தார். அடையாளம் காணக் கடினமான நிலையில் பலதும் மாறி விட்டன. கால மாற்றமா அல்லது சமூக வளர்ச்சியா அல்லது போர் உண்டாக்கிய விளைவுகளா அல்லது எல்லாம் கலந்து உண்டாக்கிய மாற்றமா என்று தெரியவில்லை.

புத்திநாதன் ஊரிலிருந்து சென்றபோதிருந்த அடையாளங்களில் குளமும் இரண்டு கோயில்கள் மட்டும் அப்படியே இருந்தன. மற்றவையெல்லாம் மாறி விட்டன. சில இடங்களில் புதிய வீதிகளே உருவாகியுள்ளன. காடும் ஒதுக்குப் புறமுமாக இருந்த இடங்களில் வீடுகள், தோட்டங்கள், பொதுநோக்கு மண்டபம் என்று ஒரு புதிய குடியிருப்பே வந்துவிட்டது.

புத்திநாதனுக்குத் தெரிந்த சனங்களில் பாதிப்பேரைக் காணவேயில்லை. பலரை அடையாளம் காணமுடியவில்லை. இருப்பவர்களில் பலரும் வேறமாதிரித்தான் தெரிந்தார்கள். அநேகமாகத் தெரிந்தவர்களையெல்லாம் முதுமை பிடித்துக் கொண்டிருந்தது. காலம் விசித்திரமான ஒன்றுதான். அது நம் காலடியின் வழியாக நமக்குத் தெரியாமல் நழுவிச் செல்லும்போது, ஆயிரமாயிரம் மாற்றங்களை உண்டாக்கி விட்டுச் செல்கிறது. புத்திநாதனும் இப்பொழுது ஐம்பதை நெருங்கியவராகி விட்டாரே.

புத்திநாதனை ஊரும் உறவுகளும் இரண்டு மாதங்களாகக் கூடிக் கொண்டாடினார்கள். என்னதான் மகாராஜா என்றாலும் விருந்தாளி என்றால் எட்டு நாளைக்குத்தான் மதிப்பும் மரியாதையுமல்லவா! அதற்குப் பிறகு அந்த அன்புக் கிறீமும் மதிப்புக் கண்டோசும் கரைந்து போய் விடும்.

புத்திநாதன் அக்கா வீட்டில் தங்கியிருக்கிறார். புத்தி தன்னோடிருப்பது அக்காவுக்குக் கொள்ளை ஆசை. நீண்டகாலமாகப் பிரிந்திருந்த தம்பி வந்து தன்னோடிருப்பது என்றால் எந்த அக்காவுக்குத்தான் கொண்டாட்டமில்லாமல் போகும்?

ஆனால் புத்திநாதனுக்கு இது கஸ்டமாகவும் சங்கடமாகவும் இருக்கிறது. நாம் வந்தோம். பத்தோ இருபதோ நாட்கள் விருந்தாளியாக இருந்தோம். சொந்தங்களோடு கொண்டாடினோம். இது போதும். இதற்குப் பிறகு நமக்கென்றொரு வேலையை எடுத்துக் கொண்டு நம்முடைய பாட்டைப் பார்க்க வேண்டும். இல்லையென்றால் மெல்ல மெல்லக் கசப்புகள் உருவாகத் தொடங்கிவிடும் என்றுதான் புத்திநாதன் வேலைக்காக முயற்சிக்கிறார். ஆனால், இதற்குள் ஐந்து மாதங்கள் கடந்து விட்டன. வேலைதான் இன்னும் தொடவே முடியாத நட்சத்திரமாக உள்ளது.

இருக்கின்ற ஒரு துண்டு நிலத்தில் ஒரு குடிசையைப் போடலாம். அதற்கும் பணமும் உதவிகளும் தேவையே. அகதிகளாக இருந்து வந்தோருக்கான உதவி என்ற அடிப்படையில் அதற்கான பதிவுகளை பிரதேச செயலகத்தில் செய்திருக்கிறார். ஆனால், இதெல்லாம் சரியாகி வருவதற்கு ஆறு மாதமோ ஓராண்டோ ஆகும். அதற்குள் ஆட்சி மாற்றம், தலைமை மாற்றம் என்று ஏதும் நாட்டில் நடந்து விட்டால் இதெல்லாம் இன்னும் பின்னுக்குத் தள்ளிப் போகும். இப்பொழுது ஒரு தேர்தல் வேறு வந்திருக்கிறது. அதிலே ஆளாளுக்கு ஏதேதோ எல்லாம் பேசுகிறார்கள். இதில் எது உண்மை? எது பொய்? எது நடக்கும்? எது நடக்காது? என ஒன்றுமே புரியவில்லை.

இந்தக் குழப்பங்களில் சிலவேளை பேசாமல் திரும்பி இந்தியாவுக்கே - தமிழ் நாட்டுக்கே - போய் விடலாமா என்று தோன்றும். ஆனால் அது தாயின் கருப்பையில் மீளப்போய் குடியிருப்பதைப்போலச் சாத்தியமற்றது. முடிவில்லாத சாபத்தைப்போலத் தொடர்ந்து கொண்டிருக்கும் அகதி வாழ்க்கையை விட்டுத் தொலைக்க வேண்டும் என்று ஊர் தேடி வந்தவர் இன்னும் அகதியாகவே இருப்பதென்பது கொடுமையிலும் கொடுமையே. ஆனாலும் வேறு வழியில்லை.

முன்பு இரவல் நாட்டில் இரவல் வாழ்க்கை. இப்பொழுது சொந்த ஊரில் இரவல் வீடு. புத்திநாதனுக்கு என்ன நடக்கிறது என்று புரிந்து கொள்ளவே கடினமாக இருந்தது. அகதிகளுக்கான ஐ.நாவின் பரிந்துரைகளையும் உலக வியாக்கியானங்களையும் இரண்டு நாட்கள் முழுவதும் தேடி எடுத்துப் படித்துப் பார்த்தார். ஏராளம் ஏற்பாடுகளும் உறுதியுரைகளும் சொல்லப்பட்டிருந்தன. உள்நாட்டுக் குறிப்புகளையும் படித்துப்பார்த்தார். அவற்றிலும் ஏராளம் உத்தரவாதங்கள் அளிக்கப்பட்டிருந்தன. ஆனால் எல்லாம் நடைமுறையில் குறைவாகவும் பலவீனமாகவுமே இருந்தன.



இதற்கு என்னதான் முடிவு என்று தீவிரமாக யோசித்தார். பேசாமல் எங்காவது போய் விடலாமா? எங்காவது என்றால்...

"அகதிகளாக எங்கும் செல்ல வேண்டாம். ஆபத்தான கடல் வழியில் பயணித்து அகதித் தஞ்சம் கோர முற்படாதீர்கள். அது உங்களுக்கு உதவப்போவதில்லை" என்று சொல்கிறது வானொலி விளம்பரமொன்று. இந்த விளம்பரத்துக்கான அனுசரணையை வழங்குகிறது அவுஸ்திரேலிய அரசாங்கம்.

அகதிகளுக்கான கதவுகள் உலகெங்கும் சாத்தப்படுகின்றவா? அப்படியென்றால் உள்நாட்டில் வாழக் கதியற்றவர்களின் கதியென்ன?


அகதிகளின் கதைக்கு முடிவேயில்லை.

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI
நவம்பர் 2019 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162

# மாவீரர் வார சிறப்பிதழ்



மெல்பேர்ணிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்




இந்திரலிங்கம்
சயந்தன்

# தமிழீழ மாவீரர் நாள் வெறும் சடங்கல்ல

# பெரும் சரித்திரத்திற்கான சத்திய நாள்!

புலம்பெயர் நாடுகளில் மாவீரர் நாளை நீ நடத்துவதா நான் நடத்துவதா என்று போட்டியிடுகின்றனர். இவ்வாறு ஒரே அமைப்பில் இருந்துகொண்டு போட்டியிடுவதிலும்பார்க்க இவர்கள் மாவீரர் நாளை அனுஷ்டிக்காமல்விடுவது மாவீரர்களுக்கு செய்யும் நன்றிக்கடனாக இருக்கும்" - இவ்வாறு கவிஞர் காசி ஆனந்தன் தெரிவித்தார்.

ஏதிரொலிக்கு வழங்கிய செவ்வியிலேயே கவிஞர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**எதிரொலி: ஈழத்தில் அனுட்டிக்கப்பட்ட முதலாவது மாவீரர் தினத்தில் நீங்கள் பங்கு பற்றினீர்களே. இன்றைய கால கட்டத்தில், அந்த ஞாபங்கள் குறித்த உங்கள் மனப்பதிவுகள் என்ன?**

பதில்: முதலாவது மாவீரர் நாள் நன்றாக நினைவிருக்கின்றது. தலைவர் அலம்பில் காட்டில் அவருடைய முகாமில் இருக்கின்றார். நான் வன்னிக்காட்டில் எங்களுடைய முகாமில் தங்கியிருக்கின்றேன். அந்த நேரத்தில்தான் மதிப்புக்குரிய தலைவர் பிரபாகரனிடம் இருந்து ஒரு செய்தி தொலைத்தொடர்பு கருவியில் வருகின்றது.என்னுடன் யோகியும் இருந்தார்.

'தமிழீழ போராட்டத்திற்காக மடிந்த போராளிகளை ஒவ்வொரு ஆண்டும் நன்றியுடன் நினைவு கூறவேண்டியிருக்கின்றது. அதை உனடியாக தொடங்கப்போகின்றோம். ஆகவே அந்த நாளுக்கு 'தியாகிகள் தினம்' என்று பெயர் வைக்கலாம் என்று கருதுகின்றேன். காசி அண்ணாவிடம் கேளுங்கள' - என்று தம்பி தலைவர் அனுப்பிய செய்தியை யோகி என்னிடம் சொன்னார்.

'தியாகி என்பது ஒரு தமிழ் சொல் அல்ல. அது ஒரு வடமொழி சொல். தினம் என்ற சொல்லும் அப்படித்தான். ஆகவே, தியாகி,தியாகம் என்பதை விட தியாகத்துக்கு அடிப்படையானது வீரம். வீரம் என்பது தமிழீழத்தில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. எந்த நாட்டிலும் நிகழாத வீரச்செயல்களை நமது போராளிகள் நம் மண்ணில் நிகழ்த்திக்காட்டியுள்ளனர். ஈடு இணையற்ற வீரம். அதுவே மாவீரம். 'மாவீரர்கள் நாள்' என்று பெயர் வையுங்கள்' - இதுதான் நான் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பிய என்னுடைய கருத்து.

தலைவர் பிரபாகரனும் அதனை ஏற்றுக்கொண்டார். தலைவர் பிரபாகரன் முதலாவது மாவீரர் நாளை அறிவிக்கின்றார். அன்றிலிருந்து இன்றுவரை மாவீரர் நாள் அனுட்டிக்கபட்டுவருகின்றது.

**எதிரொலி: எந்த இடதில் முதன் முதலாக மாவீரர் நாள் ஆரம்பிக்கப்பட்டது என்று கூற முடியுமா?**

பதில்: எல்லா இடங்களிலுமே அனுஷ்டிக்கப்பட்டது. உலகம் முழுவதுமான அறிப்போடுதான்"மாவீரர் நாள்" ஆரம்பமானது.

**எதிரொலி: மாவீரர் நாள் நிகழ்வுகளை 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் - பின்னர் என்று சிலர் வேறுபடுத்தி நோக்குகிறார்கள். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: அது தவறான பார்வை. மாவீரர் நாள் என்றால் மாவீரர் நாள்தான். அதற்கு ஆண்டுகளை வைத்து பிரித்துப்பார்ப்பது தவறான அனுகுமுறை. மாவீரர்கள் தமிழீழம் இருக்கும் வரை நினைவுகூரப்பட வேண்டியவர்கள். காலம் கடந்தும் தமிழீழ மக்களின் போரட்டங்கள் இன்று முன்னெடுக்கப்படுக்கப்பட்டுக்கொண்டிருப்பது அவர்களின் வீரத்தாலும் ஈகத்தாலும்தான் என்பது என்னுடைய பணிவான கருத்து. மாவீரர்கள் எந்தக்காலத்துக்கும் உரியவர்கள். காலம் எப்போதும் அவர்களுக்கு வரையறை கிடையாது.

## கொடியும் சின்னமும் இல்லாமல் "மாவீரர்களை போற்றுங்கள்" என்று கூறும் சிங்கள தேசம் ஏன் மாவீரர்களின் கல்லறைகளை தகர்த்தது?

**எதிரொலி: வடக்கு- கிழக்கு தமிழ் மக்கள் மாவீரர் நாளை நினைவு கூருவதற்கு தெற்கில் தொடர்ந்தும் எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் உங்கள் கருத்து?**

பதில்: தெற்கில் எதிர்ப்பு தெரிவிக்கத்தான செய்வார்கள். ஏனெனில் அவர்கள் நம்முடைய எதிரிகள். ஏதிரிகள் நம்முடைய போராளிகளை மாவீரர்கள் என்று என்றைக்கும் கருதமாட்டார்கள். எங்களுடைய மக்களை கொன்ற சிங்கள வெறியர்கள் அவர்களுக்கு மாவீரர்கள். ஆகவே தமிழ் மக்கள் மாவீரர் நாளை கடைப் பிடிக்க அவர்கள் ஒருபோது இசைவு தரமாட்டார்கள்.

**எதிரொலி: தேசியக்கொடி, சின்னங்கள் மற்றும் பாடல்களை பயன்படுத்தாமல் மாவீரர்களை நினைவு கூர தடையில்லை என்ற இலங்கையின் நீதிமன்ற தீர்ப்பை எப்படிப்பார்கிறீர்கள்?**

பதில்: சிங்கள அரசின் நீதிமன்றங்களில் எந்த பொருளும் இருப்பதாக தோன்றவில்லை. நீதியே செத்துப்போன ஒரு மண்ணில் நீதிமன்றங்களை நம்பமுடியவில்லை. சிங்கள அரசு சில விளையாட்டுகள் விளையாடுவார்கள். அவற்றில் ஒன்றுதான் இந்த நீதிமன்ற தீர்ப்பு. தேசியக்கொடி, சின்னங்கள் தவிர்த்து மாவீரர் நாளை அனுட்டியுங்கள் என்று சொல்லுவதெல்லாம் பச்சை நாடகங்கள். "மாவீரர்களை போற்றுங்கள்" என்று சொன்னால் மாவீரர்களின் கல்லறைகளை உழுது உடைந்தெறிந்திருக்க தேவை இல்லை. உடைத்தெறிந்திருக்கவும் மாட்டார்கள்.

**எதிரொலி: நடுகல் நமது வீரத்தின் அடையாளம். பழந்தமிழர்கள் நடுகல் வழிபாட்டின் மூலம் போரில் மாண்ட வீரர்களை போற்றினர். பழந்தமிழ் ஏடுகளிலும் நடுகல் குறித்து அறியமுடிகிறது. அதன் மீட்சியாகவே மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைக்கப்பட்டன. ஆனால் இலங்கை அரசு துயிலும் இல்லங்களை அழித்துள்ளது. இது குறித்து?**

பதில்: விக்டர் என்ற மாவீரனின் கல்லறையை சிங்களப்படைகள் உடைத்து அதற்குள் இருந்த எலும்புகளைக்கூட எரித்தனர். எலும்பாகக்கூட அந்த மண்ணில் இருக்க முடியவில்லை.

அதுமட்டுமல்ல,சில இடங்களில் மாவீரர்களின் சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றையும் இடித்தழித்தனர். சிலைகளாகக் கூட நம்மால் அங்கு நிற்க முடியவில்லை. கல்லறைகளை கூட உடைத்தெறிந்தனர்.

ஆகவே, மாவீரர்கள் எந்த வடிவில் நின்றாலும் அது சிங்களவர்களுக்கு எரிச்சல் ஊட்டுவதாகவும் அச்சம் ஊட்டுவதாகவும் இருக்கின்றனர்.

எனக்கு நினைவு வருகின்றது, நான் காட்டில் வாழ்ந்த காலத்தில் கஸ்தூரி என்ற பெயருடைய போராளி ஒருவர் என்னுடன் இருந்தார். அவள் மிகபெரிய இலக்கியங்களை எல்லாம் செய்தவள். நாடகங்களை எழுதியவள். அவளும் களத்தில்தான் மடிந்தாள். அவள் எழுதிய ஒரு கவிதையில் "கருத்தரிக்கும் என் கல்லறை" என்று சொன்னாள். மூன்றே மூன்று சொற்கள்தான். இதற்கிணையாக எந்தப்பெரிய பெரிய இலக்கியமும் இருக்கும் என்று எனக்கு தெரியவில்லை. வழக்கத்தில் ஒரு தாயின் கருவறைதான் கருத்தரிக்கும். ஒரு கல்லறை கருத்தரிக்கும் என்ற கஸ்தூரியின் வரிகளுக்கு உயிர் உள்ள இடம் தமிழீழம்தான். அதைத்தான் உடைத்தெறிந்தார்கள்.

( III ஆம் பக்கம் பார்க்க)



# தமிழீழ மாவீரர் நாள் வெறும் சடங்கல்ல

## பெரும் சரித்திரத்திற்கான சத்திய நாள்!

( II ஆம் பக்கத் தொடர்ச்சி)

**எதிரொலி: மிக முக்கியமான மாவீரர் துயிலுமில்லங்களை இராணுவ முகாம்களாக இலங்கை அரசு உருமாற்றியிருக்கிறது. இதன்மூலம் மாவீரர் பற்றிய நினைவுகளை மெல்ல மெல்ல சிதைக்க முடியுமென அவர்கள் நம்புகிறீர்களா?**

பதில்: ஒருபோதும் நடக்காது. இராணுவ முகாங்களாக மாவீரர் துயிலும் இல்லங்கள் மாறலாம். மாற்றப்படலாம். ஆனால் மாவீரர்கள் வரலாற்றில் இருந்து அழிக்கப்பட முடியாதவர்கள். அகற்றப்படவும் முடியாதவர்கள். ஒவ்வொரு மாவீரனுடைய கதையும் காவியம். ஒரு சிலருடைய வரலாறுதான் எழுதப்பட்டுள்ளது. இன்னும் முழுமையாக எழுதப்படவில்லையே தவிர, எழுதினால் ஒவ்வொரு மாவீரனுடைய வரலாறும் பெரிய காவியமாகும். மாவீரர்களின் உயிர்கள் மிக பெறுமதியானவை. அவற்றை எப்படி மறக்க முடியும்.

**எதிரொலி: நீங்கள் சொன்ன மாதிரியே மாவீரர்களுடைய வரலாறுகள் ஒரு சிலது தான் உள்ளன. இன்னும் காலம் செல்ல செல்ல அவர்களுடைய வரலாறுகள் முற்றாக மறந்து போகலாம். அப்படியானால், ஆவண ரீதியாக அவற்றை எவ்வாறு எழுதலாம் அல்லது கோவைப்படுத்தலாம் என்று எண்ணுகிறீர்கள்?**

பதில்: இது கட்டயம் செய்யப்பட வேண்டிய ஒன்று. மாவீரர்களின் உறவினர்கள் அல்லது நண்பர்கள் இன்று பல நாடுகளிலும் உள்ளனர். அவர்கள் அக்கறை எடுக்கவேண்டும். அத்துடன் ஏதாவது ஓர் அமைப்பு இவர்களை ஒருங்கிணைக்க வேண்டும். அவர்களின் ஊடாக தெரிந்தவற்றை எழுதவேண்டும். அவற்றை தொகுக்க வேண்டும். இதுதான ஒரே வழி. எழுத்து வடிவில் பதிவு செய்யப்படவேண்டும்.

**ஏதிரொலி: "முள்ளிவாய்க்கால் முற்றம்" போல மாவீரர் நாளையும் தமிழகத்தில் நினைவேந்த பொது இடம் ஒன்றை நிரந்தரமாக அமைக்க முடியாதா?**

பதில்: என்னைப்பொறுத்தவரை அது அவசியம் இல்லை என நினைக்கின்றேன்.

**ஏதிரொலி: இன்றைய சூழலில் தமிழ்த் தேசிய நெருப்பை தொடர்ந்து தக்கவைப்பதில் மாவீரர் நாளின் வகிபாகம் என்ன?**

புதில்: மாவீரர் நாள் வெறுமனே ஆண்டுத்திவசம் கழிப்பது போல் இருந்துவிடக் கூடாது.

மாவீரர்கள் தங்களுடைய புகழை பரப்புவதற்காக களத்தில் நின்று போராடவில்லை. "நான் இறந்து இதுவரை இறந்த தோழர்களுடன் வானத்தில் இருந்து மலர்கின்ற தமிழீழத்தை கண்டுகளிப்பேன" - என்று தீலிபன் சொன்னான். அவனுடய ஏக்கம், தாகம்,தவிப்பு எல்லாம் தமிழீழத்தை காணவேண்டும் என்பதுதான்.

ஆகவே, ஒவ்வொரு மாவீரனின் துடிப்பும் இதுதான். அவன் தமிழீழ விடுதலைக் காகத்தான் கண்களை மூடினான். மாவீரர் நாளை அனுட்டிக்கும் நாம், அதை பல வேளைகளில சடங்காக ஆக்கிவிட்டோமே தவிர, இந்நாளை எப்படி விடுதலைக்கான நாளாக கட்டி எழுப்பமுடியும்,அதற்கு என்ன செய்யலாம் என்று திட்டங்கள் வகுப்பதில் நாம் பின்தங்கியிருக்கின்றோம் என்பது என்னுடைய கருத்து

**எதிரொலி: புலம்பெயர் நாடுகளில் சில வற்றில் மாவீரர் நாளை அனுஷ்டிப்பதில் சில அமைப்புக்கள் குழு மனப்பான்மையோடு பிரிந்து செயற்பட்டு குழப்பத்தை உண்டுபண்ணுவது பற்றி...?**

பதில்: முள்ளிவாய்க்கல் பேரழிவு முடிவுற்று பத்தாண்டுகளின் பின்னர் மாவீரர் நாளை இரண்டு குழுக்களாகவா மூன்று குழுக்களாகவா நடத்துவது என்ற மோதல்களை எல்லாம் பார்க்கமுடிகிறதுதான். இந்த மோதல்கள் விடுதலைப்போரை எந்தக் காலத்திலும் முன்னெடுக்காது. இச்செயல்கள் மாவீரர்களுக்கு செய்யும் பச்சை இரண்டகமாக இருக்கும். இரண்டு குழுக்கள் 'மாவீரர் நாளை நீ நடத்துவதா, நான் நடத்துவதா' என்று ஒரே அமைப்பில் இருந்து போட்டியிடுவதைக்காட்டிலும் மாவீரர் நாளை அனுட்டிக்காமல்விடுவது மாவீரர்களுக்கு செய்யும் நன்றிக்கடனாக இருக்கும் என்பது என்னுடைய பணிவான கருத்து.

**எதிரொலி: கடந்த மூன்று வருடங்களாக மாவீரர் துயிலுமில்லங்களில் நினைவேந்தல் நடைபெறுவதை இலங்கை அரசு கண்டும் காணாதது போல இருக்கிறது. இதன் பின்னணி என்னவாக இருக்கும்?**

பதில்: அவர்கள் கண்டும் காணமல் இருக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. மாவீரர் நாள் நடப்பதற்கு முன்னரே மாணவர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள். நிகழ்வுகளை நடத்தக்கூடாது என்றும் சில தடைகள் விதிக்கப்படுகின்றன. சட்டங்களைக்கொண்டு அவர்கள்மிரட்டிக்கொண்டு தானிருக்கிறார்கள்.

நீங்கள் சொல்வதைப்போல் கண்டும் காணததைப்போல் அரசு இருக்கிறதென்றால், சிலவேளைகளில்,ஐ.நாவில் போர்க்குற்றம் தொடர்பான விவாதங்கள் நடந்து கொண்டிருக்கும்தருணமாதலால், இலங்கையில் அரசு எப்படி நடந்து கொள்கிறார்கள் என உலகம் பார்த்துக்கொண்டிருக்கின்றது. அதை சமாளிப்பதற்காக இந்த கள்ளமௌனத்தைக் கடைப்பிடிப்பதாக இருக்கலாம். அல்லது தேர்தல் அரசியலுக்கான கள்ளத்தனமான - குள்ளத்தனமான - நோக்கமாகவும் இருக்கலாம். இந்த இரண்டில் ஒன்றாக இருக்கலாம்.

**எதிரொலி: மாவீரர் நாளில் தமிழ் மக்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது?**

புதில்: இந்த மாவீரர் நாளில் உலகம் எங்கும் பரவி வாழும் தமிழீழ மக்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் நான் பணிவோடு தெரிவிக்க விரும்புவது, உலகத்தில் உள்ள தமிழினம் கருத்து வேறுபாடு, அணுகுமுறை வேறுபாடு என்பவற்றை மறந்து, உடனடியாக தமிழீழ விடுதலைக்கு என்ன வழி என விரைந்து செயலாற்ற முன் வரவேண்டும்.

தனித்தனியாக குழுக்களை உருவாக்கி சிந்தித்து அச்சிந்தனைகள் ஒன்றாக சேராமல் சிதறி சிதறி பத்தாண்டுகள் விரயமாகி விட்டன. தாயகம்,தமிழ்நாடு மற்றும் புலத்தில் இருக்கும் அரசியல் தலைவர்கள் இந்திய அரசின் அணுசரணையுடன் தமிழீழத்தை பெறுவதற்கு திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

தலைவர் பிரபாகரனின் இறுதி மாவிரர் நாள் உரையிலும் அவர் தெளிவாக சொன்னது இதைத்தான்.

இலங்கையில் சீனாவின் தலையீடுகள் அதிகரித்து வருகின்றன. இந்தியப் பிரதமர் சீனா பிரதமருடன் கைகுலுக்கிக் கொண்டாலும் இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் இந்தியாவுக்கு சவாலே என்று பழ. நெடுமாறன்கூட அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொருதருணத்தில் எல்லோரும் சேர்ந்து இந்திய அரசை பங்களதேஸ் விடுதலையில் தலையிட்டதைப்போல் ஈழ விடுதலையிலும் துணை நிற்கவேண்டும் என்று கோரிக்கையை வைத்தாகவேண்டும். அந்தக்காலம் தள்ளிப்போகக்கூடாது என்பது என்னுடைய பணிவான கருத்து.

இதை நான் சொல்வதற்கு காரணங்கள் நிறைய உள்ளன.

இந்திய அரசமைப்பில் சீக்கிய மதமும் சமண மதமும் பௌத்த மதமும் இந்து மதத்தின் கூறுகள் என கூறப்பட்டுள்ளது. இது ஒரு கொடுமையான நிலை. ஏனென்றால் கடவுள் உண்டு என்று சொல்வது இந்து சமயம். கடவுள் இல்லை என்று சொல்வது பௌத்த சமயம். அப்படியிருக்கும்போது,எப்படி பௌத்த சமயம் இந்து சமயத்தின் கூறாக இருக்க முடியும் என்பது எனக்கு தெரியவில்லை.

ஆனால்,இலங்கை அரசமைப்பில் அப்படி அல்ல. பௌத்தமே இலங்கையின் மதம். அது இந்து மதத்தின் கூறு என்று அங்கு சொல்லப்படவில்லை. இந்து மதம் பௌத்த மதத்துக்கு எதிரான மதம் என்று சிங்களவன் கருதுகிறான். ஆகவே தமிழீழத்தில் உள்ள ஆலயங்களில் புத்த சிலைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சிங்களவர்கள் மத அடிப்படையிலும் எங்களை அழிக்கிறார்கள். இந்தியா இந்து மதம் தங்களது உயிர் என்று தலையில் வைத்து கொண்டாடுகிறது. ஆகவே இந்திய அரசு தலையிடுவதற்கான பல காரணங்கள் உள்ள காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

உலகில் வாழும் தமிழ் மக்கள் இம் மாவீரர் நாளில் இதைப்பற்றி சிந்திக்க வேண்டும். பெரிய கவலை என்னவென்றால், இலங்கையில் இருக்கும் அமைப்புக்கள் ஒன்றாகக்கூடி இந்திய அரசிடம் இவ்வாறான ஒருகோரிக்கையை இதுவரை முன் வைக்கவில்லை.

அதேவேளை "இந்தியாதானே எங்களை அழித்தது"என்று இன்னமும் வாதம் நடத்திக்கொண்டிருக்கும் கூட்டமும் இருக்கிறது.

கர்நாடகத்தில் காவேரி பிரச்சினை என்றால் காங்கிரசும் பிஜேபிக்காரனும் ஒன்றாக சேர்கிறார்கள். சேர நாடு மலையாளமாக கேரளமாக எவ்வாறு மறியதோ அதைப் போல் தமிழீழமும் சிங்கள தேசமாக மாறும் நிகழ்வு நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் ஆளும் பிஜேபியும் காங்கிரசும் ஒரே மேடையில் நின்று "தமிழீழ விடுதலைக்காக இந்திய தலையிட வேண்டும்" - என கோரிக்கை வைக்கவில்லை. அதை யாரும் உருவாக்க முனையவில்லை. இது ஒரு துயரம். ஆகவே உலகில் உள்ள தமிழர்கள் இதற்கான முயற்சியல் ஈடுபட வேண்டும் என பணிவாக கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

**போராளி கஸ்தூரி "கருத்தரிக்கும் என் கல்லறை" என்று சொன்னாள். மூன்றே மூன்று சொற்கள்தான். இதற்கிணையாக எந்தப்பெரிய பெரிய இலக்கியமும் இருக்கும் என்று எனக்கு தெரியவில்லை.**



# மாவீரர் துயிலும் இல்லங்கள்

**மட்டக்களப்பு:**
தரவை
தாண்டியடி
கல்லடி
மாவடி

**கிளிநொச்சி:**
கிளிநொச்சி
முழங்காவில்
வவுனியா:
ஈச்சங்குளம்

**முல்லைத்தீவு:**
முள்ளியவளை
அலம்பில்
ஆலங்குளம்
வன்னி விளான்குளம்
விசுவமடு
இரணைப்பாலை

**அம்பாறை:**
கஞ்சிகுடிச்சாறு

**மன்னார்:**
ஆட்காட்டி வெளி
பண்டிவிரிச்சான்

**யாழ்ப்பாணம்:**
கோப்பாய்
கொடிகாமம்
சாட்டி (வேலணை)
எள்ளங்குளம்
உடுத்துறை

**திருகோணமலை:**
பெரியகுளம்
ஆலங்குளம்
உப்பாறு
தியாகவனம்

மொழியாகி, எங்கள் மூச்சாகி, நாளை
முடிசூடும் தமிழ் மீது உறுதி.
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி.
விழிமூடி, இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி.
இழிவாக வாழோம், தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! - இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் - அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

நள்ளிரா வேளையில் நெய்விளக்கேற்றியே
நாமும் வணங்குகின்றோம் - உங்கள்
கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்
சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்
சந்ததி தூங்காது - எங்கள்
தாயகம் வரும் வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் - அதை
நிரை நிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியரசு(சு) என்றிடுவோம் - எந்த
நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின்
நினைவுடன் வென்றிடுவோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

# முதலாவது மாவீரர் தின உரையில் தலைவர் சொன்னது என்ன?



இதுவரை காலமும் எமது புனித இலட்சியமானதமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த் தியாகம் செய்த போராளிகளை நினைவு கூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம்.

எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காகப் போரிட்ட படை வீரர்களின், பாதுகாப்புக்காகப் போரிட்ட படை வீரர்களின் நினைவாகவும் இப்படிப்பட்ட மாவீரர் நாட்களை கொண்டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும் இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாளைக் கொண்டாடுவது வழக்கம். வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒரு நாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவு அடைந்த சங்கரின் நினைவு தினமாக மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அத்தோடு வழமையாக எங்கள் மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள் இப்படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல்எமதுவிடுதலைப்போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் என்னும் ஓர் நோக்கத்துடனும் இந்த நாளை கொண்டாட முடிவு எடுத்துள்ளோம். அதாவது எமது போராளிகளை நினைவு கூரும் தினத்தை ஒருநாளில்வைப்பதால்எல்லோரும்அன்று எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த தலைவர்களில் இருந்து சாதாராணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிறோம் என்பதுடன், வீரச்சாவு அடைந்த எல்லாப் போராளிகளின் நினைவு நாட்களையும் ஒன்றாக நினைத்து மாவீரர் நாளாக கொண்டாடுகிறோம். காலப் போக்கில் குறிப்பிட்ட சில ஆட்களுக்கே முக்கியத்துத்துவம் கொடுக்கப்படும் நிலை தடுக்கப்பட்டு எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவு கூரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாவீரர் நாளைக் கொண்டாடுவதற்கு முடிவெடுத்தோம். ஓர் இனத்தைப் பொறுத்தவரை வீரர்களையும் அறிவாளிகளையும் பெண்களையும் மதிக்காத ஓர் இனம் காட்டுமிராண்டி இனமாகத்தான் மாறி அழிந்து விடும். எங்களுடைய இனத்தில் அறிவாளிகள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது எங்கள் இனத்தில் பெண்கள் புனிதமாக மதிக்கப்படுகிறார்கள்.

அதே வேளை வீரர்களுக்குத் தான் பஞ்சமாக இருந்தது. ஆனால் இன்று இந்த மாவீரர் நாளில், ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டோம். ஆம், எமது வீரர்களைக் கூட நாம் கௌரவிக்க ஆரம்பித்துள்ளோம். இதுவரை காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயமாக அழியாது.

எமது இனம் உலகிலேயே தலை நிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1307 போராளிகளின் உயிர்த்தியாகம் தான். அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட ஆரம்பிக்க வேண்டும்."

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!.

(1989இல் முதலாமாண்டு மாவீரர் நாள் விழாவில் மேதகு பிராபாகரன் ஆற்றிய உரையின் ஒரு பகுதியே மேற்படி உரையாகும். அன்று முதல் பிரபாகரன் அவர்கள் மாவீரர் நாள் உரையை 2008ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 20 ஆண்டுகள் நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.)





# மாவீரர் வழிபாட்டு நடைமுறைகள்

## இதயக்கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்

"எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புகள் அர்த்தமற்ற இழப்புகள் அல்ல. இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக – எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகம் அளிக்கும் ஊக்குசக்தியாக – அமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திரச்சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச்சென்ற வீர மறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக – கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக – தமது இன்னுயிரை ஈந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் ( தியாகிகள் ) காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.

"ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப் பிறவி அல்ல. அவன் ஓர் இலட்சியவாதி. ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன் தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக – விமோசனத்திற்காக – வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது. அர்த்தமுள்ள சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப்பிறவிகள், அசாதாரணமான பிறவிகள்."





## அலங்காரம் (சோடனை)

வீரச்சாவு, வீரவணக்கக்கூட்டம், துயிலுமில்ல, மாவீரர் விசேடநிகழ்வு, வேறு அனைத்து நிகழ்வுகளுக்கான அலங்காரங்கள், சமூக சமய, வேறு அரசியல் சார்ந்ததாக இருக்காமல் சிவப்பு, மஞ்சள் நிறங்களைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

துயிலுமில்ல மைதான நடுவில், பீடத்தில் சற்று உயரமான பெரிய சுடர் நாட்டப்பட்டிருக்கும். மக்கள் வெள்ளம் உணர்வு கொந்தளிப்போடு மைதானத்தைச் சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைத்திடத் தீச்சுடர் ஏற்றப்படும். பொதுவான ஒருவர் மத்திய சுடரை ஏற்ற மாவீரரின் பெற்றோர் உரித்துடையோர் தீச்சுடரை சமகாலத்தில் ஏற்றுவர். சமகாலத்தில்ஒவ்வொருஇல்லங்களிலும், வாசலிலும்மாவீரரின் சுடர்ஒளியை அனைவரும் ஏற்றுவர்.

சுடரானது சுவாலைவிட்டெரியும். ஒவ்வொருசுடர்களிலும் மாவீரர்களின் முகங்கள் பிரகாசிக்கும். தமிழர் தாயகம் முழுவதும் சுடரொளி ஓங்கிப்பரவும். மக்கள் குமுறி எழுந்து கண்ணீர் விட்டு நிற்க தியாகிகளின் காவியங்கள் ஒவ்வொரு தமிழ் மக்கள் உணர்வுகளிலும் மீட்டப்படும்.

சுடரேற்றி தியாக தீபங்கள் இவை என்று கூறத்தக்கதாக நினைவு கூரப்பட வேண்டும். வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் போல தமிழர் தாயகமெங்கும் மாவீரர் சுடர்கள் இந் நேரத்தில் ஒளிர வேண்டும். சிட்டி விளக்கேற்றக்கூடிய இடங்களில் தொகையான சிட்டி விளக்குகள் ஏற்றி நினைவு கூரலாம். வாசலில் தீபங்கள் எரியும் போது பொது இடங்களில் பெரிய சுடர்களை ஏற்றியும் நினைவுகூர வேண்டும்.

இந்த சுடரேற்றும் நிகழ்வானது, விடுதலைப்பாதைக்கு உறுதியையும், உணர்வையும் கொடுத்து நிற்கின்றது.

## தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்து...



"மாவீரர்
தேச விடுதலைக்காகத் தம்மை
முழுமையாக அர்ப்பணித்தும்
எதிரி பாசறையை
வெடிகுண்டு கொண்டு தகர்க்கும்
சத்திய வேள்வியில் நித்தமும் வேகி
கொடியது பறந்திட
உயிரினை ஈந்து
உடலை உரமிட்டு
செங்குருதியால்
வரலாறு படைத்து
தமிழர் மண்ணெங்கும்
நினைவுச் சிலைகளாய், ஓவியமாய்
வெள்ளை மலரேந்திய
வேதங்களாய்
ஈழமண்ணில் புதுவிதையாய்
விடுதலையின் தீச்சுடராகி
தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே
மாவீரராவர்.

## ஏன் இவர்கள் மாவீரர்கள்?

தமிழ் இனவிடிவுக்காய் மரணித்தவர்கள். தேசம் தூங்கியபோது விழித்திருந்தவர்கள். உணர்வுத் தீயை தமக்குள்ளே சிறைபோட்டவர்கள் தேசமக்களின்பாசப்பிணைப்புகளுக்காகதமது பாசங்களைப்பொசுக்கியவர்கள். பள்ளிப்பராயத்தை பள்ளித் தோழருக்காய் பறிகொடுத்தவர்கள்.

ஊரெல்லாம் உறங்கும்வேளை உறக்கமின்றி விழித்தவர்கள் எல்லைசுற்றி வேலிச்சிலையாக நின்றவர்கள் தமது மக்களுக்காக கால்களை, கரங்களை இழந்து நின்றவர்கள்.

## மாவீரர் நாள் நவம்பர் 27

தங்கள் இன்னுயிரை ஈந்து விடுதலைப் போருக்கு வீறு சேர்த்த மாவீரர்கள் அவர்களின் தலைமுறையிலேயே போற்றப்பட வேண்டும். அவர்களின் வீரங்களும் ஈகங்களும் அரும்செயல்களும் மக்களிடத்தில் எடுத்துச் செல்லப்பட வேண்டும். அந்த மாவீரர்களின் பெற்றோர்களும் குடும்பத்தினரும் அவலப்படக் கூடாது என்ற நோக்கின் அடிப்படையில் உருவானதுதான் மாவீரர் நாள்.

விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்து உரமாகிப் போன மாவீரர்களின் எண்ணிக்கை பத்து நூறு என்ற நிலை மாறி ஆயிரக்கணக்காக உயர்ந்துவிட்ட நிலையில் ஒவ்வொரு மாவீரர்களையும் தனித்தனியாக அவரவர் நினைவு நாட்களில் நினைவு கூருவதைத் தவிர்த்து விடுதலைப் போரின் முதல் மாவீரரான லெப்டினன்ட் சங்கர் அவர்கள் வீரச்சாவடைந்த நவம்பர் 27 ஆம் நாளை பொதுவான நாளாக தேர்ந்தெடுத்து 1989 ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது.

## மாவீரர் வாரத்தை எதிர்கொள்ளுதல்

மாவீரர் நாளானது தமிழர் எழுச்சி நாளாகத் தமிழ் மண்ணெங்கும் கொண்டாடப்படுகின்றது. எழுச்சி மிகுந்த இந்த மாவீரர் வாரமானது நவம்பர் 21 இல் தொடங்கி நவம்பர் 27இல் முடிவடைகின்றது. இம் மாவீரர் நாட்களை அனுட்டிக்கும் முகமாக நவம்பர் 21 ஆம் நாளுக்கு முன்னதாகவே தமிழர் நிலமெங்கும் புனிதப்பட்டு விடுகிறது. மாவீரர் தூபிகள், நிழற் படங்கள் அமைந்த இடங்கள், இல்லங்கள், ஒழுங்கைகள், வீதிகள், கல்விக்கூடங்கள், பொது இடங்கள், காரியாலயங்கள் அனைத்தையுமே மக்கள் அனைவரும் தனித்தும் ஒருமித்தும் புனிதமாக்கிவிடுகின்றனர். இவையாவும் மாவீரர் நினைவாக அலங்கரிக்கப்பட்டு வடக்கு - கிழக்கு தாயகம் புதுப் பொலிவுடன் விளங்கும்.

## நவம்பர் 27 இரவு நிகழ்வுகள்

**நினைவொலி எழுப்புதல். (6.05 மணி )**

கார்த்திகை 27 அன்று 6.05 மணிக்கு அனைத்து வழிபாட்டிடங்களிலும் மணி ஒலி ஒரு மணித்துளி நேரம் எழுப்பப்படும். உயிர்காப்பு பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்திகளும் நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஏற்ற வகையில் நிறுத்தப்பட்டு அமைதி பேணப்படல் வேண்டும்.

**அகவணக்கம் (6.06 மணி )**


மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்டவுடன் 6.06 மணிக்கு மாவீரர்களுக்கான ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்தப்படும். இந்நேரம் இல்லங்களிலும், ஏனைய இடங்களிலும் இருக்கும் தமிழ் மக்கள் எழுந்து நின்று மாவீரர்களை நினைவில் நிறுத்தி அகவணக்கம் செலுத்துதல் வேண்டும்.

**ஈகச் சுடரேற்றுதல் (6.07)**

அகவணக்கம் நிறைவுற்றதும் 6.07 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றப்படல் வேண்டும் (மாவீரர்களின் பெற்றோர் அவரவர் சுடர் ஏற்ற வேண்டிய கல்லறைகள், நினைவுக் கற்களுக்கு முன்னால் 5.15 மணிக்கு நிற்கக்கூடிய வகையில் அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.)

மாவீரர் துயிலுமில்லங்களிலுள்ள மாவீரர் கல்லறைகள், நடுகற்கள் முன்மாவீரர்களின்பெற்றோர், குடும்பத்தினர் அவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் ஈகச்சுடர் ஏற்றுவர்.

இவை தவிர துயிலுமில்லங்களுக்கு வராத பொதுமக்கள் தமது இல்லங்களில், பொது இடங்களில், அலுவலகங்களில், விளையாட்டு இடங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் உரிய நேரத்தில் உரிய முறைப்படி ஈகச்சுடர் ஏற்றும்போது மாவீரர் பாடல் ஒலிக்கப்படும் (மாவீரர் ஈகச்சுடர் ஏற்றப்படும் நேரத்தில் அதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாது வீதிகளில் ரயர்களை எரிப்பதோ அல்லது வேறு வகையில் ஒலி, ஒளி உருவாக்குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.



## நிகழ்வு விதிகளில் அலங்காரங்களும் நிறங்களும்

- சிவப்பு, மஞ்சள், நிறங்களைக் கொண்டும் கறுப்பு கரும்புலிகள் தினத்திற்கும் கரும்புலிகள் சம்பந்தமான நிகழ்வுகட்கு மட்டும் கலந்து சோடிக்கலாம்.

- வீரச்சாவு கல் நாட்டலுக்கு சிவப்பு, மஞ்சள் துணிகளைப பாவித்தல் வேண்டும்.

- மேசைவிரிப்பு, பீடவிரிப்புகளும் சிவப்பு, மஞ்சள் துணியாகவே இருத்தல் வேண்டும். வெள்ளைத்துணி பாவிப்பதை தவிர்த்தல் நன்று.

- இச்சோடனைகள் தனித்துவமாக மாவீரர்களின் தற்கொடைத் தியாகம், அமைப்பு இலட்சியங்களை மக்கள் மனங்களில் தோன்றிப் பதிந்து எமது போராட்டத்தின்பால் இணைந்து செயற்பட வழிசமைத்தல் வேண்டும்.

### கடைப்பிடிக்க வேண்டிய சில நடைமுறைகள் ஆரம்ப நிகழ்வுகள்

1. பொதுச்சுடர்
2. ஈகச்சுடர்
3. மலர்வணக்கம்
4. அகவணக்கம்

● எமது மாவீரர் நிகழ்வுகள் அமைப்பு நிகழ்வுகள் அனைத்திலும் ஈகச்சுடர் ஏற்றுதல் கட்டாயமாகும். மங்கள விளக்கு ஏற்றக்கூடாது

● அகவணக்கத்துக்கு நேரம் குறிக்கக்கூடாது.

### தவிர்க்கப்பட வேண்டியவை

1. அஞ்சலி, மௌன வணக்கம், மலரஞ்சலி, மங்கள விளக்கு, அஞ்சலியுரை, அஞ்சலிக்கூட்டம், அகவணக்கம் - ஒரு நிமிடம் இரு நிமிடம் எனக்குறித்துக் கூறுதல்.
2. தமிழரின் கலாசார உடை தவிர்ந்த ஏனைய உடையுடன் வருதல் இயன்றளவில் தவிர்க்கப்படல் வேண்டும்.
3. கைத்தொலைபேசி பாவனை துயிலுமில்ல வளாகத்திற்குள் முற்றாக தடை செய்யப்பட வேண்டும்.
4. பணிக்குழுவால் அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தவிர்ந்த எவரேனும் புகைப்படம் எடுத்தல் ஒளிப்பதிவு நடவடிக்கைகளில் இருந்து விலகி இருத்தல் வேண்டும்.
5. மாவீரர்களின் புனிதத்தன்மையைப் பாதிக்கும் வேறு எவ்வகையான செயற்பாடுகளிலிருந்தும் அனைவரும் முற்றாக விலகி இருத்தல் வேண்டும்.

**போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்**

எமது வடக்கு கிழக்கு இணைந்த தாயக பிரதேசத்தில் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கிய நாளாகும். மாவீரர் நாள் என்பது, தமிழரின் விடிவுக்காகவும், உயர்வுக்காகவும், உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈந்து, இந்த மண்ணிற்கே உரமாகிவிட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

எங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளுக்கும் எமது போராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகும், புனிதத் தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்பட வேண்டியவையாகும்.

இம் மாவீரர்களின் நினைவுகள் எம்மை வழிநடாத்தும் உந்து சக்தியாக என்றும் இருக்கும் மாவீரர்களினது இத்தகைய நினைவுகூரல் என்பது ஒரு நிகழ்வாக இருந்து விடாது எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும்.

இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்தமாகவும் உணர்வு பூர்வமாகவும் நிலைநாட்டுவதற்காக எமது தமிழ் மக்கள் அனைவரினதும் மனமுவந்த, ஒருங்கிணைந்த பங்களிப்புக்களை வேண்டி நிற்கின்றோம்.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI

நவம்பர் 2019



# இறந்தவர்களை நினைவு கூருகின்ற ஆதிக்குடிகளின் நடுகல் வழிபாடு!

● கவல்கணன்

ஆஸ்திரேலியாவின் வட கோடியில், தற்போது நகரமாகியிருக்கும் டார்வினிலிருந்து சுமார் 400 கிலோமீட்டர் தூரத்தில், தென் கிழக்கு திசை நோக்கிய ஒரு இடம் தான் வீமோல். அங்கே முறின்பத்தா என்ற மொழி பேசும் பூர்வீக குடிமகன் ஒருவன் வாழ்ந்து வந்த இடத்திற்கு அருகிலிருந்த ஆறு வற்றிப் போகிறது. அவனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியது அவன் பொறுப்பு. அந்த ஆறு வற்றிப் போனதால் அவன் தயவில் வாழும் ஆறு பேருக்கும் உணவு தேடி அந்த இடத்தை விட்டுக் கிளம்புகிறான். ஒரு 'லொங்கூத்பார்' கிடைத்தால் அனைவருக்கும் நல்ல விருந்து போடலாம் என நினைத்து, காட்டுப் பக்கம் செல்கிறான். 'லொங்கூத்பார்'என்பது அவன்மொழியில் - எமக்குப் புரிய வேண்டுமென்றால் - கங்காரு.

வரட்சி காரணமாக, அவன் சென்ற இடமெங்கும் ஏமாற்றம்தான். வேட்டைக்குச் சென்ற அவனுக்கு முப்பதைத் தாண்டாத வயது. இருந்தாலும், அவனது உடல் சோர்வடையத் தொடங்கியது. உணவின்றி ஒரு மனிதன் முப்பது நாட்கள் உயிர் வாழலாம், ஆனால் நீரின்றி மூன்று நாட்களுக்குமேல்வாழமுடியாதாமே? அவனுக்கு அது தெரியுமா தெரியவில்லை. நாவறண்டு போகிறது. கொண்டுவந்த வளரியை ஒரு பக்கம் வைத்தான். ஒரு புதர் அருகில் சாய்ந்தான். அப்படியே உறங்கிப் போனான்.

அவன் வீட்டிலோ, பசியுடன் மனைவி. குழந்தைகள். வழமையாக வந்து போகும் உறவினர்களும் வரக்காணோம். எல்லோர் வீட்டிலும் அதே பிரச்சனைதான். வாய் விட்டு அழவேண்டும் போல் இருந்தது


**ஆஸ்திரேலியப்பூர்வீகமக்களிடையே இருந்த ஒரு பழக்கம் – யாராவது ஒருவரைக் கொலை செய்திருந்தால் அல்லது ஒருவரிடமிருந்து திருடியிருந்தால் அவரைக் கொல்லவோ அல்லது பழி தீர்க்கவோ அந்த சமூகப் பெரியவர்கள் அனுமதி வழங்கலாம்.**

அவனது மனைவிக்கு. ஆனால், அவளே அழுதால், அவள் குழந்தைகளை யார் தேற்றுவது? மனம் மட்டுமல்ல, உடலும் சோர்ந்து போக அப்படியே அவளும் உறங்கிப் போனாள்.

தூங்கிக் கொண்டிருந்தவனை யாரோ கூர்ந்து பார்ப்பதைப் போன்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. மூடிய கண்களைத்திறக்காமலே, எங்கே இருக்கிறோம் என்பதை மீள நினைவு கூர்ந்தான். ஆஸ்திரேலியப் பூர்வீக மக்களிடையே இருந்த ஒரு பழக்கம் - யாராவது ஒருவரைக் கொலை செய்திருந்தால் அல்லது ஒருவரிடமிருந்து திருடியிருந்தால் அவரைக் கொல்லவோ அல்லது பழி தீர்க்கவோ அந்த சமூகப் பெரியவர்கள் அனுமதி வழங்கலாம். ஆனால், இவனைக் கொல்வதற்கு யாரிடமும் எந்தக் காரணமும் இல்லை. மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தால், அவன் எதிரே ஒரு லொங்கூத்பார். சற்றும் தயக்கமில்லாமல், ஒரு கையால் தனது வளரியைப் பற்றிக் கொண்டான், அவன் குடும்பத்திற்கு உணவாகப் போகிற லொங்கூத்பார் நோக்கி சட்டென விட்டெறிந்தான். விட்டெறிந்த வளரி அதன் மேல் மோதி, நேராய் நின்ற அந்த விலங்கை நெடுஞ்சாணாகப் படுக்க வைத்தது. அதனை நோக்கி ஓட நினைத்தவனுக்கு நெஞ்சை அடைத்தது. தொப்பென்று கீழே விழுந்தவனுக்கு மூச்சு நின்றுவிட்டது.

மாரடைப்பு!

அது ஒரு மரணம். இல்லை இரண்டு மரணங்கள். உணவு தேடி வந்தவனும், உண-



வாகிப் போக இருந்ததும் பலியாகி அந்த இடத்திலேயே இரண்டு மரணங்கள்.

அடுத்தநாள், அவனது இளைய சகோதரன், வேட்டைக்கு சென்ற தனது அண்ணன் ஏதாவது கொண்டு வந்திருக்கிறானா என்று பார்க்க அவனது குடும்பம் தங்கியிருக்கும் இடத்திற்குச் செல்கிறான். மூன்று நாட்களாக அவன் திரும்பவில்லை என்று அறிந்ததும், அவனது மூத்த மகனையும் அழைத்துக் கொண்டு அண்ணனை தேடி செல்கிறான். அவனது காலடித் தடயங்களை நான்கு கண்களும் கூர்மையாக அவதானித்துப் பயணித்து, அந்த மரணங்கள் நிகழ்ந்த இடத்தில் போய் நிற்கின்றன.

அவன் கடைசியாகப் பார்த்தது ஒரு கங்காரு. அதனால், அவனது ஆத்மாவும் கங்காருவாக மாறியிருக்கும் என்று மகனும் தம்பியும் முடிவெடுக்கிறார்கள். அந்த இடத்தை ஒருவன் காவல் செய்ய, மற்றவன் வீட்டாரிடம் சொல்வதற்காக ஓடிச் செல்கிறான்.

பசியால் கதறியழ முடியாமல் தவித்த அவன் மனைவி, ஓவென்று ஒப்பாரி செய்கிறாள்.

அயலவர், உறவினர் அனைவருமாக அவன் இறந்திருக்கும் இடம் நோக்கி ஊர்வலமாக செல்கின்றனர்.

இறந்த கங்காரு இப்போது அவர்களுக்கு இரையாக தயாராகிறது. இறந்தவன் உடல் மண்ணுக்கு இரையாக தயாராகிறது.

அவனது இரண்டு கால் பெருவிரல்களும் இணைத்துக் கட்டப்படுகின்றன. அவனது உடல் தரையில் படுக்கவைக்கப்பட்டு, அவன் கைகள் உடல் மேல் வைக்கப்படுகின்றன. அவனது மனைவி, அவனைச் சுற்றிச் சுற்றி வந்து அவனை எப்படி முதலில் சந்தித்தாள், அவன் அவளுக்கு என்னவெல்லாம் செய்து கொடுத்தான் என்று தனக்குள்ளும் மற்றவர்களுக்குக் கேட்கும்படியாகவும் குரலை ஏற்றியும் இறக்கியும் பாடுகிறாள்.

அவன் உடல் மேல் மண் தூவப்பட்டு, அதன் மேல் மரச்சுள்ளிகள் பரப்பப்படுகின்றன. அவர்களது இனக்குழுவின் பெரியவர் அவன் அருகே வந்து, அவன் எப்படி இறந்தான் என்று மூன்று முறை கேட்கிறார். யாரோ ஏதோ பதில் சொல்ல அதை இவரும் கேட்பது போல் கேட்கிறார். அவனது மனைவி மற்றும் அவனுக்கு சொந்தமான பொருட்கள் யாரிடம் செல்ல வேண்டும் எனக் கேட்கிறார்.

(IX ஆம் பக்கம் பார்க்க)



# இறந்தவர்களை நினைவு கூருகின்ற ஆதிக்குடிகளின் நடுகல் வழிபாடு!




**பூர்வீக மக்களின் வாழ்க்கைக் குத் துணைபோகும் இடங்கள், குடும்பத்தில் அல்லது சமூகத் தில் மதிப்பைப் பெற்ற ஒருவர் மரணித்த இடம், மக்கள் குடி யேற்றம் ஆரம்பமாகிய இடம் போன்றவை புனித இடங்களா கக் கருதப்படுகின்றன.**

**ஆஸ்திரேலியமண்ணில்மட்டு மல்ல,காலனித்துவஆட்சிநடை பெற்ற அனைத்து நாடுகளிலும் பூர்வீகமக்கள்வஞ்சிக்கப்பட்டுள் ளார்கள். அதில் நியூசீலாந்தின் மவோரி மக்கள் மட்டும் ஓரளவு தப்பிக்கொண்டுள்ளார்கள். காலனித்துவஆட்சிநடைபெற்ற தமிழர் பிரதேசங்களும் இவ் வாறு வஞ்சிக்கப்படுள்ளன.**

(VIII ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனைவி உட்பட, அவை அனைத்தும் அவனது இரண்டாவது சகோதரனிடம் கையளிக்கப்பட வேண்டும் என்று அவரே பகிரங்கமாக அறிவிக்கிறார். ஒப்பாரியும் முணுமுணுப்புகளும் தொடர்கின்றன.

அப்போது, ஒரு கூரான கல்லை எடுத்து அவன் மனைவி தன் தலையிலுள்ள நீண்ட முடிகளைவெட்டிக்கொள்கிறாள். செம்மண்ணைக் கையிலெடுத்து தன் முகத்திலும், தலையிலும் பூசிக்கொள்கிறாள். அவன் மனைவியும், வேறு பெண்கள் சிலரும் அவனது உடலை சுற்றி வலம் வந்தபடியே ஒப்பாரி போல் பாடியவண்ணம் இருக்கிறார்கள். அவர்கள்கைகளில்இரண்டு தடித்த சிறு கோல்கள். அவற்றைத் தாளத்துடன் தட்டியபடியே அவன் உடலை சுற்றி வருகிறார்கள். அவனது இரண்டாவது சகோதரன், கங்காருவைப் போல நடமாடுகிறான்.

பசியாக இருந்த அனைவரும் பரிமாறப்பட்ட கங்காருவை ஒரு வழி செய்து விடுகிறார்கள். மீதம் ஏதுமில்லை.

இரண்டு காலங்கள் மாறி, மழை மீண்டும் வரும் வரைக்கும் இவன் பெயரை யாரும் சொல்லக்கூடாது, அப்படி சொன்னால் இறந்தவன் ஆத்மா அந்த இடத்திலேயே சுற்றித்திரியும் என்று அந்தப் பெரியவர் கூறி, ஏற்கனவே கொண்டுவரப்பட்ட ஒரு கல்லை சுட்டிக்காட்டி, அவனது மூத்த மகனை அழைக்கிறார். அவனைக் கொண்டு, இறந்தவன் தலைப்பகுதியில், செங்குத்தாக அந்தக் கல்லை நட வைக்கிறார்.

அவன்மனைவி, அவன்குழந்தைகள்மட்டுமல்ல, அவன் நண்பர்களும் ஏதாவது காரியத்தைபுதிதாகசெய்யஆரம்பிக்குமுன்னர், அந்த 'நடுகல்' இருக்கும் இடத்திற்கு வந்து, ஆசி பெற்றுச்செல்வார்கள்.

இந்தப் பழக்கம் ஆஸ்திரேலிய பூர்வீக மக்கள் பலரிடம் காணப்பட்டதை அவர்களது வாய் வழி கதைகள் மட்டுமல்ல, பூர்வீகமக்களின்வாழ்க்கையை ஆவணப்படுத்திய ஆங்கிலேயர்களும்பதிவுசெய்துள்ளார்கள்.

இந்த சம்பவம் நடந்து மூன்று நான்கு தலைமுறைகள் கடந்திருந்தாலும், அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு இந்தக் கதை சந்ததி சந்ததியாக சொல்லப்பட்டு வந்திருக்கிறது.

ஆஸ்திரேலியாவின் கடற்கரைப் பிரதேசத்தில் வாழ்ந்தவர்களைப்போல அல்லாது, உள் நாட்டில் வாழ்ந்த பூர்வீக மக்கள் தங்கள் கலாச்சார விழுமியங்களை ஓரளவு தக்க வைத்துக்கொள்ளக் கூடியதாக இருந்திருக்கிறது.

'அனைத்தும்மற்றையதுடன்தொடர்புடையது' - என்பது பூர்வீக மக்களின் நம்பிக்கைகளின் ஒன்று. நாம் காணும் உலகம், நாம் உணரும் உலகம், எமது கண்களுக்குத் தெரியும் உயிரினங்கள், சடப்பொருட்கள் எல்லாமே ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையகவே இருக்கின்றன. இந்த தொடர்புகளை சந்ததி சந்ததியாக எடுத்துச்சொல்வதற்குத்தான் கதைகள், ஓவியங்கள், சடங்குகள் என்பவற்றையும் பூர்வீக மக்கள், குழப்பங்களில்ஒழுங்கையும், ஒழுங்கில்நிலையாண்மை



மற்றும் தாக்குப்பிடித்தல் என்பவற்றையும் கண்டு, வாழ்வுக்கான சட்டங்களைத் தீட்டினார்கள்.

இப்படியான தொடர்புகளை அவர்கள் உணர்ந்திருந்தாலும் மற்றைய சமூகங்களில் வளர்ந்திருப்பது போல ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றுதான் இறந்தவர்களை வழிபடவேண்டும் என்பது அவர்களது முறையல்ல. அவர்கள் தங்கள் முன்னோர்களை வணங்கினார்கள். அந்த வழிபாட்டிற்கு என்று சிறப்பாக ஒரு கட்டிடம் இல்லாவிட்டாலும், முன்னர் குறிப்பிட்ட நடுகற்களை வணக்கத்திற்குரிய இடங்களாக அவர்களுக்கு இருந்திருக்கின்றன. ஐரோப்பியர்கள், குறிப்பாகப் பிரித்தானியர்கள் அந்த வழிபாட்டு முறையை முற்றாகஅழிப்பதற்குமுயற்சிகள்செய்துள்ளார்கள்.

இதேவேளை, சிலஇடங்கள்புனிதஇடங்களாகக் கருதப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று ஆஸ்திரேலிய சின்னமாகியுள்ள உளுறு மலை.

பொதுவாகப் பார்த்தால், பூர்வீக மக்களின்வாழ்க்கைக்குத்துணைபோகும்இடங்கள், குடும்பத்தில் அல்லது சமூகத்தில் மதிப்பைப் பெற்ற ஒருவர் மரணித்த இடம், மக்கள் குடியேற்றம் ஆரம்பமாகிய இடம் போன்றவை புனிதஇடங்களாகக் கருதப்படுகின்றன. இவற்றில் மக்கள் ஒன்று கூடி சடங்குகளை நிகழ்த்துவதுதான், மற்றைய சமூகத்தினரின் வழிபாட்டு முறையுடன் ஒப்பிடக்கூடியது.

பூர்வீக மக்களின் இன்னொரு நம்பிக்கை, அவர்கள் வாழும் நிலத்தின்மேல், அவர்கள் உரிமை கொள்ளமுடியாது என்பதாகும். ஆனால், இது குறித்த புரிந்துணர்வே இல்லாத பிரித்தானியர்கள் இந்த பூர்வீக மக்கள் வாழும் நாட்டில் காலடி வைத்தால் என்னவாகும் என்பதை சரித்திரம் நன்றாகவே எடுத்துக்காட்டுகிறது.

ஆஸ்திரேலிய மண்ணில் மட்டுமல்ல, காலனித்துவ ஆட்சி நடைபெற்ற அனைத்து நாடுகளிலும் பூர்வீக மக்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளார்கள். அதில் நியூசீலாந்தின் மவோரி மக்கள் மட்டும் ஓரளவு தப்பிக்கொண்டுள்ளார்கள். காலனித்துவ ஆட்சி நடைபெற்ற தமிழர் பிரதேசங்களும் இவ்வாறு வஞ்சிக்கப்படுள்ளன.

ஆஸ்திரேலியப் பூர்வீக மக்களிடையே காணப்பட்ட நடுகல் வழிபாடு, தமிழர்களிடையேயும் பரவலாக இருந்திருக்கிறது.

"என்னைமுன்நில்லன்மின்தெவ்விர்பல ரென்னை,

முன்நின்று கல்நின் றவர்" - என்ற திருக்குறள் மட்டுமின்றி சங்க இலக்கியத்தின் அகநானூற்றிலும் புறநானூற்றிலும் பரந்து காணப்படும் பாடல்களில் நடுகல் வழிபாடு குறித்து கூறப்பட்டிருக்கின்றன.

அந்தவகையில், தமிழர் நிலத்தில் உரிமைகள் பறிக்கப்பட்டபோது அதனை எதிர்த்து நின்று மாய்ந்தவர்கள் விதைக்கப்பட்ட இடத்தில்அமைக்கப்பட்ட நடுகற்கள்இந்த கார்த்திகை மாதத்தில் நினைவு கூரப்படுகிறது. அவர்களது நினைவாக அமைக்கப்பட்ட நடுகற்கள் வேண்டுமென்றே பல இடங்களில் தகர்த்தெறியப்பட்டாலும் நினைவுகளில் எரிகின்ற அணையா சுடராக அவர்கள் வழிபடப்படுகிறார்கள்.



எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI

நவம்பர் 2019

# தேசியத் தலைவரின் 20 வருட மாவீரர் நாள் உரைத் துளிகள்!



"பிரபாகரன் தனிமனிதன் அல்ல. ஓர் இனத்தின் பிரதிநிதி. பிரபாகரன் தமிழீழத்திற்கு துரோகம் செய்தால் பிரபாகரனும் சுட்டுக்கொல்லப்பட வேண்டியவரே"

"இந்தியா ஒரு இயக்கத்தை மட்டும் நம்பியிருக்க கூடாது என்று எண்ணியது. அதனால் எல்லா இயக் கங்களுக்கும் பயிற்சியளித்து தமக்கு ஒத்துப்போகும் இயக்கங்களை பாவித்து ஒத்துவரா இயக்கங்களை அழிக்க எண்ணியது. அங்குதான் இந்தியா தவறிழைத்தது. அதில் எங்களையும் இணைத்துக்கொண்டது"

**- 1989**

"இந்த மண்ணின் மைந்தர்களை பெற்றெடுத்த பெற்றோர்களை நான் போற்றுகிறேன். உங்களுடைய பிள்ளைகள் தமது உயிருக்கும் மேலாக தாய் நாட்டை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை புனித இலட்சி யத்திற்காக உகந்தளித்த பெற்றோர்களா கிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களுடைய குழந்தைகள் சாகவில்லை. சரித்திரமானவர்கள்"

**- 1990**

"நாம் இனத்துவேசிகள் அல்லர். போர்வெறிகொண்ட வன்முறையாளர் களும் அல்லர். நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ விரோதிகளாக- வோ பார்க்கவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கிறோம். சிங்கள பண்பாட்டை கௌரவிக்கிறோம்"

**- 1991**

"எமது எதிரிக்கு உலகம் ஆயுதத்தை யும் நிதியையும் அள்ளி வழங்குகிறது. நாம் உலகத்திடம் கை நீட்டி நிற்க வில்லை. எவரிடம் தங்கி நிற்கவில்லை. நாம் எமது சொந்த மண்ணில் சொந்த மக்களில் சொந்த கால்களில் தங்கி நிற்கிறோம்"

**- 1992**

"எமது இயக்கம் சமாதான முயற்சிக்கு தடையாக இருந்ததில்லை. சிங்கள அரசுக்கு எத்தனை சந்தர்ப்பங்களை வழங் கினோம். திம்பு முதல் கொழும்பு வரை பேச்சுக்கு சென்றோம். ஆனால் தம- ிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதனையும் முன்வைக்க மறுத்தது. சமரச வழியை கைவிட்டு போர்க்களத்தில் தீர்வுகாண விரும்பியது. தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை பயங்கரவாதம் என சித்திரித்துகாட்டியது. எல்லாவற்றுக் கும் மேலாக இனப்பிரச்சினை என்பதே இல்லை எனபகிரங்கமாக பிரகடனம் செய்துள்ளது"

**- 1993**

"சமாதான வழியில் தமிழர்களின் தேசியப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு முயற்சிகளை எடுக்கும் எனில் நாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். தமிழரின் தேசியப்போரட்டத்தின் இன்றைய வளர்ச்சியை கருத்தில் கொண்டு உருப்படியான சுயாட்சி திட்டங்கள் முன்வைக்கப்படுமாயின் நாம் அதனை பரிசீலனை செய்ய தயாராக இருக்கின் றோம்"

**- 1994**

"யாழ்நகரையும் வலிகாமப் பகுதி யையும் ஆக்கிரமிப்பு செய்வதற்கு முன்னர் ஒட்டுமொத்த மக்களும் சென்ற வரலாற்று நிகழ்வானது அரசின் தந்திர உபாயத்திற்கு சாவு மணி அடித்தது. அரசின் போர் நடவடிக்கையையும் அதற்கு அரசு கற்பிற்கும் அபத்தமான காரணத்தையும் யாழ்ப்பாண தமிழ் மக்கள் ஏகமனதாக நிராகரித்து விட்டனர் என்பதையே இந்த இடம் பெயர்வு நிகழ்வு எடுத்துகாட்டுகிறது. ஆக்கிரமிப்பாளனுக்கு அடிபணிந்து போகாமல் சுதந்திர மனிதர்களாக சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு எவ்விதத் துயரையும் எதிர்கொள்ள எமது மக்கள் துணிந்து நிற்கிறார்கள் என்பதையே இந்த இடம் பெயர்வு உலகத்திற்கு பறைசாற்றியுள்ளது"

**- 1995**

"மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் என் றும் புலிகளுடன் பேசத்தயார் என்றும் சமீபத்தில் அறிக்கைகளை விட்டுவரும் சந்திரிகா, புலிகள் இயக்கம் ஆயுதங்களை சரணடைவு செய்ய வேண்டும் என்ற கேலிக்கூத்தான நிபந்தனையையும் முன்வைக்கிறார். எந்த ஒரு தன்மான முள்ள விடுதலை இயக்கமும் இத்தகைய அவமதிப் பூட்டும் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை"

**- 1996**

"மாவீரரின் வீர வழிபாட்டு மரபா- னது தமிழினத்தின் விடுதலைஎழுச்சிக்கு உந்துசக்தியாக இருந்துவருவதாகவும் சிங்கள ஆட்சியாளர்கள் கருதினர். இத்தகைய இனத்துவேசப் பகையுணர் வால் உந்தப்பட்ட சிங்களப் பேரின வாதம் தமிழினத்தால் என்றுமே மன்னிக்க முடியாத ஒரு படுபாதகச் செயலில் இறங்கியது. யாழ்ப்பாணக் குடாநாடு எதிர்ப்படைகளின் பிடியில் வீழ்ந்தபோது இந்த வேதனைக்குரிய சம்பவம் நிகழ்ந்தது. தமிழீழத் தாயின் மடியில் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்திருந்த எம்மினிய மாவீரர்களின் ஆன்ம அமைதி எதிரியாற் குலைக்கப்பட்டது. அவர்களது கல்லறைகள் இடித்துத் தரைமட்டமாக் கப்பட்டன. அவர்களது துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டன. அவர்களது நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டன. புனிதர்களாக, சரித்திர நாயகர்களாக, தேசிய வீரர்களாகத் தமிழர்களால் போற்றிப் பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி, அவர்களது புனிதத் தலங்களான துயிலும் இல்லங் களைச்சிதைத்தழித்த இச் செயலை மிகவும் அநாகரிகமான, கீழ்த்தரமான இழிசெய லென்றே நான் கூறுவேன்"

**- 1997**

"எமது மக்களை அரவணைத்து - இணைத்து - வாழவும் விரும்பாமல், பிரிந்துசென்று தனித்து வாழவும் விடா மல், எமது மக்களை அடிமைப்படுத்தி ஒழித்துக்கட்டவே சிங்கள அரசுகள் முனைந்தன. எனவேதான், அன்று தொட்டு இன்றுவரை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, நாம் போராடி வாழ நிர்ப்பந் திக்கப்பட்டோம். வரலாற்றின் கட்டாயங் களுக்கு ஏற்ப எமது போராட்ட வடிவங் கள் மாறிய போதும் எமது உரிமைகளுக் கான எமது சுதந்திர வாழ்விற்கான போராட்டம் தொடர்கிறது. இப் போராட்டம் வளர்ந்து விரிந்து இன்று இருதேசங்கள் மத்தியிலான போராக பேயுருவம் பெற்றிருக்கிறது"

**- 1998**

"போரியற் கலையில் புலிப்படை வீரர்களின் அபாரமான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் இந்த 'ஓயாத அலைகள் மூன்று; என்ற வன்னிப் பெரும் சமர் உலகத் திற்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது"

**- 1999**

"எமது விடுதலைப் போராட்ட வர லாற்றில் இன்று நாமொரு முக்கிய திருப்பு முனையை அடைந்திருக்கிறோம். எமது படையணிகள் ஒப்பற்ற இராணுவ சாதனை களை நிலைநாட்டி எமது தேசத்தின் கலாசாரத் தலைநகரான யாழ்ப்பாணத் தின் வாசற்படியை அண்மித்து நிற்கின்றன. யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகியபடி குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண் டித்து வைத்திருந்த ஆனையிறவுப் பெருந் தளம் புலிப்படை வீரர்களால் மீட்கப்பட் டமை இவ்வாண்டு நாம் ஈட்டிய மாபெ ரும் இராணுவ வெற்றியாகும்" **- 2000**

"விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால்தான் இலங்கைத்தீவில் சமாதானம் தோன்றுவதற்கு வாய்ப்புண்டு. இப்படியான சூழ்நிலையிற் ஸ்ரீலங்கா அரசின் அழுத்தத்திற்கு இசைந்து மேற் குலக நாடுகள் எம்மீது தடைகளை இறுக் கினால் அது சமாதானப் பேச்சுக்கும் சமாதான வழியிலான தீர்விற்கும் வழி கோலப்போவதில்லை. மாறாக, சமா தானப் பேச்சுக்குப் புலிகள் மீதான தடைநீங்க வேண்டும் என்ற எமது மக்களின் கோரிக்கைக்கு, இந்நடவடிக்கை கள் மேலும் வலுச்சேர்க்கும்"

**- 2001**

"தமிழர் தாயகத்தில் அமைதி நிலை தோன்றியபோதும் இயல்பு நிலை தோன்ற வில்லை. 'உயர் பாதுகாப்பு வலயங் கள்' என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்களை, சமூக, பொருளாதார, பண்பாட்டு மையங்களை சிங்கள ஆயு தப் படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன"

**- 2002**

"எமது இடைக்கால நிர்வாக யோசனை களுக்குச் சிங்கள இனவாத சக்திகளிட மிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கி றது. தனித் தமிழ் அரசுக்கு அத்திவாரமாக எமது திட்டம் அமைவதாகச் சிங்கள இன வாதக் கட்சிகளும் ஊடகங்களும் கண்ட னக் குரல் எழுப்பி வருகின்றன. இந்திய ஊடக உலகத்திலிருந்தும் இந்திய அரசி யல் ஆய்வாளர்களிடமிருந்தும் இதே போன்று கண்டன விமர்சனங்களும் வந்து கொண்டிருக்கின்றன"

**- 2003**

"சிறீலங்கா அரசானது எமது விடுதலை இயக்கத்தை ஓரங்கட்டிவிட்டு வாஷிங் டனில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற் பங்குபற்றியது. இதனால், சமநிலைப் பங்காளி என்ற தகைமையிலிருந்து நாம் ஒதுக்கப்பட் டோம். இப்படியான புறநிலையிற்றான் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடை நிறுத்த எமது இயக்கம் முடிவெடுத்தது. எமது அதிருப்தியையும் ஏமாற்றத்தை யும் வெளிப்படுத்தவே நாம் இந்த முடிவை எடுத்தோம். பேச்சுக்களை ஒரேயடியாக முறித்து, சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட நாம் விரும்பவில்லை"

**-2004**

"சிங்களத் தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய் வீகக் கொடையென்றும் சிங்கள இனத் திற்கே உரித்தான சொத்துடைமை என் றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனை- கதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக் குண்டு கிடக்கிறார்கள்"

**-2005**

"சுதந்திரத்திற்கான இந்தப் போராட் டத்தை விரைவாக ஏற்று அங்கீகரிக்கு மாறு நீதியின் வழிநடக்கும் உலகநாடு- களையும் சர்வதேச சமூகத்தையும் நாம் அன்போடு வேண்டுகிறோம்"

**-2006**

"எமது மக்கள் வரலாற்றிலே என்று மில்லாதவாறு ஒரே தேசமாக, ஒரே மக்களாக ஒரே அணியில் ஒன்றுதிரண்டு நிற்கின்றனர். ஒரே இலட்சியத்தில் ஒன்று பட்ட சக்தியாக, ஒன்றுபட்ட இனமா- கத் தமக்கு முன்னால் எழுந்த எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நெஞ் சுறுதியுடன் நிமிர்ந்து நிற்கின்றனர்"

**- 2007**

தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வளர்ந் தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதி யாகக் குரலெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப் பலப்படுத்து மாறு அன்போடு வேண்டுகிறேன். அத்து டன், தங்களது தாராள உதவிகளை வழங் கித் தொடர்ந்தும் பங்களிக்குமாறும் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன்னெடுத்துவரு கின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்" **-2008**



# போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

**போரில் உயிரிழந்த தங்களது உறுப்பினர்களை எரிக்கப்போவதில்லை என்றும் புதைக்கப் போவதாகவும் முடிவெடுத்த விடுதலைப்புலிகள் அமைப்பு தொண்ணூறுகளில் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கை. வித்துடல்கள் என்ற பதம் பயன்படுத்த தொடங்கிய இந்த வரலாற்று காலகட்டம் தொடர்பான பதிவு இது.**

வீரமரணமடைந்த புலி வீரர்களது உடல்கள் இனிமேல் தகனம் செய்யப்படமாட்டாது. அவைகள் புதைக்கப்பட வேண்டும் என்று நாம் முடிவெடுத்துள்ளோம். இம்முடிவானது போராளிகளுள் மிகப்பெரும்பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களை தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் இப்பொழுது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுக் கற்கள் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலை பெறும்.

மாவீரர்களின் உடல்கள் புதைக்கப்படவேண்டும் என நாம் ஏன் முடிவெடுத்தோம் என்பதையும் அதற்குரிய காரணிகளையும் இங்கே பார்ப்போம்.

### போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றை படைக்கும் சிருஷ்டி கர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரண நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்று சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்கவேண்டும். இந்த தியாக சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும்.

அதாவது போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திர பெருஞ்சுடரை ஏற்ற உதவும் நெருப்பு கிடங்குகளாகவே பயன்படும்.

எனவேதான், போராளிகளது உடல்களைப் புதைத்து, கல்லறைகளை எழுப்பி, அதை என்றென்றும் உயிர்த் துடிப்புள்ள ஒரு நினைவுச்சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகின்றோம்.

### அன்புக்குரிய எமது பெற்றோர்களே, மக்களே!

எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றோம். இந்த முடிவு காலங்காலமாக இருந்துவந்த சம்பிரதாய சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கின்றதே என நீங்கள் கருதலாம். ஆனால், உங்களது பிள்ளைகளான புலிவீரர்கள் இந்த சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கடந்தநிலையில் இந்த நாட்டின் பொதுச்சொத்தாக - பொக்கிசமாக - இருக்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான இப்பொக்கிசங்கள் வெறும் நினைவுகளாகவும் எண்ணிக்கைகளாகவும் மட்டும் இருக்கக்கூடாது. அவை பொருள்வடிவில் என்றென்றும் எம் மண்ணில் இருந்துகொண்டேயிருக்க வேண்டும்.

இது புறமிருக்க, எமது சக தோழர்கள் சிலரது வீரமரணத்தின் பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதை பாதித்திருக்கின்றன. அதாவது, பெற்றோரோ உடன் பிறந்தவர்களோ உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போராளிகளின் இறுதிச்சடங்குகளை நாம் கண்டிருக்கின்றோம்.

என்னதான் எமது தோழர்கள் சூழ நின்று தகன நிகழ்ச்சிகளை நடாத்தினாலும்கூட அப்போராளியை பெற்றெடுத்து சீராட்டி வளர்த்த தாய் தந்தையரோ அல்லது உடன்பிறந்தவர்களோ அங்கே இல்லாதது எமது மனதை நெருடுகின்றது.

போராட்ட சூழல் காரணமாக அவர்கள் வரமுடியாதுவிட்டாலும் நாளை இப்பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் எதைக்காட்டப்போகிறோம்?

ஒன்றன்பின் ஒன்றாக நூற்றுக்கணக்கான போராளிகளை தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டப்போகிறோம்?

அப்படியான சூழலில் அவர்கள் படும் துயரையும் அங்கலாய்ப்பையும் அனுபவ வாயிலாக நாம் அறிந்தே இருக்கின்றோம்.

எனவேதான், தனது பிள்ளையின் உடலைப்பார்க்காதுவிட்டாலும்கூட அவனது உடல் புதைக்கப்பட்ட கல்லறையை பார்த்து ஓரளவு ஆறுதல் அடையவாவது நாங்கள் உதவிசெய்வோம். அத்துடன் அடிக்கடி அக்கல்லறைக்கு சென்று அவனது நினைவுகளை மீட்டிப் பார்ப்பதுடன் ஓர் ஆத்மதிருப்தியையும் அவர்கள் அடைந்துகொள்வார்கள்.

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோகமானதுதான். ஆனால், அந்த சோகத்தை மறைக்கவேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்க முயற்சிப்பதாக இருக்கமுடியாதுதானே?

கல்லறைக்கு மீண்டும் மீண்டும் செல்வதால் சோகம் அதிகரிக்கும் என்றில்லை. உண்மையில் அப்படிச் செய்வதால் மனம் நிம்மதி அடையும்.

எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. தகனம் செய்வதற்குப்பதிலாக புதைப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்கு முரணான செயலல்லவா என யாராவது வினா எழுப்பலாம்.

நீண்ட காலம்தொட்டு இருந்து வரும் "தகனம் செய்வது" தமிழரின் பண்பாடு என எண்ணுவது தவறானது. உண்மையில் பண்டைய தமிழரின் பண்பாட்டில் இறந்தவர்களது உடல் புதைக்கப்பட்டு நடுகல் வைக்கப்பட்டதாக போதுமான வரலாறுகள் உண்டு. புற நானூற்று இலக்கியமும் ஈமத்தாளி வடிவிலான தொல்லியல் சான்றுகளும் நடுகற்களும் இதை நிரூபிக்க போதுமானது.

ஆனாலும், இந்த ஆராய்ச்சிகள் ஒரு புறமிருக்கட்டும். உண்மையில் இந்த முறையை ஒரு சமூகசீர்திருத்தமாக நாங்கள் செய்யவில்லை. இது போராளிகளுக்கு மட்டுமே பொருந்தும். பொது மக்களுக்கல்ல. எனவே, இங்கே பண்பாட்டு பிரச்சினை எழ நியாயமில்லை. அத்துடன், புதைப்பது என்ற முடிவானது வெறும் இறுதிக்கிரியை நிகழ்ச்சி அல்ல. அது போராட்டத்தை உயிர்ப்புடன் என்றென்றும் வைத்திருக்கும் ஒரு சரித்திர தியாகத்தின் சின்னம்.

**நன்றி - விடுதலைப்புலிகள்**

# பேய்களுக்கும் முனிகளுக்குமிடையே பெரிய வேறுபாடில்லை

அறுவடை முடித்த வயல்கள்
வெறிச்சோடின
ஒரு சிறங்கை மணிகூடக் கிட்டவில்லை
நமக்கு.

காற்று அடித்ததுதான்
எடுத்துத் தூற்றவில்லையே எம் நெற்சூடு.

மழை பெய்தது
எம் தாமரைக்குளத்துக்கு மட்டும்
தண்ணீர் வரவில்லை.

வெளி வீதி சுற்றி
காவடி தோளிருந்து இறங்கும்
நேரம் வந்தாச்சா?

வலிக்கிறது தோள்மூட்டு
வரமேதும் கிட்டவில்லையே நமக்கு.

ஈழத்தமிழர் மீண்டுமொருமுறை
இளிச்சவாயர் ஆனோமா?

பூ மலரும் வடிவு பார்க்க
வாசலிருந்தோம் நம்பிக்கையுடன்.

பூவும் மலரவில்லை
பூ மரத்தின் வேரும் தெரியவில்லை.

நிலவு பார்க்கும் ஆசையில்
இரவெல்லாம் விழித்திருந்தோம்.

நிலவையும் காணவில்லை
விழித்திருந்த இரவையும் காணவில்லை.

பத்து நாள் அலங்காரத்திருவிழா
முற்றுப்பெறுகின்றது.
எஞ்சியிருப்பது கொடியிறக்கம் மட்டுமே.

சிகரங்கள் இறங்குகின்றன.
சின்னமேளங்கள் போய்விட்டன.
தவில்காரரும் புறப்படுகின்றனர்.

காப்புக்கடைகளைக் கலைத்து
கட்டத்தொடங்கியாயிற்று.
சில கடலைக்காரரே மீதி.

இனி அவர்களும் போய்விடுவார்கள்.

எல்லோரும் போகலாம்.
கோவில் வீதிக்குடியிருப்பாளர்கள்
எங்கே போவது?

ஜிகினா வெளிச்சத்தில் குதித்த
அலுப்புத்தீர
ஒரு பகல் உறங்கலாம்
அதன்பிறகு என்ன?

வேள்வி நடத்த கோயிலில்
அலங்கார உற்சவத்துக்கு ஆசைப்பட்டோம்
நடந்தது என்ன?

கூத்து நடந்தது பார்த்துப்
பரவசமடைந்தோம்.
இப்போ கூத்தும் முடிந்துவிட்டது.
எந்த வாழ்வும் கிட்டவில்லயே எமக்கு.

எங்கேனும் சின்னக்கிளைகளில்
அரும்பு கட்டத்தொடங்கினால் போதுமே
ஆதிக்க மாடுகள் அதனை
மேய்ந்துவிடுகின்றன.

அழகிய ஜீவிதத்திற்காக
சின்னக் கூடு கட்டுவோமென
சிட்டுக்குருவிகள் சுள்ளி பொறுக்கினாற்கூட
பருந்துகள் பொறுத்துக்கொள்வதில்லை.
குருவிகளை அடித்து வாயிற் போடுகின்றன.

நம் வயலின் விதைப்புக்கு நாமுழுதாற்கூட
அண்டை வயற்காரன் சண்டைக்கு
வருகின்றான்.

ஈழத்தமிழருக்கு
இது எழுதிவைத்த விதியாச்சு.

எட்டு மூலைப்பட்டம் கட்டி
இரவிலேற்றினோம்.
விடியும்வரை விண்சத்தம் கேட்டது.
பட்டத்தைத்தான் எவரும் பார்க்க
முடியவில்லை.

சப்த நதிகளும் கூடி

அட்ட திக்கு யானைகளும் கூடி
ஊரையடித்து உலையிற்போடும்
பகாசுரர்களும் கூடி
எமக்கு பந்தி பரிமாற வந்தனர்.
பாயாசம் என்றனர்.

வாழையிலை விரித்து வரிசையிலிருந்தோம்
என்ன விழுந்தது இலையில்?

ஆக்கித் தந்ததும் ஒன்றுமில்லை.
தூக்குச் சட்டியிலும் ஒன்றுமில்லை.

மின்சாரம் வந்தது,
எரிசாராயம் வந்தது,
டயலொக் வந்தது,
மொபிற்றல் வந்தது,
அங்கர் பட்டரும்
மக்கி நூடில்சும் வந்தது,

பிதாமகன் வந்தான்,



போய்சும் வந்தார்கள்
எமக்கான விடுதலைதான் வரவில்லை.

வீதியெங்கும் விளம்பரப் பலகையும்
காதிலெங்கும் சமாதானப் பாடலுமாய்
விளங்குகின்றன நம் ஊர்கள்.

ஈழத்தமிழனே!
பட்டும் பட்டும் உனக்கேனடா புத்தி
வரவில்லை.

ஒன்றில் போராடு
இல்லையேல் சரணாகதி அடைந்துவிடு.
இரண்டுக்குமிடையில் நின்று
நசிந்து விடாதே.

உன் தாகத்துக்கு நிறைவான தண்ணீரை
எவரும் தரமாட்டார்கள்.
வாய் நனைக்க மட்டுமே வார்ப்பார்கள்.
நீ சொண்டைத்தான் நக்க வேண்டி வரும்.

பேய்களுக்கும் முனிகளுக்குமிடையே
பெரிய வேறுபாடுகளில்லை
ஒன்று கடிக்கும்
மற்றது அடிக்கும்.

எதிரே வருபவன் பலவானென்றால்
இரண்டுமே ஒன்றாகிவிடும்.

எரிகிற கூரையில் கொள்ளியெடுத்து
சுருட்டுப் பற்றவைத்தானாம்
கிழவனொருவன்.
பக்கத்து வீட்டுக்காரனின் கதைதான்.
எமக்குப் பழைய கதையாச்சே.

உலகெங்கும் டெங்குக் காய்ச்சலாம்
அவரொருவர் நுளம்புநாசினி விசுறுகின்றார்.

இறுதியில் நுளம்பு இங்குதானென்று
மகாபிரபு மருந்துடனும் வரலாம்..

வருபவர்கள் எல்லோரும் வரட்டும்.
முதலில் நீ முதுகிற் கூனலில்லாமல்
முற்றத்தில் நில்

உடுக்கடித்து ஆடப் பழகு.
தலையில் தலைப்பாகை கட்டு.
நறுக்குத் தெறித்தாற் போல
உன் வாயிலிருந்து வார்த்தைகள் வரட்டும்.

நீ திரும்பினால்
திசைகளும் உன்னோடு திரும்பட்டும்.

நீ பாடினால்
பட்ட மரத்திற்கூடப் பால் தெறிக்கட்டும்.

மழையுன் தோளின் கீழேயே
பெய்யும்படியாய்
தலையை முகிலுக்கு மேலே வைத்திரு.

இத்தனைபேரையும் குழியில் விதைத்தது
தேர்தலில் நிற்க அல்ல.

தெருக்களைச் செப்பனிட அல்ல.
மாகாண சபையின் நிர்வாகமெடுத்து
மதவு கட்ட அல்ல.

வேண்டும் எமக்கு கூண்டில்லா வாழ்வு.
வேண்டும் எமக்கு விடுதலைக்கான சிறகு.

**– புதுவை இரத்தினதுரை**


Lyca TV
ONE OF THE WORLD'S LARGEST
ETHNIC CHANNEL PLATFORM
3 MONTHS FREE
ANNUAL SUBSCRIPTION
$159
15 MONTHS
RENEWAL
$129
15 MONTHS
SET TOP BOX INCLUDED
MORE THAN 60 TAMIL CHANNELS
MORE THAN 5000 TAMIL & HINDI MOVIES
TENT KOTTA
MORE THAN 1000 TAMIL MOVIES
NEW MOVIE RELEASES EVERY WEEK
MOVIES AVAILABLE ON 4K / HD / 5.1 DOLBY
MOVIES WITH ENGLISH SUBTITLES
EROS NOW
MORE THAN 4000 TAMIL & HINDI MOVIES
NEW MOVIE RELEASES EVERY WEEK
MOVIES AVAILABLE ON HD QUALITY
COMMERCIAL FREE
JUDE - MELBOURNE
0470 030 300
ALACAN – SYDNEY
0470 216 619
SUBSCRIBING TO LYCATV IS EASY!
CALL OUR 24/7 CUSTOMER SERVICE ON
03 8652 1960
www.lycatv.tv




# தமிழ் காற்று வீசுதே...

## அடிலெய்ட் மக்கள் ரசித்த

## தித்திக்கும் பல்சுவை மாலை



தெற்கு ஆஸ்திரேலிய இலங்கைத் தமிழ் சங்கத்தின் வருடாந்த பல்சுவை விருந்துநிகழ்வு கடந்த மாதம் மிகக்கோலாகலமாக அடிலெய்ட் மாநகரில் நடைபெற்றது. மிகக்குறைந்த எண்ணிக்கையுடைய தமிழ் மக்கள் பிரதேசமாக விருந்த அடிலெய்ட் இன்று மிகப் பலமானதொரு தமிழ் சமூகத்துடன் ஒருங்கிணைந்து நிமிர்ந்திருக்கிறதுஎன்பதற்கு இந்த நிகழ்வு பெரியதொரு நிகழ் சான்றாக அமைந்தது.

1983 ஆம் ஆண்டுஅகதிசங்கம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு பின்னர், இலங்கைதமிழ் சங்கம் இன்று அடிலெய்ட்டில் எல்லாதரப்பினரையும் இணைத்துக்கொண்டுஇன்றுவலுவாகநடைபோடுகின்றகட்டமைப்பாகவளர்ச்சி பெற்றுள்ளது. தமிழர்களதுபண்பாடு - கலாச்சாரம் போன்வற்றினை முன்னெடுத்துச் செல்வது மாத்திரமல்லாமல்,ஏனையகலாச்சாரபின்னணிகளைக்கொண்ட சமூகத்தவர்களுடனும் இணைந்து பன்மைத்துவத்தை முன்னெடுக்கும் அமைப்பாக தெற்கு ஆஸ்திரேலிய இலங்கைதமிழ் சங்கம் விளங்குகிறது. கூடவே, தமிழ் மொழியின் தொன்மையை - அதன் முக்கியத்துவத்தைத் தனித்துவம் மிக்க அடையாளத்தை - பரவச்செய்வதும்கூட தமிழ் சங்கத்தின் இன்னொரு பணியாகக் காணப்படுகிறது.

இவற்றை முன்னிறுத்தும் வகையில், கடந்த மாதம் 13 ஆம் திகதி அடிலெய்டில் நடைபெற்றபல்சுவைவிருந்துநிகழ்வில் பல அரங்காற்றுகைள் பார்த்தவர்களை பரவசப் படுத்துகின்ற வகையில் அமைந்தன.

தெற்கு ஆஸ்திரேலியாவின் எதிர்க்கட்சித்தலைவர் உட்படஉதவிஅமைச்சரும் கலந்துகொண்ட இந்தபல்சுவைநிகழ்வில் முதலில் பரதநாட்டியநிகழ்வுகள் இடம் பெற்றன.



அவற்றை தொடர்ந்து கொலம்பிய பெண்களின் வண்ணமயமானநடனம் இடம் பெற்றது. அத்துடன் கொங்கோ நடனத்தை கொங்கோ இளைஞர்கள் இருவர் வழங்கினார்கள். நடனத்தில் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் தத்தமது கலாசார பின்னணிகளைகொண்டுவந்துஅரகேற்றும்போது அது எத்துணை வித்தியாசமானது என்பதையும் எவ்வளவு மகிழ்ச்சிக்குரியது என்பதையும் இந்தநடனங்கள் எடுத்துக்காண்பித்திருந்தன. அவற்றைத் தொடர்ந்து தமிழ் சிறுமிகளதும் - யுவதிகளதும் - பெண்களதும் நடனங்கள் வரிசையாக வெவ்வேறுபாடல்களுக்கு இடம் பெற்றன. பாரம்பரியமும் மேற்கத்தேயமும் கலையில் எவ்வாறுகரைந்திருக்கிறது என்பதை அந்த நடனங்களும் அவற்றுக்கான பாடல்களும் கூட வெளிக்காண்பிப்பவையாகஅமைந்திருந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களது பங்களிப்பும் அதற்காக பின்னணியில் அர்ப்பணிப்புடன் உழைத்தவர்களும் கூட பாராட்டப்பட வேண்டியவர்கள்.


அதன்பின்னர், வில்லுப்பாட்டு இடம் பெற்றது. ஆஸ்திரேலிய தமிழ் மேடைகளில் அதிகம் இடம்பெறாதஒருஅங்கம் வில்லுப்பாட்டு. அதிகம் கவனம் செலுத்தாதகலைவடிவம் என்று கூடச் சொல்லலாம். குழுவாக செயற்படுவதும் சபையை கவரும் கருப்பொருட்களை கச்சிதமாக முன்வைப்பதும் அதன் ஊடாக நகைச்சுவையை இழையோடச்செய்து சபையை கவர்வதும் கடினமானபணி. ஆண்களும் பெண்களுமாக இணைந்து அரங்காற்றிய இந்தவில்லுப்பாட்டு அருமையாக அமைந்தது.

அதனைத் தொடர்ந்து “ரிட்டயர்ட் ரௌடீஸ்” என்றஅடிலெய்ட் கலைஞர்கள் வழங்கிய குறும்படம் காண்பிக்கப்பட்டது. இப்படியானதொரு பல்சுவை விருந்து நிகழ்ச்சியில் குறும்படம் காண்பிக்கப்படுவது மிகவும் அருமையாக நிகழ்வதாகும். ஆனால், இந்தக் குறும்படம் ஆஸ்திரேலியாவில் வெளியான குறும்படங்களிலேயே நேர்த்தியாக எடுக்கப்பட்ட தொருகுறும்படம் என்று கூறலாம். முழுக்கமுழுக்க நகைச்சுவை கொட்டிக் கிடக்கும் அருமையான கதை. அதற்கு ஏற்றாற்போல படத்தில் தோன்றியவர்களின் மெல்லியநடிப்பு, படத்தோடுகூடவேபயணித்துக்கொண்டிருந்த இளையராஜாவின் பாடல்கள், அதி அற்புதமாக பயன்படுத்தப்பட்டகமரா - என்றுஅனைத்தும் சேர்ந்துசெம்மையாக எடுக்கப்பட்டிருந்தது. பல்சுவைவிருந்து நிகழ்வில் கிரீடமாக இந்தகுறும்படம் அமைந்தது என்று சொன்னாற் கூட மிகையில்லை.

அதன்பின்னர், பாடல் நிகழ்வு இடம் பெற்றது. அரங்கைமகிழ்வித்த இனிய இசை இரவுணவை முடித்துக்கொண்டுவந்து இருந்தவர்களை இதமாகதழுவிக்கொள்ள, நிகழ்வும் முடிவுக்குவந்தது.

இப்போதெல்லாம் வார விடுமுறைகள் எனப்படுகின்றவை மிகப்பெறுமதியானவையாக மாறிவிட்டன. அவற்றினை ஒதுக்கி ஒரு நிகழ்வுக்கு போவதென்பது மக்களுக்கு அதி உச்ச ரிஸ்க் செயற்பாடு என்று சொல்லலாம். அப்படி ரிஸ்க் எடுத்துபோகும் நிகழ்ச்சிகள் சொதப்பலாக இருக்கும்போது, அந்தநிகழ்ச்சிமாத்திரமல்லாது, அங்குபோறவர்களின் விடுமுறை நாளே நாறி விடுகிறது. அவர்களைப் பொறுத்தவரை, மீண்டும் அந்த வார விடுமுறையை ஆரோக்கியமாககளிக்க ஐந்தாறு நாட்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

அந்தவகையில், தெற்கு ஆஸ்திரேலிய இலங்கைதமிழ் சங்கம் நடத்தியபல்சுவை விருந்துநினைத்துநினைத்து இனிக்கும் நேர்த்தியான நிகழ்வாக, வந்தவர்கள் அனைவருக்கும் நிவைானநிகழ்ச்சியை வழங்கி திருப்திப்படுத்தியது.



நேர்த்தியான நிகழ்ச்சி ஒருங்கமைப்பு, சிறியஎண்ணிக்கையிலான மக்கள் என்றாலும் சமூகப் பொறுப்போடு கடமைகளை பகிர்ந்துகொண்டு ஒற்றுமையுடன் செயற்பட்டவிதம், எல்லோரையும் உள்வாங்கிக் கொண்டமை அனைத்தும் நிறைவாக இருந்தது.

**நல்லவன்**




MC
MUTHU CURRY
RESTAURANT
Dining & Takeaway
7-8 PORTICO PARADE TOONGABBIE, NSW 2146, AUSTRALIA.
TEL: 02 9688 5990 I 04 7676 7997

# கடல் தாண்டி வந்த சாதனை வீரர்கள்

இலங்கையிலிருந்து உயிரைக் கைகளில் பிடித்துக்கொண்டு படகுகளில் ஏறித் தப்பி வந்த இளையோரக் கொண்டு உருவாக்கப்பட்ட "தமிழ் கிறிக்கெற் அணி" வெளிநாடொன்றில் தேசிய மட்டத்தில் இரண்டு வெற்றிக் கிண்ணங்களைக் கைப்பற்றி 2019 ஆம் ஆண்டில் சர்வதேச கிறிக்கெற் வெற்றிக்கிண்ணத் தொடர் ஒன்றுக்காகவும் தயாராகிக்கொண்டிருக்கிறது என்ற செய்தி யாருக்காவது தெரியுமா?

ஆம்! இது நடைபெற்றுக் கொண்டிருப்பது ஆஸ்திரேலியாவில் தான்!

அகதிகளையும்புகலிடக்கோரிக் கையாளர்களையும் கொண்ட Ocean12 கிறிக்கெற் அணி சிட்னியில் நடைபெற இருக்கும் "LMS World Championship 2019" போட்டியில் உலக அணிகளை எதிர்கொள்ளத் தகுதி



பெற்றுள்ளது.

இலங்கையில் இருந்தபோது முறையாகக்கிறிக்கெற்விளையா-டியிராத இந்த அணிவீரர்கள் தங்களது விடாமுயற்சி, திறமை வெளிப்பாடு, இணைந்து விளையாடும் வல்லமை போன்றவற்றின் துணை கொண்டு அவுஸ்திரேலிய கிறிக்கெற் வட்டாரங்களில் ஒரு பேசு பொருளாகதம்மைஇன்றுஉயர்த்தியிருக்கிறார்கள்.

### பின்னணி

தாயகத்தில்போர்உச்சம்பெற்றதைத் தொடர்ந்து 2009ஆம் ஆண்டில்புகலிடக்கோரிக்கையாளர்கள்அவுஸ்திரேலியாவரஆரம்பித்தார்கள். அவர்களில் பலர் எந்த முடிவும் இல்லாது, வேலை செய்யும் அனுமதியோ, நிதி ஆதரவோ இன்றி இங்கு தவிக்க விடப்பட்டிருந்தார்கள். சிரமமான தாயக நிலைமைகள், உயிரைப் பணயம் வைத்து மேற்கொண்ட கடற்பயணம், நீண்ட தடுப்புக் காவல் வாழ்வு, நிச்சயம் அற்ற எதிர்காலம் என அல்லாடிய அவர்களுக்கு ஓர் அமைதியான மாற்று ஏற்பாடு தேவைப்பட்டது.

கிறிக்கெற் இதற்கான அரிய மார்க்கம் என்று Blue Mountain Refugee Support Group என்ற அகதிகள் ஆதரவு அமைப்பைச் சார்ந்த நோலின் நாகிள் என்ற விளையாட்டு ஆசிரியை முன்மொழிந்தார். அவுஸ்திரேலியத் தமிழர் பேரவையின் கலாநிதி பாலாவிக்னேஸ்வரனுடன்இணைந்து அவர் கிறிக்கெற் அணியைத் திரட்டினார். இந்து சமுத்திரத்தின் ஊடாக 2012ஆம் ஆண்டில்வந்தஇளையோரைப்பெரும்பான்மையாகக் கொண்டிருந்ததால்"Ocean12" என இந்த அணி பெயரிடப்பட்டது. Last Man Stands என்றஎட்டுவீரர்கள்ஆடும் சர்வதேச அளவிலான 20-20 கிறிக்கெற் போட்டித்தொடரில் மேற்கு சிட்னி பிரிவில் Ocean12 தனது முதலாவது போட்டியை கார்த்திகை 2013 இல் விளையா-டியது. அகதி என்ற அங்கீகாரம் கிடைக்கும்வரை இந்த இளை-யோரின் தனிமை,வெறுமை, விரக்தி போன்றனவற்றுக்கு ஒரு வடிகாலாக அமைவதே அணியின் முதல் நோக்கு. ஆனாலும் கிறிக்கெற் ஊடாக ஆங்கில அறிவும் அவுஸ்திரேலியப் பழக்கவழக்கங்களும் புதியவர்களில் ஊறும் என்பதுடன் அகதிகள் எனப்படும் இந்தப் புதியவர்கள் எப்படி இருப்பர் என்ற அனுபவத்தை அவுஸ்திரேலிய இளையோருக்கு எடுத்துப்போகும் பொறுப்பையும் இந்த அணி ஏற்றுக்கொண்டது.



### LMS போட்டிகளும் Ocean12 அணியும்

சிட்னியின் Penrith புறநகரில் மார்கழி 2013இல் நடைபெற்ற போட்டியில் Ocean12 வயதுக்கு வந்து ஓர் அணியாக ஒருங்கிணைய ஆரம்பித்தது. தமது ஆற்றலையும் தன்னம்பிக்கையையும் ஒன்றிணைத்து Ocean12 நிமிர்ந்தது. தொடர்ந்து வந்த தை - மாசி மாதங்களில் Ocean12 வெற்றிகளை சுவீகரிக்க ஆரம்பித்தது. வீரர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டதுடன் அணியில்தமது இடங்களையும்தெளிந்து கொண்டனர். தாம் ஒரே அணி என்ற உணர்வுடன் விளையாடி மதிப்பையும் சம்பாதித்தனர். அவர்கள் போட்டிகளை மனநிறைவுடன் ஏற்று முழு வரவுடனும் கட்டுப்பாட்டுடனும்ஆடத்தொடங்கியவுடன் எதிரணிகள் திணற ஆரம்பித்தன. அணித் தலைவர் சுதாகர் சேனாதிபிள்ளை மற்றும் அணி முகாமையாளர் சிவராசா (சிவா) மன்மதராசா ஆகியோர் அணியைப்பொறுப்பாகமுன்னெடுத்துச் சென்றனர். அணியின் பிரகாசமான சாதனைகள் ஊடகங்களின் கவனத்தை அணி மீது குவிந்ததுடன், அதன் நீட்சியாக இவர்கள் யார் - இவர்களுக்கு என்ன பிரச்சினை என்ற கேள்விகளும் எழுந்து இலங்கை அகதிகளின் பிரச்சனையும் மீண்டும் பேசு பொருள் ஆயிற்று.

### சுற்றுப்போட்டிகள் - 2014 மற்றும் 2015

சிறப்பாக விளையாடியபோதிலும் இறுதி வெற்றிகளை அதிகம் கைப்பற்றாத Ocean12 அணி 2015ஆம் ஆண்டில் தமது முதலாவது LMS Parramatta League கிண்ணத்தை வென்றது.

வசந்தகாலத்தில் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்துக்கான கிண்ணத்தை சிட்னியில் Ocean12 வசப்படுத்தியது. அவுஸ்திரேலிய அளவிலான LMS Australian Championship போட்டிகளில் முதல்தடவையாக2015ஆம்ஆண்டிலே கலந்துகொண்ட Ocean12 அணி கால் இறுதிப்போட்டியில் தோற்றது.

### Ocean12 அணியின் உச்ச வெற்றிகள்

தமது அனுபவங்களை ஒன்று திரட்டி 2016 போட்டிகளில் Ocean12 விளையாடியது. சிட்னியில் நிகழும் தமிழர் விளையாட்டுப் போட்டிகள், மேற்கு சிட்னி உலகக் கிண்ணம் என முக்கிய வெற்றிகளை அவர்கள் ஈட்டினர். மேற்கு சிட்னி, சிட்னி என்று LMS தொடர் வெற்றிகளை அவர்கள் பெற்றனர். இந்த வெற்றிகள் 2016ஆம் ஆண்டின் LMS Australian Championship 2016 போட்டிகளின்வெற்றிவீரர்களாக வருவர் என்ற எதிவுகூறல்களை ஏற்படுத்தின.

கார்த்திகை 2016 Gold Coast இல் நடைபெற்ற Australian Championship தொடரில்அழுத்தங்களைத் தாண்டி முதற்சுற்றுப் போட்டிகளிலும் பின்னர் கால் மற்றும் அரை இறுதிப்போட்டிகளிலும் வென்ற Ocean12 அணி, இறுக்கமானஓர்இறுதிப்போட்டியில் வலுவான Rock Lobsters அணியை நான்கு ஓட்டங்களால் தோற்கடித்து முழு மைதானத்தையும் எழுந்து நின்று குதூகலிக்க வைத்து வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது. தொடரின் சிறந்த ஆட்டக்காரருக்கானவிருது பெற்ற பூரிபுருசோத்தமன் அடுத்த ஆண்டு நடைபெற்ற LMS உலகக்கிண்ணத் தொடரில் கலந்துகொண்ட அவுஸ்திரேலிய அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இத்தொடரின் முடிவில் Ocean12 அணி தரவரிசையில் அவுஸ்திரேலியாவின் முதலாவது அணியாகவும் உலகின் நான்காவது அணியாகவும் வந்தது. அணித் தலைவர் சுதாகர் சேனாதிபிள்ளை உலகின் துடுப்பாட்டத் தரவரிசையில் நான்காவது இடம் பெற்றார்.



பாலா விக்னேஸ்வரன்

### ஊடகங்களில் Ocean 12

எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் புகலிடம் தேடி அவுஸ்திரேலியா வந்து அணிக்கு எந்த விதமான காத்திரமான நிதி அனுசரணையோ போதிய போஷாக்குடன்இருப்பதற்கானசொந்தவல்லமையோ இல்லாதபோதிலும் Ocean12 செய்த சாதனைகள் ஊடகங்களின்செய்திகளிலும்விவரணங்களிலும் இடம்பெற்றன.

உலகமட்டத்தில் BBC, Al Jazeera, CNN, Times of India போன்றவற்றிலும் உள்ளூரில் ABC, SBS, Channel 9, Sydney Morning Herald, Daily Telegraph போன்றவற்றிலும் உலகளாவிய வலைத்தளங்கள் பலவற்றிலும் Ocean12 செய்திகள் இடம்பிடித்தன. விளையாட்டு வீரர்களும் அமைப்பாளர்களும் நேர்முகம் காணப்பட்டனர்.

அவுஸ்திரேலியா நாடாளுமன்றம் மற்றும் நியூ சவுத் வேல்ஸ் சட்டமன்றம் போன்றவற்றில் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் Ocean12 அணியைச் சிலாகித்துப் பேசினர். குறிப்பாக Ocean12 குறித்து இரண்டு விவரணப்படங்களும் எடுக்கப்பட்டன.



### மற்றைய வெற்றிகள்

LMS 2016 Australian Championship கிண்ணத்தைமட்டுமன்றி Refugee Cup, Multicultural Cup, Western Sydney World Cup போன்ற கிண்ணங்களையும் Ocean12 வென்றது. பலம்மிக்க அணிகள் கலந்துகொள்ளும் Sydney Cricket League Ria Cup கிண்ணத்தையும் 2019ஆம் ஆண்டில் Ocean12 கைப்பற்றியது.

(19ஆம் பக்கம் பார்க்க)

ஊழிக்காலம்-2

05



# புயலுக்குப்பின்...



பேருந்து வந்து போய்க்கொண்டிருந்த தரிப்பிடத்தில் பார்வதி அமர்ந்திருந்தாள். மனம் மிகவும் ஒடுங்கிப்போயிருந்தது. பிள்ளைகள் என்ன ஆனார்களோ? இனி தன்னை தன் பிள்ளைகளுடன் செல்ல அனுமதிக்கமாட்டார்கள் என்பது அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது. அவர்கள் நான் வருவேனெனக் காத்திருப்பார்களோ ஒவ்வொன்றையும் நினைத்து நினைத்து மனமிடிந்துபோனாள்.

அவள் அந்த பேருந்து தரிப்பிடத்துக்கு வந்தபோது ஆசனங்கள் நிரம்பியிருந்தன. முன்புறமிருந்த மரத்தடியில் பலர் அமர்ந்திருந்தனர். அவளும் தன் சிறு பொதியுடன் அதில் போய் உட்கார்ந்தாள். ஆண்களும் பெண்களும் கலந்தே விடப்பட்டிருந்தாலும், பழக்கதோசம் பிரிந்தே இருந்தார்கள். பார்வதி மிகவும் விலகாமல் நடுவே அமர்ந்தாள். அவள்முன் மிகுந்த சோகத்துடன் புலிமறவன், கண்ணதாசன், வீரா ஆகியோர் இருந்தனர். மெல்லிய புன்னகை ஒன்றை செய்தாலும் அந்தப் புன்னகைகள் உயிரற்றிருந்தன.

இப்போது அவளருகே சில இளைஞர்கள் வந்து அமர்ந்தனர். அவர்களில் குறிப்பாக ஒருவன் அவளை நெருங்கி அமர்ந்தான். அவன் கதிர் எனப்படும் போராளி. அவளுடைய பேத்தியை முல்லைத்தீவுக்குள் கொண்டுவந்துவிட்டதாகச் சொன்னவன். அவள் அவனை இனங்கண்டதும்,

“தம்பி, உள்ளதைச் சொல்லும் ஏதும் நடந்திருந்தாலும் மறைக்காதை தமிழொளி எங்க”

“சத்தியமா அம்மா நான் கூட்டிக் கொணந்து சனத்தோட விட்டிட்டுப்போனனான்.”

“இல்லையேடா நாங்கள் எல்லாருமா ஒருநாள் முழுக்க தேடினமே.. நீங்கள் என்னண்டு வந்தனீங்கள்”

“எங்கள முல்லைத்தீவுக்க வைச்சுப் பிடிச்சிட்டாங்களம்மா”

“எப்பிடி”

“முல்லைத்தீவுக்கநாங்கள்பன்னிரண்டு பேரும் சுத்தித் திரிய பிடிச்சிட்டாங்கள்.”

“என்னண்டு தெரியும்”

“அவனுக்கா தெரியாது? என்னைப் பிடிச்ச உடனேயே கேட்டவன் ஆட்லறி ரெயினிங் எத்தின மாசம் எடுத்தனி எண்டு”

“அப்ப இவளையும் பிடிச்சிருப்பாங்களோ?”

“சான்சே இல்ல”

அவள் பேசிக்கொண்டிருக்க பாண் கொண்டு வந்தார்கள். எல்லோருக்கும் பாணும் வாழைப்பழமும் கிடைத்தன.

“பாணைக் கண்ணால் கண்டு ஒருவருசம் வரும்போல” - என்றபடி பிள்ளைகள்ஆவலாகஓடிச்சென்றுவாங்கினார்கள். பார்வதி எழுந்திருக்கவில்லை.

ஒருமுதியவன், அவனைமட்டக்களப்பு படையணியில் கண்டிருக்கிறாள். ஒரு இறாத்தல்பாணையும்நான்குவாழைப்பழங்களையும் கொண்டுவந்து தந்தான்.

“உங்களை கெதியா விட்டிருவாங்கள், யோசிக்காதையுங்க” - என்று ஆறுதல் கூறிவிட்டுப்போனான்.

நன்கு இருள் சூழ்ந்து விட்டது அங்கங்கே மின்மினிப் பூச்சிகள் போல மின்விளக்குகள் தூங்கிவழிந்தன.

கதிர் “பார்வதி அம்மா” என மெதுவாக அழைத்தான்.

“என்னப்பா”

“எங்க கொண்டுபோறாங்களோ தெரியாது. கையில ஒருசதக் காசில்ல. காசிருந்தா ஒரு நூறு ரூபா தாங்கம்மா”

அவள் தன் பையிலிருந்து ஒரு சில நூறு ரூபாத்தாள்களை எடுத்துக் கொடுத்தாள்.

“நன்றியம்மா” என்றவனிடம்,

“போதுமா இன்னும்...” - என வினவிய பார்வதியிடம,

“போதும்ம்மா” - என அவன் அவசரமாக மறுத்தான்.

“இஞ்சால வாங்க லைன் பண்ணுங்க” - என்ற குரல் இவர்களது உரையாடலை உடைத்தது.

சீருடையில் வந்த ஒருவனே அவ்வாறு அழைத்தான். பெண்கள் திமுதிமுவென ஓடிச்சென்று வரிசையில் இடம்பிடித்தனர்.

“லைன் லைன்” என்று கத்தியவன் ஒதுங்கி நின்ற பார்வதியை அழைத்து,

“அம்மா இங்கனக்க வாங்க” - என முன்னே விட்டான். அவள் அதில் அமர்ந்தாள்.

இனி என்ன?இனி என்ன? அவளுக்கு சிந்திப்பதே தேவையற்றதாக தெரிந்தது.

* * *

காமினி மகாவித்தியாலத்தில் தெருக்கரையாக போடப்பட்டிருந்த அந்த பெரிய கொட்டகையுள் அதன் தென்மேற்கு மூலையில் படுத்திருந்தவாறே விட்டத்தை வெறித்து நோக்கியவாறிருந்தாள் பார்வதி. அவளுடைய பிள்ளைகளின் நினைவு அவள் உள்ளத்தை கொதிக்கவைத்துக் கொண்டிருந்தது.

கொட்டகையிலிருந்து பல பிள்ளைகள் வெளியே உலாவச் சென்றிருந்தனர். அவளருகே இருந்த கிரிஜா எதிலும் ஒட்டாமலிருந்தாள்.

“அம்மா எங்கள விடுவாங்களா? எப்ப விடுவாங்கள்.” - ஐம்பது அறுபது தடவைகளுக்கு மேல் இந்தக்கேள்வியைக் கேட்டுவிட்டாள். பார்வதியின் பெருமூச்சு மட்டுமேபதிலாகவந்துகொண்டிருந்தது. அவளுடைய மனம் முழுதும் எங்கேயோ நின்றுகொண்டிருந்தது.

விளையாட்டாக நான் வேறிடம் போகப்போறன் என்று சொன்னாலுமே அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுகிற அவளுடைய சின்னப்பேரன் இப்போது என்ன செய்வான். எல்லோரும் ஒன்றாக விடப்படுவார்களா? பிரித்துவிடுவார்களா? மருமகள் தனித்து விடப்பட்டால் பிள்ளைகளுடன் என்ன செய்வாள். நினைக்க நினைக்க தலை வெடிப்பது போல இருந்தது.

‘எனது குடும்பத்தினரைப் பொறுத்த வரையில் நான் செத்துப்போனேன். இனி அவர்களை அவர்களே பார்த்துக்கொள்ள வேண்டும். பார்வதிஇப்படித்தான்நினைத்தாள் நான் இருப்பது அவர்களுக்கு தெரியாது. அவர்கள் இருப்பது எனக்குத் தெரியாது. சொத்து, சுகம், நிலம், வீடு, உறவுகள் அனைத்தும் இழந்து நான் வந்திருப்பது மரணத்துக்கு நிகர்தானே என்னை நம்பி யாரும் இல்லை. யாருமே இல்லை. நான்தான் அவர்களைக் கட்டிச் சுமந்தேன் என்பதோ, சுமக்கிறேன் என்பதோ ஒருமாயை. யுத்தம் அனைவரையும் பிய்த்து வீசிவிட்டது’

திடீரென அவள்குடும்பம் உடைத்து எறியப்பட்டுவிட்டது.

வழமைபோல இரவு உறங்க முடியவில்லை. காலையில் மெதுமெதுவாக அந்த கூடாரத்தைச்சுற்றி மக்கள் வந்து வந்து போனார்கள். சிலர் நின்று பின்புறமிருந்தவர்களிடம் எதையோ விசாரித்தார்கள். தமது பிள்ளைகளைப்பற்றித்தான் விசாரிக்கிறார்களோ.

“ஓம்...பிள்ளை நாங்க வரக்க அவா சோதியா படையணிதான்”

“கயல்விழி, ஒரு கறுத்தப்பிள்ளை மோட்டச்சயிக்கிள்ள வருவா...?

“மாலதியுங்கோ, ஒரு கால் காயப்பட்டிருந்தவா.”

ஒவ்வொருவரும் போராளியாகவிருந்த தம் பிள்ளைகளை விட்டுவிட்டு வந்திருந்தனர். ஏப்ரல் இருபதில் இராணுவச்சுற்றிவளைப்பில் சிக்கியும் பலர் வந்திருந்தனர். இவர்களில் காயமடைந்தவர்கள் உடனடியாகப் பிரித்து வேறிடங்களுக்கு அனுப்பப்பட்டுவிட்டன. அவர்கள் எங்கே எந்த வைத்தியசாலையில் என்பது யாருக்கும் தெரியவில்லை. கணவன், பிள்ளைகள், மனைவி, தாய், தந்தை என பிரித்துவிடப்பட்ட உறவுகள் அதிகம்.

கைவிட்டுவிட்டு வந்த போராளிப்பிள்ளைகள் எங்கே என்பது யாருக்கும் தெரியவில்லை. பிள்ளைகளை யாரிடமாவது விட்டுவிட்டுகாயத்துடன்கப்பலேறியவர்களுக்கும் தமது உறவுகள் இப்போது எங்கே என்பது தெரியவில்லை. யுத்தத்தின் இறுதியில் வெளியேறி வந்த இவர்களிடம் விவரமறியத் துடித்தனர் மக்கள்.

அவர்களுக்கு வழங்கும்படியாக எந்தத் தகவல்களும் இவர்களிடம் இல்லை.

நன்கு விடிந்தபின் பார்வதி அந்த முகாமைச் சுற்றிப் பார்க்கலாம் எனப் புறப்பட்டாள். அவள் முதலாவதாக இருந்த கட்டடத்தின் ‘வராண்டா’ வழியாக நடந்து கொண்டிருந்தபோது, ஒரு இளம் பெண் ஓடிவந்தாள்.

“அ...மம்மீ..மம்மி” - என்ற குரல் கேட்டுத்திரும்பினாள். அது யசோ.

“மம்மீ எங்கட அப்பாவையளைக் கண்டனீங்களோ”

“ஏன் அவர் உங்களோட வரயில்லையா?”

“நாங்கள் வரும்போது அவரும் தம்பியும் பின்னால வந்தவை, காணேல்ல. இஞ்சால வரயில்லை”

“அப்ப அம்மா எங்க”

“அவவும் தம்பியவையும் கோமரசன் குள முகாமில இருக்கினம்”

“உம்மட புருசன்”

அவர் வரும்போது காயப்பட்டிட்டார். எங்கயோ தூர கொண்டு போயிட்டாங்கள். எங்கயெண்டு தெரியேல்ல”

அவள் அழுதாள்.

பார்வதியின் பக்கத்து வீடு இவர்களுடையது. பார்வதியின் போராளிப்பேத்தியின் நெருங்கிய தோழி. தந்தை ஒரு மிதிவண்டி திருத்துநர். கட்டாய ஆட்சேர்ப்பில் மூத்த மகனை அனுப்பி, அவன் மூன்று மாதங்களிலேயே பலியாகி சடலமாக வந்துவிட்டான். யசோ வீட்டிற்கு ஒரே பெண்பிள்ளை. எனவே அவளுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். இடப்பெயர்வின்போது அவளுக்கு தருமபுரத்தில் ஒரு குழந்தை பிறந்திருந்தது. அந்த பச்சைக் குழந்தையுடன் இங்கே தனித்திருந்தாள். அவள் கணவன் புலிகளால் படைச்சேர்ப்புக்காக கொண்டு செல்லப்பட்டு படுகாயமடைந்திருந்தான்.

யசோ இவற்றை மீண்டும் மீண்டும் சொல்லி அழுதாள். அவளைத் தேற்றுவதற்கு பார்வதி முயலவில்லை. அவள் தன் கையாலேயே கன்னத்தில் வழிந்த கண்ணீரின் தடயத்தை அழித்தாள். மிகவும் செல்லமாகவளர்க்கப்பட்டவள். அழுகையை அறிந்திராதவள். இன்று அவள் அழுகைக்கே சொந்தக்காரி.

யாருக்கு யார் தேறுதல் சொல்ல முடியும். அவள் பார்வதியின் பேத்தியைப்பற்றி எதுவும் கேட்கவில்லை. கேட்டாலும் சொல்வதற்கு இவளிடம் எதுவுமில்லை. அவளைக் காப்பாற்ற அவள் அண்ணன் பலியானான். அவளுடைய அண்ணனைக் காப்பாற்ற அவள் போனாள். பார்வதி ஒரு பெரு மூச்சுடன் அப்பால் போனாள்.

அந்தக் கொட்டகையின் பின்புறமுள்ள தாழ்வாரத்தில் குடியிருந்த குடும்பம் தாய் செல்லடியில் இறந்துபோக, பேத்தியாருடன் வந்திருந்தன குழந்தைகள். தகப்பன் இருந்தான். இரு சிறார்கள். ஒருவன் ஆறு வயது ஒரு காலை இழந்திருந்தான். மற்றவன் அதிர்ச்சியில் பேச்சை இழந்திருந்தான். அவனுக்கு எட்டு வயது.

இதே கூடாரத்தின் முன்புறம் ஒரு இளங்குடும்பம். கணவன் மனைவி. இரண்டு வயதில் ஒரு பிள்ளை. அவர்களுக்கு கூடாரம் இல்லை. பாலைமரத்தின் நிழலில் எந்த மறைப்புமின்றி இருந்தனர். ஒரு பாயைப்போட்டு அதில் உட்கார்ந்திருந்தனர். இரவில் அதிலேயே உறங்குவார்கள். கணவன் இன்னும் முற்றாக குணமாகாத நிலையிலிருந்தான். அண்மையில்தான்வைத்தியசாலையிலிருந்து இங்கே கொண்டுவந்திருந்தனர்.

“எங்கயிருந்து காயப்பட்டனீங்கள்”

“புதுக்குடியிருப்பிலஅக்கா! சொன்னா நம்பமாட்டீங்கள், எனக்கு நெஞ்சில அடி. திரும்பிப்பாத்தா இவள் முதுகு பிழந்து கிடக்கிறாள். பிள்ளையைக் காணேல்ல. இருந்த குறிப்புக்கு மண்ணைத்தோண்டித்தானக்கா இந்தப்பிள்ளைய எடுத்தனான். அவனால் சன்னமாகத்தான் பேச முடிந்தது.

“முத்தமகளுக்கு நாலுவயது. படுகாயம். எங்கயோ கொழும்புப் பக்கமா கொண்டு போயிட்டாங்கள். பாக்க விடுறாங்களில்லை. பெரிய காயம் என்ன பாடோ பச்சைக்குழந்தை”

தாய் விம்மினாள்.

பார்வதி எதுவும் தேறுதல் சொல்லவில்லை. அழட்டும். அழுதால் மன அழுத்தம் கரைந்து போகும். ஆனால், அது எப்படி கரைந்துபோகும் என்பதுதான் யாருக்கும் புரியவில்லை.

எப்படிப்பட்ட வாழ்க்கையை தொலைத்துவிட்டோம். எவ்வளவு காலத்தை இழந்துவிட்டோம். காலங்கடந்தாலும் மறக்கமுடியாத வடுக்களை மனதிலும் உடலிலும் சுமந்துகொண்டுவந்து, இங்கேநடைபிணங்களாகிக் கிடக்கிறாங்களே. காலத்தால்ஆறுமா?

கண்கள் மின்ன அந்தச் சன்னமான குரலில்கூட புலிகளுக்கு எதிராக அவனால் தன் கோபத்தை வெளிப்படுத்த முடிந்தது.

பார்வதிக்கு தன்னையே அவன் சாடுவதாக தெரிந்தது. இந்த சம்பவங்களில் எந்த சம்பந்தமும் தனக்கில்லையாயினும் அது ஒருஇயக்கம்அமைப்பு. அங்கேநடைபெறுவதை தீர்மானிப்பது தலைமையேயாயினும் விளைவுகளுக்கு தனித்தும் ஒருமித்தும் அனைவரும் பொறுப்பேற்க வேண்டியதாயிற்று. அது யாராயினும்.

பிரபாகரனின் தாயாரை சக்கரநாற்காலியில்வைத்துத்தள்ளியவாறேஒரு போராளி வர, பின்னே சாரமும் வெள்ளைச்சேட்டும் அணிந்து, தளர்ந்த நடையுடன் நடந்து வந்தவேலுப்பிள்ளைஅவர்களையும். பிரபாகரனுக்குப் பெண்கொடுத்த அவரது மாமியார் சித்தசுவாதீனமற்ற நிலையில் உறவினரால் அழைத்து வரப்பட்டு, இராணுவத்திடம் சரணடைந்த கோலமும் பார்வதியின் கண்ணில் வந்து போயின.

(19ஆம் பக்கம் பார்க்க)


Lycamobile
4G LTE
THE UNLIMITED PLAN
BONUS DATA
OFFER
Unlimited Plan M
50GB
22GB + 28GB BONUS DATA
$40
Unlimited
Oz talk & text
Unlimited
Calls to 15 countries
Unlimited Plan S
36GB
12GB + 24GB BONUS DATA
$30
Oz talk & text
Calls to 12 countries
Unlimited Plan XL
40GB + 35GB BONUS DATA
$50
Oz talk & text
Calls to 54 countries
lycamobile.com.au
1300-854-607
epay
coles
BIGW
TARGET
OTR
coles express
NewsLink
This offers applies to the new customers only. In order to get the Bonus data, the customers has to successfully Activate the sim with one of the following plans. The eligible free bonus data will be added automatically within 6 hours of successful Sim Activation. The offer is valid for 28 days. The plan will automatically renewed with a standard data at the end of the 28 days period using the main balance available in your Lycamobile number or through the payment card, depending on the initial activation method. If the customer do not want the plan to renew, dial *190# and follow the instructions to cancel the plans auto renewal. The Lycamobile service is only for personal use. If you use the service unreasonably (e.g. fraudulently or for business purposes), we may suspend or cancel your service. These rates and inclusions are current as of 20/05/2019. We may remove or amend this offer by giving 7 days' notice on our website at www.lycamobile.com.au. Any plans already activated at time of withdrawal will continue until expiry of 28 days from activation. For More Info, Please visit: www.lycamobile.com.au.

# கடல் தாண்டி வந்த சாதனை வீரர்கள்



(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தது போல 2019 புரட்டாதி மாதத்தில் LMS Australian Championship தொடரை Ocean12 மீண்டும் வென்றது. இத்தொடரின் சிறந்த வீரராக அறிவிக்கப்பட்ட சுகி ஜீவன் 2020ஆம் ஆண்டு நிகழும் LMS World Cup போட்டியில் விளையாடும் அவுஸ்திரேலிய அணியில் இணைகிறார்.

அகதிகளையும் புகலிடக் கோரிக்கையாளர்களையும் கொண்ட Ocean12 கிறிக்கெற் அணி சிட்னியில் மார்கழி 2019இல் நிகழும் LMS World Championship போட்டித் தொடரில் விளையாடுகிறது.

சின்னச்சின்ன அனுசரணையாளர்களான PKSS, STC, Regal Sheetmetals, Startts, Blue Mountains Refugee Support Group, Spice Mart மற்றும் தனிப்பட்ட சில ஆதவாளர்களின் நிதிப்பங்களிப்புடன் Ocean12 என்ற அணி செய்த சாதனைகளுக்கான முழுக்காரணம், அணியுடன் இணைந்து பயணிக்கும் வீரர்கள் காட்டும் தன்னம்பிக்கை, விடா முயற்சி, தலைமைத்துவம், அணி மனப்பான்மை என்பதில் மறு கருத்து இருக்கமுடியாது. இந்த ஆண்டின் LMS World Championship போட்டியில் Ocean12 அணிக்கு வெற்றிபெற வாழ்த்துகள்.



## புயலுக்குப்பின்...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவளுடையதலைக்குள் இடியும் மின்னலும் போட்டி போட்டுத் தாண்டவமாடின. அவளுக்குத் தலை சுற்றியது. தன் இருக்கைக்குத் திரும்பினாள்.

அவள் சாய்ந்து படுத்தாள் அப்போது யாழினி ஓடிவந்து அவளருகில் உட்கார்ந்தாள். சிறந்த பேச்சாளர். கல்விக்குழுவிலிருந்து பதவியேற்றவள்.

இயக்கம் பல குழுக்களாக இல்லாமல் படையணியாக மட்டுமே இருந்த காலங்களில் பல இயக்கங்கள் உருவாகி பலமுனைகளில் அரசாங்கத்தை எதிர்த்து போராட்டத்தை முன்னெடுத்தன. அப்போது இயக்கம் என்று சொன்னாலே நெருப்பு என்று மக்கள் விலகி வாழ்ந்தனர்.

ஆயினுமென்ன? ஆங்காங்கே பிள்ளைகள் காணாமற்போவதும் நடந்துகொண்டு தான் இருந்தது. அப்படிக் காணாமற் போனோர் எங்கு போனார்கள்? எந்த இயக்கத்தில் இணைந்தார்கள் என்பதெல்லாம் பெரும் மர்மமாகவே இருந்தது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதுகளின் கடைசியில் விடுதலைப் புலிகளின் தலைமையே தலைமை. ஏனையவை எல்லாம் தேவையற்றவை என்ற கருத்துடன் இயக்கங்களுக்கிடையில் சண்டைகள் தொடங்கியது. இதன் காரணமாக கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்களினதும் மக்களினதும் தொகை இன்றுவரை கணக்கெடுக்கப்படவில்லை. இந்தியப் படை வரவின் பிறகு அவர்களின் பாதுகாப்பில் தமிழ் இளைஞர்களை பலவந்தமாகப் பிடித்துக்கட்டாயமாக படையில் சேர்த்தன ஏனைய இயக்கங்கள். தப்பியோடியவர்களையும் ஒலிபெருக்கி வைத்து ஊரூராக "எம்மிடம் சரணடையுங்கள் உங்களுக்கு பொதுமன்னிப்பு வழங்குவோம்" என அறிவித்து புலிகளிடம் சரணடைந்து போனவர்களும், அப்படிப்போகாமல் புலிகளால் பிடித்துச் செல்லப் பட்டோரும் இன்று வரை என்ன ஆனார்கள் என்பது தெரியாது. அதற்கும் கணக்கில்லை.

இந்தியப்படை வெளியேறியபோது புலிகளின் கையில் அகப்பட்டு அழிக்கப் பட்ட தமிழ் இளைஞர்கள் மிக அதிகம். இதற்கும் கணக்கு கிடையாது.

ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூறில் இந்தியப்படை வெளியேறியபோது இந்தியப்படையின் கட்டுப்பாட்டிலிருந்த அனைத்து தமிழ் பிரதேசங்களும் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டன. இது ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தேழில் இருந்த நிலப்பகுதியை விட மிக அதிகமாகும்.

இந்தப்பெருநிலத்தைவைத்துக்கொண்டு, தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் அரசியற்றுறையை ஆரம்பித்ததுடன் மகளிர் நிர்வாகத்தையும் தனிப்படுத்தி இனங்காட்டியது. இப்படியே நிழல் நிர்வாகமொன்றையும், புலனாய்வுப் பிரிவொன்றையும், நிதிப்பிரிவையும் தனித்தனி நிர்வாக அலகுகளாகப் பிரித்தது புலிகள் இயக்கம்.

பார்வதி விரிவாக இந்த வரலாற்றை யாழினியுடன் பேசிக் கொண்டிருக்க இடைமறித்த யாழினி

"அது சரி மம்மீ, நீங்கள் எப்பிடி? உங்கட பிள்ளையள் ஆரேனும்..?"

பார்வதி பெருமூச்சு விட்டாள்.

"எனக்கும் ஆதரவற்ற நிலைதான் இருந்தது. ஒருவன் இந்தியப்படை ஆதரவில பிடுங்கப்பட்டான். மற்றவன் ஊருக்க நிண்ட இயக்கத்தால கடத்தப்பட்டான்.. ரெண்டு பேருமே கொஞ்ச நாளால தப்பி ஓடி வந்திட்டாங்கள். என்றாலும் அவர்களை ஒழிச்சு வைக்க இடம் தேட வேண்டியதாப் போச்சுது."


(இன்னும் வரும்)




புகழ்பெற்ற ஜோதிடர், ஆன்மீக மற்றும் மனநோய் குணப்படுத்துபவர்

# பண்டித் சிவராஜ்

- வியாபார பிரச்சினைகள்
- குடும்பப் பிரச்சினைகள்
- விவாகரத்துப் பிரச்சினைகள்
- பணப் பிரச்சினைகள்
- காதல் பிரச்சினைகள்
- உடலுறவுப் பிரச்சினைகள்
- திருமணப் பிரச்சினைகள்
- எதிரிகள் பிரச்சினைகள்
- அதிஸ்டம் போன்றவைகள்...



SATISFACTION 100% GUARANTEE

தனியாகவும் இரகசியமாகவும் கைரேகை, முகம், புகைப்படம் மற்றும் பத்ரா பார்த்தல்



நம்பிக்கைதான் வாழ்க்கை

* ஒருமுறை நேசித்தவரை மீண்டும் கொண்டுவரக்கூடிய நிபுணத்துவம் வாய்ந்தவர் *






Provide Coupon Code **PATRIK**

TO RECEIVE $10 COUPON OFF ON OUR PALM READING

சூனியம் மற்றும் தீய சக்திகள் போன்றவற்றை விரட்டுவதில் நிபுணத்துவம் பெற்றவர்

உங்களுக்கு பிரச்சினை உண்டா? நான் தீர்வு வைத்திருக்கிறேன்

முன்பதிவுகளுக்கு:

**0415-633-659**

**Psychicshivaraj.com**

3, Mason Street, Dandenong - 3175

# LEVEL CROSSING REMOVAL WORKS

## 19–21 NOVEMBER 2019

### Buses replace trains between Dandenong and Cranbourne

To prepare the rail for the new road bridge at Evans Road, buses will replace trains between Dandenong and Cranbourne stations in mid November. This will allow us to safely complete electrical works, service relocation and preparatory works for the road bridge.

Evans Road is the first of four crossings being removed as part of the Cranbourne Line Upgrade.

This vital upgrade will fully duplicate the track between Cranbourne and Dandenong and deliver a brand new Merinda Park Station.

For more information visit
levelcrossings.vic.gov.au/disruptions

**Buses replace trains**

8.30pm Tuesday 19 November to last train Thursday 21 November

Allow up to 45 minutes of extra travel time

LEVEL CROSSING REMOVAL PROJECT




contact@levelcrossings.vic.gov.au
1800 105 105
levelcrossings.vic.gov.au

Translation service – For languages other than English, please call 9280 0780.

Please contact us if you would like this information in an accessible format.

Authorised by the Victorian Government, 1 Treasury Place, Melbourne

VICTORIA'S BIG BUILD

VICTORIA State Government

SEPA2901


உங்கள் அதிநவீன பாதுகாப்புத் தேவைகளுக்காக இன்றே தொடர்புகொள்ளுங்கள்!
NS Systems SECURITY
0447 533 555
www.nssystems.com.au
We are registered and licensed by Victoria Police.
* Standard Installation, 3 Year parts (Manufacturer Defects) & 3 Year Labor Warranty !!
+ 0.75c Per day, 6 Months Up Front Payment
UTECH SOLUTIONS
Corporate Group
info@nssystems.com.au
PO BOX 633, Noble Park, VIC 3174
Private security Business License: 910-932-10S
Protect your Home & Family, Secure your Premises & Business.





கீதா மதிவாணன்

# வானவில் தரையில் வந்த பெருவிழா

# கன்பராவின் வசந்தகாலத் திருவிழா

வசந்தகாலம் என்றாலே காணுமிடமெல்லாம் களைகட்டிவிடும் வண்ணவண்ணப் பூக்கள் எங்கணும் மலர்ந்து கண்ணைக் கவரும். வாசம் பரப்பி மகிழ்விக்கும். சிந்தையை குளிர்விக்கும். தோட்டத்தின் ஒற்றைப்பூவே உளம் மயக்கும் என்னும்போது ஒரு மில்லியன் பூக்களை ஒரே இடத்தில் காணநேரிட்டால்?

தெற்கு அரைக்கோளத்திலேயே மிகப் பெரிய மலர்க்காட்சி என்று சொல்லப்படுகிற கன்பராவின் Floriade திருவிழாவில்தான் அத்தகு அரிய காட்சியைக் காண முடியும்.

ஆண்டுதோறும் செப்டம்பர் - ஒக்டோபர் மாதங்களில் ஒருமாத காலத்துக்கு நடைபெறும் இந்த வசந்தகாலக் கொண்டாட்டம் எப்போது ஆரம்பித்தது?

ஆஸ்திரேலியாவின் தலைநகராக கன்பெரா உருவாக்கப்பட்டதன் 75 ஆவது பிறந்தநாள் கொண்டாட்டமாக ஏதேனும் புதுமை செய்ய எண்ணியபோது தோன்றியதுதான் இந்த மலர்க்காட்சி கருத்துப்படிவம்.

Burley Griffin ஏரிக்கரையில் அமைந்திருக்கும் கொமன்வெல்த் பூங்காவில் அதற்கான திட்டம் வகுக்கப்பட்டது. நெதர்லாந்தின் உலகப்புகழ் வாய்ந்த Keukenhof மலர்த்தோட்டத்தை அடிப்படையாய்க் கொண்டு இங்கும் அது போலவே உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் செயற்பாட்டாளாரான நிலவடிவமைப்பு வல்லுநர் Christiaan Slotemaked de Bruine மேற்பார்வையில் சிற்பங்கள், ஒளிவிளக்குகள், பூப்படுகைகள், இசைமேடைகள் என ஒவ்வொன்றாக உருவாக்கப்பட்டன.

1988 இல் முறையாக துவங்கப்பட்ட மலர்த்திருவிழா ஆண்டுதோறும் புதிய புதியமையக்கருக்களைக்கொண்டு பார்வையாளர்களைக் கவர்ந்திழுத்துவருகிறது.

32 ஆவது மலர்த்திருவிழாவாக நடப்பு ஆண்டின் (2019) theme அதாவது கருப்பொருள் world in Bloom. மையப் பொருளுக்கேற்றபடி Tulips, Poppies, Daffodils, Pansies, Chrysanthemum என வகைவகையாக வண்ணவண்ணப் பூக்கள் கண்ணைப் பறித்தாலும் மைய ஈர்ப்பென்னவோ துலிப் மலர்கள்தான். துலிப்மலர்களுள்ளும்தான் எத்தனைவகை எத்தனை வண்ணம்.

சில பூக்களை ஒற்றையாகப் பார்த்தாலே வசீகரிக்கும். சில பூக்களைக்கொத்தாகப் பார்க்க அழகு. ஆனால் துலிப் பூக்களை வயலாகப் பார்ப்பதே பேரழகு. கறுப்பு வண்ண பான்சி மலர்கள், அடுக்கிதழ் துலிப் மலர்கள், ஆஸ்திரேலியத் தேனீக்கள் போன்றவை இன்னபிற சிறப்பம்சங்கள்.

தோட்டத்துக் குள்ளர்கள் இன்னொரு சுவாரசியமான ஈர்ப்பு. வயதுவாரியாக குழந்தைகளும் பெரியவர்களும் வண்ணம் அடித்து அழகுபடுத்திய குள்ளர்கள்வரிசை கட்டி நின்று வசீகரிக்கிறார்கள்.

Ferris wheel எனப்படும் ராட்சத ராட்டினம் தவிர்க்கவியலாத சிறப்பம்சம். சுமார் 32 மீற்றர் உயரத்திலிருந்து பூங்காவின் மொத்தப் பரப்பையும் பூப்படுகைகளின் அழகையும் மட்டுமல்லாது ஒட்டுமொத்த கன்பராவையுமே பார்த்து உவக்கலாம்.



பல்வேறு கலாச்சாரப் பின்னணியில் இசை, நடனம், கலைகள், உடைகள், கலைப்பொருட்கள், தோட்ட உபகரணங்கள் விற்பனை நிலையங்கள், தோட்டக்கலைப் பயிற்சிவகுப்புகள், நாய்க்கண்காட்சி, குழந்தைகளுக்கான விளையாட்டுகள், பெரியவர்களுக்கான பொழுதுபோக்கு அம்சங்கள், உணவு, மதுபானம் என பன்முனைக்கொண்டாட்டத்தின் உச்சம் இத்திருவிழா.

பகல் பொழுதில் வண்ண வண்ணப் பூக்கள் கண்பறிக்கின்றன என்றால் இரவுப் பொழுதில் வண்ண வண்ண ஒளியலங்காரங்கள் வாய்பிளக்கவைக்கின்றன. பகலின் தோற்றத்தை முற்றிலுமாய் மாற்றி வேறொரு உலகைக்கண்முன் விரிக்கின்றது Nightfest எனப்படும் இரவொளித்திருவிழா. கிட்டத்தட்ட சிட்னியின் "விவித்" திருவிழாவை ஒத்து பூங்கா முழுவதும் வண்ண ஒளிவீச்சுகள் குழைந்தடிக்கின்றன.

ஆண்டுதோறும் ஐந்து லட்சம் பார்வையாளர்கள் உள்ளூர், வெளியூர், வெளி மாநிலங்கள் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலிருந்தும் இத்திருவிழாவுக்கு வருகை தந்து சிறப்பிக்கின்றனர். காணுமிடமெல்லாம் மலர்களோடு போட்டிபோட்டுக் கொண்டு மனிதத் தலைகள். புகைப்படக் கலைஞர்களுக்கு கொண்டாட்டம் என்றால் தற்பட (செல்பி) கலைஞர்களுக்கோ பெருங்கொண்டாட்டம்.

அவுஸ்திரேலியாவில் இருந்து உலகெங்கும் தமிழ்மணம் பரப்பும்
உங்கள் தமிழ் வானொலி
தாயகம்
தமிழ் ஒலிபரப்பு சேவை
வையகம் தழுவிய வான்வழித் தோழன்

எமது நிகழ்ச்சிகளை
- www.thayagam.net இணையத்தளத்தினூடாகவும்
- Mobile தொலைபேசியினூடாகவும்
- எமது பிரத்தியேக வானொலிகளினூடாகவும் கேட்கலாம்.
Wifi
மேலதிக விபரங்கள், விளம்பரங்கள் மற்றும் தொடர்புகளுக்கு:
0432 710 238 | 02 8458 2393
www.thayagam.net /thayagam.tamil
Thayagam Tamil Broadcasting Service (TTBS)

# ஜோகி மஹார்ஷி ஜோதிட நிலையம்

## பண்டித் ஓம் சாய்






குருஜி அவர்கள் உங்களுடைய கடந்த காலம், நிகழ்காலம்,
எதிர்காலம் மற்றும் கைரேகை, முக லக்ணம்,
ஜாதகம், புகைப்படம் பார்த்து நிரந்தரத் தீர்வு கூறுவார்

- தொழில்
- கல்வி
- வியாபாரம்
- திருமணம்
- உடல்நலம்
- வசியம் செய்தல்
- வாஸ்து சாஸ்திரம்
- காதல் விவகாரம்
- குழந்தை பாக்கியம்
- நாம நட்சத்திரம்
- வழக்கு மன்ற விவகாரம்
- கண்திருஷ்டி கழித்தல்
- லக்ஷ்மி வசீகரம்
- தாம்பத்தியக் கோளாறு
- கணவன் மனைவி ஒற்றுமையின்மை

எல்லா காரியங்களுக்கும் பரிகாரம் செய்து தரப்படும்



உங்கள் வாழ்க்கை சந்தோஷமாக அமைய
மூல மந்திரம், ஓம் கார மந்திரம், துர் அதிஷ்டம்
மற்றும், வசியம், மந்தர செய்வினைகள்,
பில்லி சூனியம் ஆகியவற்றிலிருந்து நிவாரணம்
செய்து கொடுக்கப்படும்

**எந்தப் பிரச்சனை ஆனாலும்**
**100% உத்தரவாதம்**

30, ARCHER STREET,
UPPER MOUNT GRAVATT QLD 4122
astroyogimaharshi@gmail.com

+61451542442
www.astroyogimaharshi.com.au

AVAILABLE IN SYDNEY / MELBOURNE / CANBERRA




| MONTH | FINAL CUT OFF DATE | EST ARRIVAL IN SL |
|---|---|---|
| August | 2019-08-03 | 2019-09-10 |
| August | 2019-08-10 | 2019-09-17 * |
| August | 2019-08-17 | 2019-09-24 |
| August | 2019-08-24 | 2019-10-01 * |
| August | 2019-08-31 | 2019-10-08 * |
| September | 2019-09-07 | 2019-10-15 |
| September | 2019-09-14 | 2019-10-22 * |
| September | 2019-09-21 | 2019-10-29 |
| September | 2019-09-28 | 2019-11-05 * |
| October | 2019-10-05 | 2019-11-13 |
| October | 2019-10-12 | 2019-11-19 * |
| October | 2019-10-19 | 2019-11-26 |
| October | 2019-10-26 | 2019-12-03 * |
| November | 2019-11-02 | 2019-12-10 |
| November | 2019-11-09 | 2019-12-17 * |
| November | 2019-11-16 | 2019-12-24 |
| November | 2019-11-23 | 2019-12-31 * |
| November | 2019-11-30 | 2020-01-07 * |
| December | 2019-12-07 | 2020-01-14 |
| December | 2019-12-14 | 2020-01-21 * |
| December | 2019-12-21 | 2020-01-28 |
| December | 2019-12-28 | 2020-02-04 |